57

INDIAN HISTORY

57

(IN TAMIL)

FOR FORM III AND STANDARD VIII

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - JAN 1943
MADRAS

BY
M. SANJEEVI PILLAI, B.A., L.T.
AND
N. KRISHNA IYER,
St. Xavier's College, Palamcottah.

2808

A. V. D. PACKIAM PILLAI
TIRUNELVELI : : TUTICORIN

Price As. 10

இந்து தேச சரித்திரம்

மூன்றும் பாரம் - எட்டாம் வகுப்பு

954

ஆசிரியர்கள் :

M. சஞ்சீவி பிள்ளை, B. A., L. T.,

AND

N. கிருஷ்ண ஐயர்

அர்ச் சவேரியார் காலேஜ், பாளையங்கோட்டை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 JAN 1943
MADRAS

பதிப்பாளர் :

A. V. D. பாக்கியம் பிள்ளை

திருநெல்வேலி ஜங். : : தூத்துக்குடி

காபிரைட்டு] 1942 [விலை அணா, 10

முதற்பதிப்பு, 1942

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 JAN 1943
MADRAS

முகவுரை

மாணவர்கள் உண்மை அறிவும், தேசாபிமானமும் உள்ள வர்களாவதற்குத் தேச சரித்திர அறிவு மிகவும் அவசியமானது. ஆகவே, புராதனமான நமது தேசத்தில் நீண்ட காலமாய் வசித்து வந்த மக்களின் வாழ்க்கை, நாகரிகம், கலை வளர்ச்சி, அரசியல் முறை ஆகியவற்றை நம் மாணவர்கள் படித்து, நமது நாட்டின் பண்டைப் பெருமையையும், அதில் நாளடைவில் ஏற்பட்ட மாறு தல்களையும் உணர்ந்து, சிறந்த தேச பக்தியுள்ளவர்களாக வேண் டும் என்னும் நோக்கத்துடன் இளமையிலேயே மாணவர்களுக்குத் தேச சரித்திர அறிவைப் புகட்ட அரசாங்கத்தார் திட்டம் வகுத் திருக்கின்றனர்.

சென்னைக் கல்வி இலாக்கா அதிகாரிகளால் புதிதாக வெளியி டப்பட்டிருக்கிற சரித்திர பாடத் திட்டத்தை அனுசரித்து, இப் புத்தகம் மூன்றும் பாரத்திற்காக (எட்டாம் வகுப்புக்கும்) எழுதப் பட்டுள்ளது. இப்புத்தகத்திலுள்ள பாடங்கள் மாணவர்கள் நம் நாட்டுச் சரித்திர உண்மைகளை உற்சாகத்துடன் படித்துணரும்படி எளிய நடையில், சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டிருக் கின்றன. ஒவ்வொரு முக்கிய விஷயத்தையும் விளக்கப் பொருத்த மான இடங்களில் உருவப் படங்களும், தேசப் படங்களும் சேர்க் கப்பட்டிருக்கின்றன. மாணவர்கள் விஷயங்களைக் கற்று அப்பியா சம் செய்வதற்குத் தகுதியான கேள்விகள் ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இப்புத்தகத்தைப் பள்ளிக்கூடங்களில் பாட புத்தகமாக வைத்து ஆதரவளிக்கும்படி ஆசிரியர்களையும், கல்வி இலாக்கா அதி காரிகளையும் வேண்டிக்கொள்ளுகிறோம்.

M. சஞ்சீவி பிள்ளை

N. கிருஷ்ண ஐயர்

பொருளடக்கம்

பாடம்		பக்கம்
1.	ஆங்கிலேய ஆட்சி இந்தியாவில் நிலைபெறுதல் ...	1
2.	ஆம்ஹர்ஸ்ட் பிரபுவும், முதல் பர்மா யுத்தமும் ...	13
3.	வில்லியம் பெண்டிங்கு பிரபுவும், ராஜா ராம் மோஹன்ராயும் ...	15
4.	ஆக்லண்டு பிரபுவும், எல்லன்பரோ பிரபுவும் ...	22
5.	ஹார்டிஞ்சு பிரபுவும், சீக்கிய யுத்தங்களும் ...	27
6.	டல்ஹௌஸி பிரபு ...	30
7.	கானிங்கு பிரபுவும், சிப்பாய் கலகமும் ...	38
8.	விக்டோரியா மகாராணியாரின் சாஸனம் ...	46
9.	இந்தியாவில் ஆங்கில அரசர்களின் நேர் ஆட்சி கானிங்கு பிரபு—முதல் வைஸ்ராய் ...	49
10.	மேயோ பிரபுவும், பொருளாதாரச் சீர்திருத்தங்களும்	52
11.	லிட்டன் பிரபுவும், இரண்டாம் ஆப்கானிய யுத்தமும்	56
12.	ரிப்பன் பிரபுவும், ஸ்தல சுய ஆட்சியும் ...	59
13.	டப்ரின் பிரபுவும், தேசீயக் காங்கிரசும் ...	62
14.	கர்ஸன் பிரபுவும், சீர்திருத்தத் திட்டங்களும் ...	65
15.	மிண்டோ-மார்லி சீர்திருத்தங்கள் ...	71
16.	இந்தியாவும், ஐரோப்பிய மகா யுத்தமும் ...	75
17.	மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் ...	82
18.	இந்திய தேசீய இயக்கமும், மகாத்துமா காந்தியும் ...	89
19.	சைமன் கமிஷனும், வட்ட மேஜை மகா நாடுகளும் ...	97
20.	1935-ஆம் வருஷத்திய இந்திய அரசியல் சட்டம் ...	104
21.	முக்கிய நிகழ்ச்சிகள் ...	113

இந்து தேச சரித்திரம்

1. ஆங்கிலேய ஆட்சி இந்தியாவில் நிலை பெறுதல்

கி. பி. **1600**ல் ஆங்கிலேய ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டது: இங்கிலாந்து தேசத்து மகாராணியாராய் இருந்த **எலிஸபெத்**தின் அனுமதி பெற்று ஆங்கிலேயர் '**கிழக்கிந்திய வர்த்தகக் கம்பெனி**' ஏற்படுத்திக்கொண்டு இந்தியாவில் வியாபாரம் செய்யத் தொடங்கினர். அவர்களைப் போலவே இந்தியாவில் வியாபாரம் செய்து வந்த பிரெஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயரை இந்தியாவை விட்டுத் துரத்திவிட எண்ணினார்கள். சுமார் இருபது வருட காலம் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் கர்நாடகத்தில் யுத்தங்கள் நடந்தன. **இராபர்ட்டுக் கிளைவ்** என்ற ஆங்கிலேய வீரர் பிரெஞ்சுக்காரர்களைத் தோற்கடித்து, கர்நாடகத்தில் ஆங்கிலேயரின் அதிகாரத்தை நிலை நாட்டினார். கர்நாடக நவாபான முகம்மது அலியும், ஹைதராபாது நிஜாமான ஸலபத்ஜங்கும் ஆங்கிலேயருடன் நட்புக்கொண்டு அவர்கள் இஷ்டப் பிரகாரம் நடந்துவந்தார்கள். வட சர்க்கார்ப் பிரதேசமும் அவர்கள் ஆட்சியில் வந்தது. வங்காளத்தில் கிளைவ் சிராஜ உத்தௌலாவைப் **பிளாஸிச்** சண்டையில் வென்று மீர்ஜாபரை நவாபாகச் செய்தார். அதனால், வங்காளத்தில் ஆங்கிலேயரின் கௌரவமும் அதிகாரமும் அதிகரித்தன. **பக்ஸார்ச்** சண்டையில் வங்காள நவாபு, அயோத்தி நவாபு, ஷா ஆலம் சக்கரவர்த்தி ஆகிய

மூவரும் தோற்றுப் போகவே, **அலஹபாது உடன்படிக்கை** ஏற்பட்டது. அதன் பயனாக ஆங்கிலேயர் இந்தியாவில் வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா மாகாணங்களில் வரி வசூல் செய்யும் அதிகாரம் பெற்று, அம்மாகாணங்களை ஆட்சி புரியலாயினர். வங்காளக் கவர்னரான கிளைவ் இரட்டை ஆட்சி முறையை ஏற்படுத்தி, ஆங்கிலேயர் நாட்டை ஆளும்படி ஏற்பாடு செய்தார்.

வாரன் ஹேஸ்டிங்ஸ் (கி. பி. 1772-85): கிளைவுக்குப் பிறகு வங்காளக் கவர்னராக நியமிக்கப்பட்ட வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆங்கிலேய சாம்ராஜ்யத்தைப் பலப்படுத்தினர். கிளைவ் ஏற்படுத்தின இரட்டை ஆட்சி முறை பலவிதமான தீங்குகளுக்குக் காரணமாயிருந்ததால், ஹேஸ்டிங்ஸ் அதை ஒழித்துவிட்டுக் கம்பெனியாரே நேரில் நாட்டை ஆளும்படி ஏற்பாடு செய்தார். வரிவசூல் செய்வதற்கும் நியாய விசாரணை செய்வதற்கும் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஆங்கிலேய கலெக்டர்கள் நியமிக்கப்பட்டார்கள். ஜில்லாக்களின் வரி வசூலை மேற்பார்த்து வருவதற்காகக் கல்கத்தாவில் 'போர்ட் ஆப் ரெவினியூ' என்னும் சபை ஏற்படுத்தப்பட்டது. ஜில்லாக் கலெக்டர்களின் தீர்ப்புக்களில் திருப்தியடையாதவர்கள், ஸிவில், கிரிமினல் வழக்குகளில் அப்பீல் செய்து நீதிபெறுவதற்காகக் கல்கத்தாவில் இரண்டு அப்பீல் கோர்ட்டுகள் ஏற்படுத்தப்பட்டன. இந்து, முகம்மதிய சட்டங்களை நன்கு தெரிந்தவர்கள் அவர்களுக்கு உதவி செய்ய நியமிக்கப்பட்டார்கள். இவ்விதமாக ஹேஸ்டிங்ஸ் பல ஏற்பாடுகளைச் செய்து, துரைத்தனத்தைச் சீர்திருத்தினர். தவிர, அவர் பல சிக்கன முறைகளையும் கையாண்டு, கம்பெனியாரின்

வாரன்ஹேஷ்டிங்ஸ்



வாரன் ஹேஸ்டிங்ஸ் காலத்திய இந்தியா 1785.

பணக்கஷ்டத்தைத் தீர்க்க முயற்சி செய்தார். ஆயினும், கம்பெனியாரின்பண நெருக்கடி தீரவில்லை. ஆகவே, ஆங்கில பார்லிமெண்டு சபையார் முதன்முதலாகக் (கி. பி. 1773ல்) கம்பெனியின் நிர்வாக விஷயத்தில் தலையிட்டு **ரெகுலேட்டிங் ஆக்டு** (ஒழுங்குமுறைச்சட்டம்) என்றசட்டத்தை நிருபணம்செய்தார்கள். அதன் மூலம் கம்பெனி விவகாரங்களை மேற்பார்க்கும் அதிகாரம் பார்லிமெண்டாருக்கு ஏற்பட்டது.

ரெகுலேட்டிங் ஆக்டின்படி வங்காளக் கவர்னர் இந்தியாவில் கம்பெனியாருக்குச் சொந்தமான எல்லா இடங்களுக்கும் மேல் அதிபதியாக (கவர்னர் ஜெனரலாக) ஏற்படுத்தப்பட்டார். அதன்படி வங்காளக் கவர்னராயிருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் முதல் கவர்னர் ஜெனரல் ஆனார். பம்பாய், சென்னைக் கவர்னர்கள் கவர்னர் ஜெனரலின் அதிகாரத்திற்கு உட்பட்டார்கள்.

ஹேஸ்டிங்ஸ் காலத்தில் மைசூரை ஆண்டுவந்த ஹைதர் ஆலியும், மகாராஷ்டிரர்களும் பலமடைந்து, ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்குக் கீழ்ப்பட்ட நாடுகளைத் தாக்கி வந்தனர். அதனால், ஆங்கிலேயருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய நிலைமை ஏற்பட்டது. அதனால், ஹேஸ்டிங்ஸ் அவர்களுடன் போர் புரிந்து அவர்களை அடக்கினார். மகாராஷ்டிர யுத்தத்தின் முடிவில் ஆங்கிலேயருக்கு ஸால்ஸெட் கிடைத்தது. அவர்காலத்தில் ஆங்கிலேயருக்குப் புதிய நாடுகள் கிடைக்காவிட்டாலும், ஏற்கெனவே உள்ள ராஜ்யத்தை ஹேஸ்டிங்ஸ் காப்பாற்றி ஆங்கில அரசாட்சியை நிலைநாட்டினார். அவர் நடத்திய மைசூர், மகாராஷ்டிர யுத்தங்களால் அதிக பொருட்செலவு ஏற்பட்டது. எனவே, அவர் பணம் சேர்ப்பதற்குப் பல வழிகளைக் கையாள நேரிட்டது. அம்முறைகளைக் கையாண்டது சரியென்றெனக் கம்பெனி மேலதிகாரிகள் அவரைக் குறைகூறவே ஹேஸ்டிங்ஸ் வேலையை விட்டுவிட்டு இங்கிலாந்துக்குச் சென்றுவிட்டார்.

கம்பெனியார் சுதேச மன்னர்களின் விவகாரங்களில் அனுவசியமாகத் தலையிட்டு வீண் சண்டைகள் செய்கிறார்கள் என்று அபிப்பிராயப்பட்டு, பார்லிமெண்டு சபையார் கம்பெனியாரின் அதிகாரத்தை மேலும் குறைக்க எண்ணி, கி. பி. 1783ல் ஒரு சட்டம் இயற்றினர். அது இங்கிலாந்து தேசத்தில் பிரதம மந்திரியாராய் இருந்த **பிட்டு** என்பவரால் ஏற்படுத்தப்பட்டதால் அதற்குப் **பிட்டு இந்தியச் சட்டம்** எனப் பெயர் வழங்கி வருகிறது. அதன்படி இந்தியாவிலுள்ள கம்பெனியாரின் துரைத்தனக் காரியங்களை மேல் பார்வையிட இங்கிலாந்தில் ஆறு பார்லிமெண்டு அங்கத்தினர்கள் அடங்கிய **போர்ட் ஆப் கன்ட்ரோல்** என்னும் சபை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. பார்லிமெண்டாருடைய அனுமதியில்லாமல் கம்பெனியார் சுதேச மன்னர்களோடு சண்டை சமாதானங்கள் செய்துகொள்ளக்கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது.

காரன்வாலிஸ் பிரபு (கி. பி. 1786–93): காரன்வாலிஸ் பிரபு கி. பி. 1786ல் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாய் வந்தார். அவர் இந்தியாவுக்கு வரும்பொழுது சுதேச மன்னர்களின் விஷயங்களில் தலையிடக் கூடாதென்ற நிபந்தனையுடன் வந்தார். ஆனால், மைசூரை ஆண்டுவந்த திப்புச்சுல்தான் ஆங்கிலேயரின் நண்பரான திருவாங்கூர் அரசரை எதிர்க்கவே, ஆங்கிலேயர் திருவாங்கூர் அரசருக்கு உதவி செய்ய வேண்டியதாயிற்று. காரன்வாலிஸ் பிரபு நிஜாமையும், மகாராஷ்டிரரையும் தம்முடன் சேர்த்துக்கொண்டு, ஒரு பெரிய படையுடன் திப்புவை எதிர்த்தார். திப்புத் தோல்வியுற்று



காரன்வாலிஸ் பிரபு

ஸ்ரீரங்கப்பட்டினத்தில் ஆங்கிலேயருடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி திப்புத் தமது ராஜ்யத்தில் பாதியும், 3 கோடி ரூபாயும் ஆங்கிலேயருக்குக் கொடுக்க ஒப்புக் கொண்டார். தங்களுக்குக் கிடைத்த நாட்டை ஆங்கிலேயர் நிஜாமுடனும், மகாராஷ்டிரருடனும் பங்கிட்டுக்கொண்டதில் ஆங்கிலேயருக்கு மலையாளம், சேலம், மதுரை ஜில்லாக்கள் கிடைத்தன.

சாசுவத நிலவரி ஏற்பாடு: காரன்வாலிஸ் ஜில்லாக் கலெக்டர்களிடமிருந்து நியாய விசாரணை செய்யும் அதிகாரத்தை நீக்கி, ஜில்லா நீதிபதிகளிடம் ஒப்புவித்தார். அதுமுதல் கலெக்டர்கள் வரிவசூல் வேலையை மாத்திரம் கவனித்துவரலானார்கள். வங்காளத்தில் ஜமீந்தார்கள் நிலவரி வசூலித்துக் கலெக்டர்களிடம் செலுத்திவந்தார்கள். ஆனால், கலெக்டர்கள் பல இடங்களில் வரிவசூல் செய்யும் உரிமையை ஏலத்தில் விட்டு அதிக தொகை கொடுப்பவர்களுக்கே குத்தகைக்கு விட்டு வந்தனர். அதனால் ஒரு வருஷம் வரிவசூல் செய்த ஜமீந்தார் மறு வருஷமும் அந்த உரிமையை அடைவது நிச்சயமில்லாமலிருந்தது. அதனால், ஜமீந்தார்கள் குடிகளை வருத்தி அதிக தொகையை வசூலித்து வந்தார்களேயொழிய, நிலங்களை விருத்திக்குக் கொண்டுவரவில்லை; கம்பெனியாருக்கும் வரிப் பணத்தை ஒழுங்காகச் செலுத்தவில்லை.

காரன்வாலிஸ் வங்காளத்திலும் பீஹாரிலும் ஜமீந்தார்களையே நிலத்திற்குச் சொந்தக்காரர்களாகச் செய்து, அவர்கள் வருடந்தோறும் கம்பெனியாருக்குக் கொடுக்க வேண்டிய தொகையும் இவ்வளவென்று சாசுவதமாகத் திட்டஞ்செய்தார். நிலங்களின் வருமானம் ஏறினாலும் குறைந்தாலும், ஒரே வரிதான் ஜமீந்தார்கள் கொடுக்கவேண்டும் என்று ஏற்பட்டதால் ஜமீந்தார்கள் நிலங்களைச் செம்மையாகக் கவனித்துத் தங்களது வருமானத்தை அதிகப்படுத்திக்கொள்ளவேண்டிய

ஏற்பாடுகளைச் செய்து வந்தார்கள். கம்பெனியாருக்கும் முன் போலன்றி வரிப்பணம் ஒழுங்காக வசூலாயிற்று.

ஸர் ஜான் ஷோர் (கி. பி. 1793–98): காரன்வாலிஸுக்குப் பிறகு ஸர் ஜான் ஷோர் கவர்னர் ஜெனரலானர். அவர் சுதேச மன்னர்களின் விவகாரங்களில் தலையிடுவதில்லை என்ற கொள்கையைப் பின்பற்றினர். அதனல், ஆங்கிலேயருடைய பெருமையும், சுதேச மன்னர்கள் அவர்களிடம் கொண்டிருந்த நம்பிக்கையும் குறைந்தன. தவிரவும், பிரெஞ்சுக்காரர் இதுவே தக்க தருணமெனக் கருதிச் சுதேச மன்னர்களுடன் உறவாட ஆரம்பித்தனர்.

ஆங்கிலேயருடைய நண்பராகிய நிஜாம் நாட்டின்மீது மகாராஷ்டிரர் படையெடுத்த போது; நிஜாம் ஸர் ஜான் ஷோரைத தமக்கு உதவிசெய்யும்படி கேட்டார். ஆனல், ஷோர் மறுத்துவிட்டார். மகாராஷ்டிரர்கள் நிஜாமைத் தோற்கடித்து அவரிடமிருந்து மூன்று கோடி ரூபாயும் சில ஜில்லாக்களும் பெற்றுக்கொண்டார்கள். தமக்கு உதவி அளிக்க மறுத்த ஆங்கிலேயர்மீது மிக்க மனவருத்தமடைந்து நிஜாம் பிரெஞ்சுக் காரருடன் நட்புக்கொண்டு, அவர்களைக்கொண்டு தம் படையைப் பழக்கினர்.

ஆனல், ஷோர் அயோத்தி விவகாரங்களில் பிரவேசிக்கும்படி நேரிட்டது. ஸாடட் அலி என்பவரை அயோத்தி நவாபாக நியமித்தார். அதனல் கம்பெனியாருக்கு அலஹபாது பட்டினம் கிடைத்தது.

வெல்லெஸ்லி பிரபு (கி. பி. 1798 1805): கி. பி. 1798ல் வெல்லெஸ்லி பிரபு கவர்னர் ஜெனரலாய் வந்தார். அவர் காலத்தில் இந்தியாவில் ஆங்கில ஆட்சி மிக்க வலிமை அடைந்தது. அவர் ஏற்படுத்திய **உதவிச் சேனை ஏற்பாட்டி**னல் சுதேச மன்னர்களையெல்லாம் ஆங்கிலேயரின் அதிகாரத்திற்குள்ளடக்கி, இந்தியாவில் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை ஸ்தாபித்தார். வெல்வ

லெஸ்லி பிரபு இந்தியாவுக்கு வந்ததும் ஸர் ஜான் ஷோரின் **தலையிடாக் கொள்கையின்** விளைவுகளைக் கண்டார். ஆகையால், அவர் அக்கொள்கையை விட்டு, அதற்கு நேர்மாறான உதவிச் சேனை ஏற்பாட்டைக் கைக்கொண்டார். அதன் பிரகாரம் சுதேச மன்னர்கள் ஆங்கிலேயருடைய ஆதிக்கத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். தங்கள் தேசப் பாதுகாப்பிற்காக ஓர் ஆங்கிலேய சைனியத்தைத் தங்கள் நாட்டில் வைத்துக்கொள்ள வேண்டும். அப்படையின் செலவுக்காக வருடந்தோறும் ஒரு தொகையையாவது அல்லது நிரந்தரமாக நாட்டின் ஒரு பகுதியையாவது கொடுக்க வேண்டும். ஆங்கிலேயரைத் தவிர வேறெந்த ஐரோப்பியருடனும் சுதேச மன்னர்கள் சம்பந்தம் வைத்துக்கொள்ளக்கூடாது. ஆங்கிலேயருடைய அனுமதியின்றிச் சுதேச மன்னர்கள் தங்களுக்குள் சண்டை சமாதானம் முதலியவை செய்துகொள்ளக்கூடாது. ஒவ்வொரு சுதேச மன்னரும் தம்முடைய நாட்டில் ஓர் ஆங்கிலேய பிரதிநிதியை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

வெல்லெஸ்லி பிரபு

இந்த ஏற்பாட்டினால் இந்திய அரசர்கள் கம்பெனியின் ஏகாதிபத்தியத்தை ஒப்புக்கொண்டு, தங்கள் சுயாதீனத்தை இழந்தார்கள். ஆங்கிலேயருடைய ஆதிக்கமும் அதிகாரமும் அதிகரித்தன. ஹைதராபாதை ஆண்டு வந்த நிஜாமும், பரோடாவை ஆண்டு வந்த கெயிக்வாரும், பல ராஜபுத்திர மன்னர்களும் இந்த உதவிச் சேனை ஏற்பாட்டை ஒப்புக்கொண்டு ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்துகொண்டார்கள்.

மைசூர்ச் சுல்தானான திப்பு, பிரெஞ்சு தலைவரான நெப்போலியனுடனும், ஆப்கானிய அமீர் ஸாமன்ஷாவுடனும் உறவாடு

வதை விட்டு, அவரை உதவிச் சேனை உடன்படிக்கை செய்து கொள்ளும்படி வெல்லெஸ்லி கேட்டுக்கொண்டார். அவர் அதற்குச் சம்மதியாததால், வெல்லெஸ்லி பிரபு ஒரு சைனியத்தை மைசூருக்குஅனுப்பி,திப்புச்சுல்தானுடன்போர்புரிந்துஅவரைச் சண்டையில் கொன்றுர்.அதனுல் மைசூரில் பழைய இந்து அரச பரம்பரையைச் சேர்ந்த **கிருஷ்ண ராஜ உடையார்** என்னும் சிறுவர் அரசராக்கப்பட்டார். மைசூர் ராஜ்யத்தின் ஒரு பகுதியை ஆங்கிலேயரும் நிஜாமும் பங்கிட்டுக்கொண்டனர். அதனுல், ஆங்கிலேயருக்குக் கோயமுத்தூர், கர்நாடகம், வயநாடுஎன்னும் ஜில்லாக்கள் கிடைத்தன. நிஜாம் உதவிச் சேனை ஏற்பாட்டின்படி தம் நாட்டில் வைக்கப்பட்ட சேனையின் செலவுக்காகத் தமக்கு மூன்றும் நான்காம் மைசூர் யுத்தங்களில் கிடைத்த 'கொடை ஜில்லாக்களை' ஆங்கிலேயருக்கே கொடுத்துவிட்டார். பிறகு வெல்லெஸ்லி தஞ்சாவூர் ராஜ்யத்தையும், கர்நாடகத்தையும் ஆங்கில ஆட்சியில் சேர்த்துக்கொண்டு, அந்த நாடுகளின் அரச குடும்பத்தினருக்கு உபகாரச் சம்பளம் கொடுத்தார். இவ்வாறுக அவர் **சென்னை ராஜதானி** என்னும் மாகாணத்தை ஏற்படுத்தினுர்.

மகாராஷ்டிரத்தில் **நானுபர்னுவிஸ்** இறந்தபின் மகாராஷ்டிரத் தலைவர்களுக்குள் சச்சரவுகள் ஏற்பட்டன. இரண்டாம் பாஜிராவ் என்ற பீஷ்வாவுக்கும் ஹோல்காருக்கும் சண்டை ஏற்பட்டது. அதில் ஹோல்கார் வெற்றிபெற்றுர். ஆகவே, பீஷ்வா ஆங்கிலேயரின் உதவியை நாடினுர். வெல்லெஸ்லி பிரபு பீஷ்வாவை உதவிச்சேனை ஏற்பாட்டை ஒப்புக்கொள்ளச் செய்தார். ஆங்கிலேயருக்கும் ஸிந்தியா பான்ஸ்லே என்ற மகாராஷ்டிரத் தலைவருக்கும் நடந்த போர்களில் அஸ்ஸே, ஆர்காம் என்ற இடங்களில் மகாராஷ்டிரர் தோல்வியடைந்தனர். அவர்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி பான்ஸ்லே ஒரிஸ்ஸாவைக் கொடுத்தார். ஸிந்தியா டில்லி, ஆக்கிரா,

கங்கை யமுனை நதிகளுக்கிடையேயுள்ள பிரதேசம், ஆமது நகரம், புரோச்சு முதலியவற்றைக் கொடுத்தார். அயோத்தி நவாபு ஏற்கெனவே ஆங்கிலேயரின் பாதுகாப்பில் இருந்து வந்தார். வெல்லெஸ்லி பிரபு அவருடன் செய்துகொண்ட உடன்படிக்கையால் கோரா, அலஹாபாது, ரோஹில்கண்டு என்னும் பிரதேசங்கள் அங்கிலேயருக்குக் கிடைத்தன. அவர் சூரத்தையும் கைப்பற்றிக்கொண்டார். அவ்வாறு கிளைவினால் ஏற்படுத்தப்பட்ட ஆங்கிலேய ராஜ்யம், வெல்லெஸ்லி பிரபு காலத்தில் மிக்க வலிமையடைந்து, பெரிய சாம்ராஜ்யம் ஆயிற்று.

மிண்டோ பிரபு (கி. பி. 1807—13) : கி. பி. 1807-ஆம் ஆண்டில் மிண்டோ பிரபு கவர்னர் ஜெனரலாய் இந்தியாவுக்கு வந்தார். அவர் பண்டல்கண்டு, நாகப்பூர் முதலிய இடங்களில் ஏற்பட்ட கலகங்களை அடக்கி, நாட்டில் அமைதியை நிலை நாட்டினார். மிண்டோ பிரபு காலத்தில் பஞ்சாபில் ரஞ்சித்சிங்கு சிறப்பாக ஆட்சிசெய்து வந்தார். அவர் தலைமையின்கீழ்ச்சீக்கியர்கள் மிகவும் பலமடைந்திருந்தார்கள். அவர் ஆப்கானியரிடமிருந்து **பிஷாவரைக்** கைப்பற்றிக்கொண்டார். பின்பு ஸட்லெஜ் நதிக்கும் யமுனை நதிக்கும் இடையேயுள்ள பாகத்தை வெல்ல முயன்றார். அங்கிருந்த சிற்றரசர்கள் ஆங்கிலேயரின் உதவியை நாடினார்கள். மிண்டோ பிரபு கி. பி. 1809ல் அமிர்தசரஸில் ரஞ்சித் சிங்குடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி ரஞ்சித்சிங்கு ஸட்லெஜ் நதிக்குக் கிழக்கேயுள்ள நாட்டில் தாம் பிரவேசிப்பதில்லை என்று ஒப்புக்கொண்டார்.

அப்பொழுது பிரெஞ்சு தலைவரான நெப்போலியனுக்கும் ஆங்கிலேயருக்கும் ஐரோப்பாவில் கடும்போர் நடந்து கொண்டிருந்தது. பிரெஞ்சுக்காரர்கள் ருஷியாவுடன் நட்புச் செய்துகொண்டு, இந்தியாவின்மீது படையெடுத்து வரக்கூடுமென்ற பயமிருந்தது. ஆகையால், மிண்டோ பிரபு, இந்தியாவின் வடமேற்குப் பாகத்திலுள்ள அரசர்களின் நட்பை நாடி

னுர். அவர் பாரசீகமன்னரோடும், ஆப்கானிய அரசரோடும், சிந்துவில் ஆண்டு வந்த அமீரோடும் சிநேக உடன்படிக்கைகள் செய்துகொண்டார்.

ஹேஸ்டிங்ஸ் பிரபு (கி. பி. 1813—23): அவர் கூர்க்கர்களோடும், பிண்டாரிகளோடும், மகாராஷ்டிரர்களோடும் யுத்தங்கள் செய்து வெற்றி பெற்று, இந்தியாவில் ஆங்கிலேய ராஜ்யத்தைப் பலப்படுத்தினுர்.

நேப்பாள யுத்தம் (கி. பி. 1814—16): இமயமலைச் சாரலில் உள்ள நேப்பாள தேசத்தில் **கூர்க்கர்** என்னும் ஜாதியார் வசித்து வந்தனர். அவர்கள் புஜபல பராக்கிரமம்பொருந்தியவர்கள். நேப்பாளதேசத்து அரசர் அயோத்திக்கு அருகில் கம்பெனியாருக்குச் சொந்தமான சில நாடுகளைப் பிடித்துக்கொண்டார். அதனுல், ஹேஸ்டிங்ஸ் ஒரு பெரிய சேனையை நான்கு பிரிவுகளாகப் பிரித்து அனுப்பினுர். நேப்பாள தேசம் காடுகள் அடர்ந்த மலைப்பிரதேசமாகையால், முதலில் ஆங்கிலேயருக்கு வெற்றி ஏற்படவில்லை. ஆனுல், ஜெனரல் ஆக்டர்லோனி என்பவர் நடத்திச் சென்ற சேனை காடுகளைக் கடந்து கூர்க்கர்களோடு சண்டை செய்து வெற்றி பெற்றது. கி. பி. 1816ல் **ஸிகௌலி** என்னுமிடத்தில் கூர்க்கர்கள் ஆங்கிலேயருடன் சமாதானம் செய்துகொண்டார்கள். அதன்படி ஆங்கிலேயருக்கு ஸிம்லா, நைனிடால், முஸௌரி என்னும் இடங்கள் உள்ள பிரதேசம் கிடைத்தது. நேப்பாள அரசர் தம் தலைநகரான **காட்மாண்டு**வில் ஓர் ஆங்கிலப் பிரதிநிதியை (ரெசிடெண்டு) வைத்துக்கொள்ள ஒப்புக்கொண்டார். அது முதல் கூர்க்கர்கள் ஆங்கிலேயரோடு நண்பர்களாகவே இருந்து வருகிருர்கள். அவர்களில் அநேகர் இந்திய இராணுவத்தில் சேர்ந்து, சிறந்த போர் வீரர்களாயும், தளகர்த்தர்களாயும் இருந்து வருகிருர்கள்.

பிண்டாரிகள்: சுதேச மன்னர்களின் இராணுவங்களிலிருந்து நீக்கப்பட்டவர்களும், கொலை களவு முதலிய குற்றங்களைச் செய்தவர்களுமாகிய பிண்டாரிகள்கூட்டமாய்ச்சேர்ந்து ஜனங்களைக் கொள்ளையடித்தும், கொலை செய்தும் வந்தார்கள். ஹேஸ்டிங்ஸ் ஒரு பெரிய சேனையை நாலு பிரிவுகளாகப் பிரித்து, பிண்டாரிகளை நாநா பக்கத்திலும் சூழ்ந்துகொள்ளும்படி செய்தார். பிண்டாரிகள் தப்பியோட வழியில்லாமல் சரணடைந்தார்கள். அவர்களுடைய தலைவர்களில் ஒருவனான சிட்டு மரணமடைந்தான். மற்றொரு தலைவனான **கரீம்கான்** ஆங்கிலேயரைச் சரணமடைந்து, ராஜபுதனத்தில் **டாங்கு** என்னும் நாட்டிற்கு நவாபாக்கப்பட்டான். கி. பி. 1818க்குள் பிண்டாரிகள் இருந்தவிடம் தெரியாமல் போய்விட்டார்கள்.

கடைசி மகாராஷ்டிர யுத்தம் (கி. பி. 1818): ஆங்கிலேயப் படைகள் பிண்டாரிகளோடு யுத்தம் செய்துகொண்டிருந்த பொழுது பீஷ்வா பாஜிராவ் ஆங்கிலேயருக்கு விரோதமாகக் கிளம்பினர். தாம் ஆங்கிலேயருடன் செய்துகொண்டிருந்த உதவிச் சேனை உடன்படிக்கையிலிருந்து விடுபட்டுச் சுயாதீனம் அடையவேண்டுமென்று அவர் விரும்பினர். ஹேஸ்டிங்ஸ் **கர்கீ** என்னுமிடத்தில், பீஷ்வாவைத் தோற்கடித்தார். பீஷ்வா பல இடங்களிலும் ஓடித்திரிந்து, கடைசியில் ஆங்கிலேயரிடம் சரணடைந்தார். ஹேஸ்டிங்ஸ் அவருடைய நாட்டை ஆங்கிலேய ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டு, அவருக்கு வருஷத்திற்கு எட்டு லக்ஷம் ரூபாய் உபகாரச் சம்பளம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார்.

சிந்தியா, ஹோல்கார், பான்ஸ்லே ஆகிய மூன்று மகாராஷ்டிரத் தலைவர்களும் ஆங்கிலேயருடன் போர் புரிந்து தோல்வியுற்றார்கள். அவர்களுடைய நாடுகளில் பெரும்பாகம் ஆங்கிலேய சாம்ராஜ்யத்துடன் இணைக்கப்பட்டது.

இவ்வாறு மகாராஷ்டிர ராஜ்யம் அழிந்தது. பீஷ்வா ஆண்டு வந்த நாடு முழுமையும் பம்பாய் ராஜதானியில் சேர்க்கப்பட்டது. ஹேஸ்டிங்ஸ் காலத்தில் நடந்த மற்ருெரு முக்கிய விசேஷம் (கி.பி.1819ல்) மலேயாத்தீபகற்பத்தின் தென்கோடியிலுள்ள முக்கியமான வழித்துறையாகிய **சிங்கப்பூர்** கைப்பற்றப்பட்டதேயாகும். வெல்லெஸ்லி இந்தியாவில் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு அடி கோலினர். ஹேஸ்டிங்ஸ் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை இந்தியா முழுவதிலும் நிலே நாட்டினர். இவர் காலத்தில் கல்கத்தாவில் ஒரு கலாசாலே ஏற்படுத்தப்பட்டது. தாய்மொழியில் வர்த்தமானப் பத்திரிகைகளும் நடைபெற ஆரம்பித்தன.

கேள்விகள்:

1. முதன்முதலாக இந்தியாவில் ஆங்கிலேய ராஜ்யம் யாரால் ஸ்தாபிக்கப்பட்டது? எந்த உடன்படிக்கையின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டது?
2. வாரன் ஹேஸ்டிங்ஸ் செய்த முக்கியமான சீர்திருத்தங்கள் எவை?
3. ரெகுலேட்டிங் ஆக்டின் முக்கிய ஷரத்துக்கள் எவை? அவற்ருல் கம்பெனி அரசியலில் என்ன மாறுதல் ஏற்பட்டது?
4. வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆங்கிலேய ராஜ்யத்தை எவ்வாறு பலப்படுத்தினர்?
5. சாசுவத நிலவரி ஏற்பாடு என்பது என்ன? அதை ஏற்படுத்தியவர் யார்?
6. காரன்வாலிஸ் பிரபுவின் காலத்தில் ஆங்கிலேயருக்குக் கிடைத்த நாடுகள் எவை? அவை எந்த யுத்தத்தின் முடிவில் கிடைத்தன?
7. 'தலேயிடாக் கொள்கை' என்பது என்ன? அதைத் தீவிரமாக அனுஷ்டித்தவர் யார்? அதனுல் ஏற்பட்ட தீமைகள் எவை?

8. வெல்லெஸ்லியின் நோக்கங்கள் யாவை? அந்த நோக்கத்தை நிறைவேற்ற அவர் கையாண்ட முறை யாது?
9. உதவிச் சேனை ஏற்பாட்டினால் சுதேச மன்னர்களுக்குக் கிடைத்த இலாப நஷ்டம் யாவை?
10. வெல்லெஸ்லி காலத்தில் உதவிச் சேனை ஏற்பாட்டிற்கு இணங்கினவர் யாவர்?
11. சென்னை ராஜதானியிலுள்ள ஜில்லாக்கள் ஆங்கிலேயருக்கு எவ்விதம் கிடைத்தன?
12. இரண்டாவது மூன்றாவது மகாராஷ்டிர யுத்தங்களின் மூலமாக ஆங்கிலேயருக்குக் கிடைத்த நாடுகள் யாவை?
13. மிண்டோ பிரபு எந்த மன்னர்களுடன் உடன்படிக்கை செய்துகொண்டார்? ஏன்?
14. பிண்டாரிகள் யார்? அவர்கள் யாரால் அடக்கப்பட்டார்கள்?
15. நேப்பாள யுத்தத்தால் ஆங்கிலேயருக்கு ஏற்பட்ட இலாபம் என்ன?
16. கடைசி மகாராஷ்டிர யுத்தம் எவ்வாறு ஏற்பட்டது? அதன் முடிவு என்ன?

---

2. ஆம்ஹர்ஸ்ட் பிரபுவும் முதல் பர்மா யுத்தமும்

ஹேஸ்டிங்ஸ் பிரபுவுக்குப் பின் ஆம்ஹர்ஸ்ட் பிரபு கி. பி. 1823 முதல் ஐந்து வருஷ காலம் கவர்னர் ஜெனரலாய் இருந்தார். அவர் காலத்திலேதான் முதல் பர்மா யுத்தம் ஏற்பட்டது. பர்மா அரசர் பலமடைந்து முதலில் தெனஸரீம் என்ற நாட்டையும் **அரக்கான்** நாட்டையும் கைப்பற்றினர்; அதன் பிறகு வங்காளத்தில் ஆங்கிலேயருக்குச் சொந்தமான சில நாடுகளைக் கைப்பற்ற முயன்றனர். மேலும், பர்மியர் கைப்பற்றிய நாடுகளிலிருந்து சிலர் ஆங்கிலேயருக்குச் சொந்தமான சிட்டகாங்கு என்னும் இடத்தில் குடியேறினர். பர்மா அரசர் அவர்

களைத் திரும்ப அனுப்பும்படி கேட்டார். அதற்கு ஆங்கிலேயர் மறுக்கவே, **அஸ்ஸாம், மணிப்பூர்** முதலிய இடங்களின்மேல் பர்மியர் படையெடுத்து, அவைகளைக் கைப்பற்றினர். மேலும், பர்மிய சைனியம் ஆங்கிலேயர் வசமிருந்த **ஷாபுரி** என்னும் தீவைக் கைப்பற்றி, அங்கிருந்த ஆங்கிலேய போர் வீரர்களில் சிலரையும் கொன்றுவிட்டது. எனவே, ஆம்ஹர்ஸ்ட் பிரபு அஸ்ஸாம் வழியாக ஒரு சைனியத்தையும், இரங்கூனுக்கு ஒரு கப்பல் படையையும் அனுப்புவித்தார். **ஆர்க்கியால்டு காம்பெல்** என்னும் ஆங்கிலேய தளகர்த்தர் இரங்கூனைக் கைப்பற்றிக் கொண்டு, பர்மாவின் தலைநகரான ஆவாவை நோக்கிச் சென்றார். பர்மிய தளகர்த்தரான **மஹாபந்துலா** யுத்தத்தில் இறந்து போகவே, பர்மிய அரசர் **யாண்டபூ** என்னுமிடத்தில் 1826ல் ஆங்கிலேயரோடு சமாதான உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி ஆங்கிலேயருக்கு **அஸ்ஸாம், அரக்கான், தெனஸ்ரீம்** என்னும் மாகாணங்கள் கிடைத்தன. பர்மாவின் தலைநகரில் ஓர் ஆங்கிலேய பிரதிநிதி வைக்கப்பட்டார். ஆகவே, ஆங்கிலேயரின் ஆதிக்கம் பர்மாவிலும் பரவியது.

கி. பி. 1826ல் பரத்புரம் ராஜ்யத்தின் பட்டத்தைக் குறித்து இருவர் சண்டையிட்டுக்கொண்டனர். அவர்களில் ஒருவர் ஆங்கிலேயரின் உதவியை நாடினர். ஆம்ஹர்ஸ்ட் பிரபு ஒரு பீரங்கிப் படையை அனுப்பி, அதுவரையில் எவராலும் கைப்பற்ற முடியாமலிருந்த பரத்புரக் கோட்டையைக் குண்டுகளால் தகர்த்தெறிந்து கைப்பற்றினர்.

கேள்விகள் :

1. முதல் பர்மா யுத்தத்தின் காரணங்கள் எவை ?
2. அது எந்த உடன்படிக்கையால் முடிவடைந்தது ? அதனால் கம்பெனியாருக்குக் கிடைத்த நாடுகள் எவை ?

3. வில்லியம் பெண்டிங்கு பிரபுவும் ராஜா ராம்மோஹன் ராயும்
(கி. பி. 1828-35)

ஆம்ஹர்ஸ்ட் பிரபுவுக்குப் பின் வில்லியம் பெண்டிங்கு கவர்னர் ஜெனரல் ஆனார். அவர் முன்பு சென்னைக் கவர்னராய் இருந்தவர். ஆகையால், இந்திய விஷயங்களை நன்கு அறிந்திருந்தார். அவர் பதவியை ஏற்றுக்கொண்ட பொழுது கம்பெனியாரின் ஏகாதிபத்தியம் அநேகமாக இந்தியா முழுவதும் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அவர் தலையிடாக் கொள்கையைக் கூடியமட்டில் பின்பற்றி வந்தார். அவர் சிந்து நாட்டு அமீர்களுடனும், பஞ்சாபு மன்னர் ரஞ்சித்சிங்குடனும் உடன்படிக்கைகள் செய்து கொண்டு எல்லைப்புறத்தில் அமைதியை நிலைநாட்டினார். அவர் காலத்தில் நாடு எங்கும் சமாதானம் நிலவியதால், பெண்டிங்கு பிரபு ஜனங்களின் நன்மையைக் கருதிப் பல சீர்திருத்தங்களைச் செய்து, சட்டங்கள் இயற்றினார்.

வில்லியம் பெண்டிங்கு

மைசூர் குடகு ராஜ்யங்களைச் சேர்த்தல்: பெண்டிங்கு பிரபு சுதேச மன்னர்களின் விஷயங்களில் தலையிட்டுக்கொள்ளுவதில் விருப்பமில்லாதவர். எனினும், மைசூர் அரசரான கிருஷ்ணராஜ உடையார் ஆளும் திறமையில்லாமல் குடிகளை மிகவும் துன்புறுத்தியதால், ராஜ்யத்தில் கலகங்கள் ஏற்பட்டன. பெண்டிங்கு ஆங்கிலேய சைனியத்தைக் கொண்டு கலகத்தை அடக்கி, அமைதியை ஏற்படுத்தினார். பின்பு கிருஷ்ணராஜ உடையாரைப் பட்டத்தினின்றும் நீக்கிவிட்டு, கி. பி. 1832ல் அந்நாட்டை

ஆங்கிலேய ஆட்சிக்கு உட்படுத்திக்கொண்டார். அது முதல் மைசூர் ராஜ்யம் 50 வருஷகாலம் ஆங்கிலேய ஆளுகைக்குட்பட்டிருந்தது. கி. பி. 1881ல் மைசூர் **சாமராஜ உடையார்** என்பவரிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டது. இப்பொழுதும் மைசூரில் அந்த உடையார் வமிசத்தினரே சிறப்புடன் ஆண்டு வருகின்றனர்.

குடகு நாட்டு அரசரான **வீரராஜர்** குடிகளைத் துன்புறுத்திக் கொடுங்கோலாட்சி புரிந்துவந்தார். ஆனால்ஜனங்கள் அரசருக்கு விரோதமாகக் கிளம்பி ஆங்கிலேயரைத் தங்களுக்கு உதவி புரியும்படி வேண்டிக்கொண்டனர். ஆகவே, கி. பி. 1834-ஆம் வருஷம் பெண்டிங்கு பிரபு ஓர் ஆங்கிலேயப் படையை அனுப்பிக் குடகின் தலைநகராகிய **மெர்க்காரா**வைப் பிடித்துக்கொண்டார். குடகு நாடு ஆங்கிலேய ராஜ்யத்துடன் சேர்த்துக்கொள்ளப் பட்டது. **வீரராஜர்** உபகாரச் சம்பளம் பெற்று இங்கிலாந்து தேசத்துக்குச் சென்றுவிட்டார்.

பெண்டிங்கு பிரபு செய்த சீர்திருத்தங்கள்: பெண்டிங்கு பிரபு சமூக சம்பந்தமாகவும், அரசியல் சம்பந்தமாகவும், கல்வி சம்பந்தமாகவும் பல சீர்திருத்தங்களைச் செய்தார்.

சமூகச் சீர்திருத்தம்: பெண்டிங்கு பிரபு செய்த சீர்திருத்தங்களில் முக்கியமானது **சககமனம்** அல்லது **உடன்கட்டையேறுதல்** என்னும் வழக்கத்தை ஒழித்ததேயாகும். கணவனே தெய்வமென்றும், கணவன் இறந்தபின் விதவையாய் உயிர் வாழ்வது பாவமென்றும் கருதி வந்த இந்து ஸ்திரீகள், தங்கள் கணவர் இறந்ததும் அவருடைய உடலைத் தகனஞ் செய்யும்பொழுது தாங்களும் அந்த நெருப்பிலேயே விழுந்து இறப்பது வழக்கமாய் இருந்தது. அவ்விதம் உடன்கட்டை ஏறும் ஸ்திரீகள் தங்கள் கணவரிடம் கொண்டிருந்த அன்பின் மிகுதியினால் அவ்வாறு செய்து வந்த போதிலும், அநேகர் அவ்வாறு செய்யத் துணியாமலோ, அல்லது இஷ்டமின்றியோ, இருந்து

வந்தனர். இருப்பினும், அவர்களுடைய உறவினர்கள் அவர்களைப் பலவந்தப்படுத்தி உடன்கட்டை ஏறும்படி செய்து வந்தார்கள். இந்தக் கொடிய பழக்கத்தை நிறுத்துவதற்கு அக்பர் சக்கரவர்த்தியார் முயன்றார். அவருடைய முயற்சியின் பயனாக இந்தப் பழக்கம் சற்றுக் குறைவுபடத் தலைப்பட்டதேயன்றி, முற்றும் ஒழிந்துபோகவில்லை. பெண்டிங்கு பிரபு இப்பழக்கத்தைஒழிக்கத்தீர்மானித்தார். அவர் பல பிரபல இந்தியர்களைக் கலந்தாலோசித்து, கி. பி. 1829ல் சககமனம் செய்வது குற்றம் என்றும், அதை உடனிருந்து செய்து வைப்பவர்கள் மரண தண்டனைக்குள்ளாவார்கள் என்றும் சட்டங்களைப் பிறப்பித்தார். அதன் பயனாக அக்கொடிய பழக்கம் அடியோடு தொலைந்து போயிற்று. பெண்டிங்கு பிரபு செய்த சீர்திருத்தங்களில் அவருக்கு **ராஜா ராம்மோஹன்ராய்** என்னும் வங்காளக் கனவான் ஓர் ஒப்பற்ற துணைவராய் இருந்தார்.

தக்கர்களை ஒழித்தது : பெண்டிங்கு பிரபு மற்றும்ஒரு சிறந்த நன்மையையும் செய்தார். அவர் காலத்தில் **தக்கர்கள்** என்னும் கூட்டத்தார் பிண்டாரிகளைப் போல நாட்டின் பல இடங்களிலும் மறைந்திருந்து வழிப்போக்கர்களைக் கொள்ளையடித்தும் கொன்றும் நாட்டின் அமைதியைக் கெடுத்து வந்தார்கள். பெண்டிங்கு பிரபு அந்தக் கொள்ளைக் கூட்டத்தாரை அழிக்க ஒரு சேனையை அனுப்பினார். அச்சேனை தக்கர்களைத் தேடிப் பிடித்து, அவர்களைக் கொன்று, நாட்டில் அமைதியை ஏற்படுத்திற்று.

கி. பி. 1833ல் வர்த்தக சங்கத்தின் சாஸனம் புதுப்பிக்கப் பட்டது. அதனால், கம்பெனியார் இனி வியாபாரம் செய்யக் கூடாது என்று உத்தரவிடப்பட்டது. இங்கிலாந்திலிருந்தே யாவும் இந்தியாவிலும், கிழக்கிந்தியத் தீவுகளிலும் வர்த்தகம் செய்யலாம் என்று ஏற்பட்டது. அதனால், கம்பெனியாருக்கு ராஜ்ய பரிபாலனம் ஒன்றேவேலையாயிற்று. வங்காளக் கவர்னர்

ஜெனரல் இந்தியா கவர்னர் ஜெனரல் என்ற பெயர் பெற்றூர். கவர்னர் ஜெனரலின் சபையில் சட்டங்கள் இயற்றுவதற்காக ஓர் அங்கத்தினர் சேர்க்கப்பட்டார். அதன்படி இந்தியாவின் முதல் சட்ட அங்கத்தினராக **மெக்காலே பிரபு** நியமனம் செய்யப்பட்டார். இந்தியர்களே அவர்களுடைய ஜாதி மத வித்தியாசமில்லாமல், அவர்களுடைய திறமைக்கும் படிப்புக்கும் தகுந்தபடி எல்லா உத்தியோகங்களிலும் நியமனம் செய்யலாம் என்பது விதிக்கப்பட்டது.

கல்வி முறை ஏற்பாடு : பெண்டிங்குபிரபு தமது மந்திராலோசனை சபையின் புதிய சட்ட அங்கத்தினரான மெக்காலே என்பவரின் ஆலோசனைப் பிரகாரம் ஆங்கிலேய பாஷையை ராஜாங்க பாஷையாக ஏற்படுத்தினூர். இந்தியர்களுக்கு ஆங்கிலக் கல்வியைப் போதிப்பதற்கு ஒரு திட்டத்தைத் தயாரித்தார். அதன்படி ஆங்கிலக் கல்வியைப் பெருக்க நாட்டின் பல பாகங்களிலும் கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டன. ஆங்கில மொழியின் மூலமாகவே பல கலைகளையும் அரசாங்கக் கல்லூரிகளில் கற்பிக்க ஏற்பாடாயிற்று. கல்கத்தாவில் பிரஸிடென்ஸி காலேஜும், மருத்துவ கலாசாலையும், பம்பாயில் எல்பின்ஸ்டன் காலேஜும் பெண்டிங்கு பிரபு காலத்தில் ஏற்படுத்தப்பட்டவை.

அரசியல் சீர்திருத்தங்கள்: ஆங்கில அரசாட்சியில் பெண்டிங்கு பிரபு காலம் வரை இந்தியருக்கு உயர்ந்த உத்தியோகங்கள் அளிக்கப்படவில்லை. 1833-ஆம் வருஷத்துச் சாஸனத்திற்கிணங்க, பெண்டிங்கு பிரபு அக்குறையை நீக்கி, இந்தியர்களுக்கு உயர்ந்த பதவிகள் அளித்தார். பல இந்தியர்கள் முனிசீப்புகளாகவும், ஸப்ஜட்ஜுகளாகவும், டெபுடி கலெக்டர்களாகவும் நியமிக்கப்பட்டார்கள். அவர்களுடைய அந்தஸ்துகளும், சம்பளங்களும் உயர்த்தப்பட்டன. மொகலாய அரசர்கள் காலமுதல் நியாய ஸ்தலங்களில் பாரசீக பாஷையே உபயோகிக்கப்பட்டு வந்தது. பெண்டிங்கு பிரபு அதை நீக்கிவிட்டு, ஒவ்வொரு மாகா

ணத்திலும் தாய்மொழியையே உபயோகப்படுத்த வேண்டு மென்று ஏற்பாடு செய்தார்; துரைத்தனச் செலவைக் குறைத் துச் சிக்கன முறைகளை அனுஷ்டித்தார். உத்தியோகஸ்தர் களுக்குச் கொடுத்து வந்த அதிகமான படிப்பணத்தைச் சரிப் பாதியாகக் குறைத்தார். சென்னை ராஜதானியிலும், ஆக்கிராவி லும் நிலவரியை உயர்த்தினர். இவ்விதமாக அரசாங்க வருமா னம் அதிகரித்தது. அப்பொழுது பம்பாய்க் கவர்னராயிருந்த **எல் பின்ஸ்டன்** என்பவரும் சென்னைக் கவர்னராயிருந்த **ஸர் தாமஸ் மன்ரோ** என்பவரும் பெண்டிங்கு பிரபுவின் கொள்கையைப் பின்பற்றித் தங்கள் மாகாணங்களில் அரசியலை நடத்தி வந்தார் கள். ஜனங்கள் அவர்களிடம் அன்பு பாராட்டி, அவர்களு டைய உருவச்சிலைகளைத் தங் கள் மாகாணத்தின் தலைநகர் களில் ஸ்தாபித்தார்கள். கி.பி. 1835ல் பெண்டிங்கு பிரபு தேக அசௌக்கியத்தினுல் வேலையை ராஜினாமா செய்து விட்டு இங்கிலாந்து சென்றார்.

ராஜா ராம்மோஹன் ராய்: பெண்டிங்கு பிரபுவுக்கு ஆசா ரச் சீர்திருத்த விஷயத்தில் உதவியாயிருந்தவர்களுள் முக் கியமானவர் **ராஜா ராம்மோஹன் ராய்.** அவர் கி. பி. 1774-ஆம் வருஷம் கல்கத்தாவிற்கு அரு கிலுள்ள ஒரு சிறுகிராமத்தில் பிராமண குலத்தில் பிறந்தார். அவர் இளமையிலேயே சம்ஸ்கிரு தம், பாரசீகம், அரபி, ஆங்கிலம் ஆகிய பாஷைகளைக் கற்றுத்

ராஜா ராம்மோஹன் ராய்

தேர்ச்சி பெற்றார். அவர் மத சம்பந்தமான பல நூல்களைக் கற்று, அவற்றின் கருத்தை உள்ளபடி அறிந்துகொண்டார். அவர் இந்துக்கள் கொண்டொழுகும் ஆசார அனுஷ்டானங்களில் பல வேத சாஸ்திரங்களுக்கு விரோதமாய் இருப்பதைக் கண்டு சமூகச் சீர்திருத்தங்கள் செய்வதில் ஈடுபட்டார். அவர் ஜாதி பேதத்தையும், விக்கிரக ஆராதனையையும் வெறுத்தார்; உடன்கட்டை ஏறுதல், பாலிய விவாகம் முதலிய பழக்கங்களைக் கண்டித்தார்; விதவைகள் மறுபடியும் கலியாணம் செய்துகொள்ளுவதற்குச் சாஸ்திரங்களில் யாதொரு தடையும் இல்லை என்று பிரசாரம் செய்ய ஆரம்பித்தார். அவருடைய தந்தையார் சிறந்த வைதிகரானதால் இருவருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டு, மோஹன்ராய் தம் தகப்பனுரை விட்டுப் பிரியவும் நேர்ந்தது. சிறிது காலம் வரையில் அவர் ஆங்கிலேய கம்பெனியாரிடத்தில் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தைத் திறமையுடன் வகித்து வந்தார்; கி. பி. 1803ல் தம் தந்தையார் காலஞ்சென்ற பிறகு தமது கொள்கைகளைப் போதிப்பதிலேயே தமது காலமுழுவதையும் செலவிடலானுர். அவர் கொள்கைகளுக்கு இணங்கிப் பலர் அவருடன் சேர்ந்தனர்.

கி. பி. 1828ல் அவர் **பிரம சமாஜம்** என்னும் சங்கத்தை ஏற்படுத்தினுர். அச்சங்கத்தினர்கள் ஜாதி பேதம் பாராட்டாமல் விவாகங்கூடச் செய்து வந்தார்கள். அவர்கள் விக்கிரக ஆராதனை செய்வதில்லை. ஒவ்வொருவரும் மனத்தினுல் பிரமத்தைத் தியானம் செய்ய வேண்டும் என்பதே அச்சங்கத்தினரின் கொள்கை. கவிஞர் பெருமான் ரவீந்திரநாத தாகூரின் பாட்டனுரான **துவாரகநாத தாகூரும், கேசவ சந்திர சேனரும்** ராம் மோகன் ராயின் கொள்கைகளை ஆதரித்து, பிரம சமாஜத்தை முன்னுக்குக் கொண்டு வந்தார்கள். இக்காலத்திலும் ஆயிரக்கணக்கான மக்கள் அச்சங்கத்தில் சேர்ந்து அக்கொள்கைகளின்படி தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகிறுர்கள்.

சககமனத்தை ஒழிப்பதிலும், ஆங்கிலக் கல்வியைப் பரப்புவதிலும், இந்தியர்களுக்கு உயர்ந்த உத்தியோகங்களை அளிப்பதிலும் பெண்டிங்கு பிரபு செய்த ஏற்பாடுகளை ராம் மோகன் ராய் வரவேற்று ஆதரித்தார். அவருடைய பெரு முயற்சியால் கி. பி. 1819ல் கல்கத்தாவில் இந்து கலாசாலை ஸ்தாபிக்கப்பட்டது. அவர் பிராமணர்கள் கப்பலேறி வெளி நாடு செல்லக் கூடாது என்னும் கொள்கையை மறுத்தார்; முதன் முதலில் தாமே கப்பலேறிச்சென்று மற்றப் பிராமணர் களுக்கு வழி காட்டினார்.

கி. பி. 1830-ஆம் வருஷம் டில்லிச் சக்கரவர்த்தியார் அவருக்கு 'ராஜா' என்னும் பட்டப்பெயரை அளித்து, தமக்கு வக்கீலாக அவரை இங்கிலாந்திற்கு அனுப்பினார். வைதிக இந்துக்களில் சிலர் சககமனத்தை நிறுத்தக்கூடாதென்று ஆங்கிலேய மன்னருக்கு மனுச்செய்துகொண்டார்கள். ராஜா ராம் மோஹன்ராய் சககமனத்தைக் கண்டித்துப் பல பிரசங்கங்கள் செய்து, ஆங்கிலேய அரசர் அந்த மனுவைத் தள்ளிவிடும்படி செய்தார். இவ்விதம் நாட்டின் நன்மைக்காக உழைத்த மகான் கி. பி. 1833-ஆம் வருஷம் இங்கிலாந்தில் பிரிஸ்டல் நகரத்தில் காலமானார்.

கேள்விகள்:

1. பெண்டிங்கு பிரபு காலத்தில் ஆங்கிலேய ஆட்சியின்கீழ் வந்த நாடுகள் யாவை?
2. 'சககமனம்' என்பது என்ன? பெண்டிங்கு அதை எப்படி ஒழித்தார்?
3. தக்கர்கள் யாவர்? அவர்கள் எப்படி ஒழிக்கப்பட்டார்கள்?
4. பெண்டிங்கின் துரைத்தனச் சீர்திருத்தங்களைப் பற்றி உனக்கென்ன தெரியும்?
5. குறிப்பெழுது:—(1) 1833-ஆம் வருஷத்துச் சாஸனம் (2) பிரம சமாஜம்.

4. ஆக்லண்டு பிரபுவும் எல்லன்பரோ பிரபுவும்

பெண்டிங்கு பிரபுவுக்குப் பின் **ஆக்லண்டு பிரபு** கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். அவர் இங்கிலாந்திலிருந்து வரும் வரையில் **ஸர் சார்லஸ் மெட்காப்** என்னும் எல்லைப்புற மாகாணக் கவர்னர் சுமார் ஒரு வருஷம் கவர்னர் ஜெனரலாய் வேலை பார்த்துவந்தார். அவர் சுதேச பாஷைகளில் பிரசுரிக்கப் பட்ட பத்திரிகைகளுக்கு ஹேஸ்டிங்ஸ் பிரபு காலத்தில் ஏற்பட் டிருந்த தடைகளை நீக்கினர்.

ஆக்லண்டு பிரபு (கி. பி. 1836–42): ஆக்லண்டு பிரபு கவர் னர் ஜெனரலாக வந்ததும் ஆப்கானிய விவகாரங்களில் தலை யிட்டுக்கொள்ள வேண்டியதாயிற்று.

எல்லைப்புறப் பாதுகாப்பு: ஆப்கானிஸ்தானம் இந்தியாவின் வடமேற்கு எல்லைப்புறத்தில் இருக்கிறது. இந்த இரண்டு நாடுகளுக்கும் இடையே கைபர், போலன் முதலிய 'கணவாய் கள்' இருக்கின்றன. இந்தக் கணவாய்களின் வழியாகத்தான் முற்காலத்தில் கிரேக்கர், பாரஸீகர், அராபியர், மங்கோலியர் ஆகிய பல அன்னியர்களும் நமது நாட்டின்மீது படை யெடுத்துவந்தார்கள். ஆகவே, இந்தியாவைப் பாதுகாப்பதற்கு இந்த எல்லையில் பலமான சைனியம் ஒன்று இருக்க வேண்டு வது அவசியம். ஆனல், மிண்டோ பிரபுவின் காலத்தில் ரஞ்சித் சிங்கு என்னும் சீக்கியத் தலைவர் பஞ்சாபு நாடு முழுவதையும் தமதாக்கிக்கொண்டு கைபர்க் கணவாயை அடுத்துள்ள பெஷா வர் நகரத்தையும் பிடித்துக்கொண்டு, எல்லைப்புறத்தைத் திற மையுடன் பாதுகாத்துவந்தார். மிண்டோ பிரபு ரஞ்சித் சிங் குடனும், ஆப்கானிஸ்தான அரசருடனும், பாரசீக மன்னருட னும் உடன்படிக்கை செய்துகொண்டதால், எல்லைப் பாதுகாப் பைப் பற்றி ஆங்கிலேயருக்குக் கவலையில்லாமலிருந்தது.

ரஷ்ய ஆபத்து: ஆக்லண்டு பிரபுவின் காலத்தில் ருஷ்யர்கள் மத்திய ஆசியாவில் காஸ்பியன் கடலுக்கு அருகிலுள்ள நாடுகளையெல்லாம் ஜயித்து, பலமடைந்திருந்தார்கள். அவர்கள் பாரசீக மன்னருடனும், ஆப்கானிஸ்தான அமீருடனும் நட்புக்கொள்ள ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் இந்தியாவின்மீது படையெடுத்து வரக்கூடுமென்ற பயம் இருந்தது.



முதல் ஆப்கானியப் போர்: அச்சமயம் ஆப்கானிஸ்தானத்தில் **ஆமது ஷா அப்தாலியின்** வமிசத்தைச் சேர்ந்த **ஷாஷுஜா** ஆண்டு வந்தார். அவருடைய மந்திரியாரான **தோஸ்து முகம்மது** என்பவர் கி. பி. 1827ல் ஷாஷுஜாவை காபூலிலிருந்து துரத்தி

விட்டுத் தாமே ஆப்கானிய ஆமீரானார். ஷாஷுஜா இந்தியாவுக்கு வந்து, ஆங்கிலேயரின் உதவியை நாடினார். ஆக்லண்டு பிரபு, தோஸ்து முகம்மதுவுடன் சிநேகமாயிருக்க எண்ணி, அவருடன் உடன்படிக்கை செய்வதற்காகக் **காப்டன் பர்னஸ்** என்பவரைத் தூதராக அனுப்பினார். அதே சமயத்தில் ஆப்கானிஸ்தானத்திற்கு ருஷ்யாவிலிருந்தும் ஒரு ராஜ தூதர் வந்தார். தோஸ்து முகம்மது ஆப்கானியர்களிடமிருந்து ரஞ்சித் சிங்கு பற்றிக்கொண்ட பிஷாவரைத் தமக்கு வாங்கிக்கொடுத்தால் ஆங்கிலேயருடன் சமாதானம் செய்துகொள்வதாகக் கூறினார், ரஞ்சித்சிங்கு ஆங்கிலேயருக்கு உற்ற நண்பராகையால், ஆக்லண்டுபிரபு அவருக்கு விரோதமாக ஒன்றும் செய்ய உடன்படவில்லை. அதனால், தோஸ்து முகம்மது ஆங்கிலேயரிடம் வெறுப்படைந்து, ஆங்கிலேய தூதரைத் திருப்பி அனுப்பிவிட்டு, ருஷ்ய தூதருடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்பேரில் ஆக்லண்டு பிரபு ஆங்கிலேயருக்கு நண்பராயிருந்த ஷாஷுஜாவை அமீராகச் செய்ய வேண்டுமென்று தீர்மானித்தார். ரஞ்சித் சிங்கும் ஆங்கிலேயருக்கு உதவி புரிவதாக வாக்களித்தார்.

ஆகையால், அவர் கி.பி. 1839ல் ஷாஷுஜாவை ஓர் ஆங்கிலப்படையுடன் ஆப்கானிஸ்தானத்திற்கு அனுப்பினார். ஆங்கிலேயச் சேனை **போலன் கணவாய்** வழியாகச் சென்று, காண்டஹார், காபூல், கஜினி முதலிய இடங்களைக் கைப்பற்றிக்கொண்டது. தோஸ்து முகம்மது கைது செய்யப்பட்டு, கல்கத்தாவிற்கு அனுப்பப்பட்டார். ஷாஷுஜா அமீராக்கப்பட்டார். அவருக்கு உதவியாக **ஸர் வில்லியம் மாக்னுட்டன்** என்பவர் வசம் ஓர் ஆங்கிலேயப் படையும் காபூலில் வைக்கப்பட்டது. ஷாஷுஜா சரியாக ஆட்சி செய்யவில்லை. ஆகையால், ஆப்கானியர் அவரை வெறுத்துக் கலகம் செய்தனர். அவர்கள் தோஸ்து முகம்மதுவின் குமாரர் **அக்பர்கான்** என்பவரைத்தலை

வராகக்கொண்டு திடீரென்று காபூலைத்தாக்கினர்கள். ஸர் வில்லியம் மாக்னுட்டனும் பல ஆங்கிலேயரும் கொல்லப்பட்டனர். கலகக்காரர்களை எதிர்த்துப் போர் செய்வதற்குப் போதிய சைனியம் இல்லாததனல் ஆங்கிலேய தளகர்த்தர் அக்பர்கானுடன் சமாதானம் செய்துகொண்டு தமதுபடையுடன் இந்தியாவுக்குத் திரும்பினர். சுமார் 15,000 வீரர்களடங்கிய அந்தச் சேனை கைபர்க் கணவாயின் வழியாக இந்தியாவுக்குத் திரும்பி வந்துகொண்டிருக்கும் பொழுது ஆப்கானியர் மலைமேலிருந்து கற்களை உருட்டியும் துப்பாக்கிகளாற் சுட்டும் ஆங்கிலேய வீரர் எல்லோரையும் கொன்றனர். **டாக்டர் பிரைட்டன்** ஒருவர் மட்டும் உயிர் தப்பி இந்தியாவுக்கு வந்து, துக்க சமாசாரத்தை வெளியிட்டார். இச்சம்பவங்கள் ஆங்கிலேயருக்குப் பெரிய அவமானத்தை விளைவித்தன. அவர்கள் ஆக்லண்டு பிரபுவை இங்கிலாந்துக்குத் திரும்பி வரும்படி உத்தரவிட்டு, அவருக்குப் பதிலாக **எல்லன்பரோ பிரபு**வைக் கவர்னர் ஜெனரலாக நியமித்தார்கள்.

எல்லன்பரோ பிரபு (கி. பி. 1842 - 44) : அவர் இந்தியாவுக்கு வந்ததும் ஆப்கானியரைத் தண்டித்து ஆங்கிலேயருடைய கௌரவத்தை நிலைநாட்ட வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். **காப்டன் நாட்டு, காப்டன் போலக்கு** என்னும் தளகர்த்தர்களின் தலைமையில் இரண்டு ஆங்கிலேயப் படைகள் ஆப்கானிஸ்தானத்திற்கு அனுப்பப்பட்டன. ஜலாலாபாதையும், காண்டஹாரையும் முற்றுகை செய்துகொண்டிருந்த ஆப்கானியர்கள் தோற்கடிக்கப்பட்டுத் துரத்தப்பட்டார்கள். காபூலும் எளிதில் கைப்பற்றப்பட்டது. அதன் கடைத்தெரு வெடிமருந்தால் பாழாக்கப்பட்டது. அக்பர்கான் ஓட்டம்பிடித்தார். இதற்குள் ஷாஷுஜா கலகக்காரர்களால் கொலைசெய்யப்பட்டபடியால் தங்களிடம் சரணமடைந்திருந்த தோஸ்துமுகம்மதை அமீராக நியமித்து அவருடன் உடன்படிக்கைசெய்துகொண்டு

அவரைக் காபூலுக்கு அனுப்பினார்கள். ஆங்கிலேயரின் சேனை இந்தியாவுக்குத் திரும்பி வந்தது.

சிந்து மாகாணத்தைக் கைப்பற்றியது: சிந்து மாகாணம் அமீர் என்ற பட்டம் பெற்ற பெலுச்சித் தலைவர்களால் ஆளப்பட்டு வந்தது. அந்த அமீர்கள் ஆங்கிலேயருடன் சிநேகமாகவே இருந்து வந்தார்கள். ஆப்கானிய யுத்தத்தின்போது சிந்து நாட்டின் மூலமாகவே ஆங்கிலேயப் படைகள் ஆப்கானிஸ்தானத்திற்குச் சென்றன. அப்பொழுது அமீர்கள் ஆங்கிலேயருக்கு வேண்டிய உதவி செய்தார்கள். சிந்து மாகாணத்தின் வழியாக ஆப்கானிஸ்தானத்திற்குப் போக்கு வரவு நடந்து வந்தன. சிந்து நதி வழியாகவும் அரபிக்கடலுக்குப் போக்கு வரவு நடந்து வந்தன. ஆகையால், சிந்து மாகாணம் ஆங்கிலேயரின் கைவசம் இருக்க வேண்டுமென்று எல்லன்பரோ பிரபு எண்ணினார். அப்பொழுது சிந்து நாட்டில் ஆங்கிலேயப் பிரதிநிதியாயிருந்த **ஸர் சார்லஸ் நேப்பியர்** யுத்தப் பிரியராயும், கர்வமுடையவராயுமிருந்தார். அவர் சிந்து அமீர்களைச் சில கடுமையான நிபந்தனைகளுக்கு இணங்கும்படி வற்புறுத்தினார். அமீர்கள் அதற்கு உடன்படாததால், நேப்பியர் ஒரு படையுடன் சென்று, அமீர்களை **மியானி, ஹைதராபாது** என்னுமிடங்களில் தோற்கடித்துச் சிந்து நாட்டைக் கைப்பற்றிக்கொண்டார். கி. பி. 1843ல் அந்நாடு முற்றும் ஆங்கிலேய சாம்ராஜ்யத்துடன் சேர்க்கப்பட்டது. சிந்து நாட்டின் விஷயமாக எல்லன்பரோ நடந்துகொண்டது, இங்கிலாந்திலிருந்த நிர்வாக சபையாருக்குப் பிடிக்கவில்லை. ஆகவே, கி. பி. 1844ல் அவர் திரும்ப அழைக்கப்பட்டு, **ஹார்டிஞ்சு பிரபு** கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார்.

கேள்விகள் :

1. எல்லைப்புறத்தைப் பாதுகாக்க வேண்டுவதன் அவசியம் என்ன ?

2. முதலாவது ஆப்கானியப் போரின் காரணங்கள் எவை?
3. ஆப்கானிய யுத்தங்களில் போர் புரிந்து வெற்றியடைந்த தளகர்த்தர்கள் யார்?
4. சிந்து மாகாணம் எவ்வாறு ஆங்கிலேயரின் ஆட்சிக்குள் கொண்டு வரப்பட்டது?

---

5. ஹார்டிஞ்சு பிரபுவும் சீக்கிய யுத்தங்களும்

ஹார்டிஞ்சு பிரபு கி. பி. 1844 முதல் 1848 வரையில் கவர்னர் ஜெனரல் பதவியை வகித்தார். இவர் பெண்டிங்கு பிரபுவைப் போல இந்திய சமூக முன்னேற்றத்தில் அதிக ஊக்கங் கொண்டார். நரபலி, சிசுபலி, சககமனம் முதலிய கொடிய பழக்கங்களை அறவே ஒழித்தார்; கல்வி வளர்ச்சிக்காகப் பல கலாசாலைகளை அமைத்தார்; நீர்ப்பாசானத்திற்காகக் கங்கையிலிருந்து ஒரு கால்வாய் வெட்ட ஏற்பாடு செய்தார். இவர்காலத்திலேதான் பஞ்சாபிலிருந்த சீக்கியரோடு ஆங்கிலேயர் போர் தொடுத்தனர்.

ஹார்டிஞ்சு பிரபு

முதல் சீக்கிய யுத்தம்: கி. பி. 1809ல் மிண்டோ பிரபுவுடன் உடன்படிக்கை செய்துகொண்ட காலம் முதல் **ரஞ்சித் சிங்கு** ஆங்கிலேயருடன் நட்பாய் இருந்து வந்தார். ரஞ்சித்சிங்கு சீக்கியர்களை ஒற்றுமைப்படுத்திப் 'பஞ்சாபு சிங்கம்' என்ற பெயருடன் தமது ராஜ்யத்தைத் திறமையுடன் ஆண்டு வந்தார். கி. பி. 1839ல் அவர் இறக்கவே, பஞ்சாபில் அடிக்கடி கலகங்கள் உண்டாயின. ரஞ்சித் சிங்கின் சந்ததியார்கள் பலம் பொருந்திய சீக்கிய சேனைக்குத் தலைமை வகித்து நாட்டை

யாளும் திறமையுள்ளவர்களல்லர். ஆகவே, **கால்ஸா** என்னும் சீக்கிய சேனையின் தலைவர்கள் அதிகாரத்தைத் தங்கள் கை வசப்படுத்திக் கொண்டார்கள். அவர்கள் ரஞ்சித்சிங்கின் குமாரர் **துலீப்சிங்கு** என்னும் சிறுவரைப் பஞ்சாபுக்கு அரசராக்கினார்கள். அவருடைய தாயார் ராஜப் பிரதிநிதியாய் இருந்து துரைத்தனத்தை நடத்தி வந்தார். சீக்கிய சேனை ரஞ்சித்சிங்கு இருந்தவரை அவருக்கு அடங்கி நடந்து வந்தது. அவருக்குப் பின் இராணுவத்தை அடக்கியாளக் கால்ஸாச் சபைக்காவது இராணிக்காவது சக்தியில்லை. பராக்கிரமம் மிகுந்த சேனை வீரர்கள் சண்டை செய்து அதிகாரத்தைப் பரப்ப விரும்பினார்கள். சேனையின் தொல்லையிலிருந்து தப்புவதற்காக இராணி சீக்கிய சேனையை ஆங்கில நாடுகளின் மீது போர் செய்யும்படி அனுப்பினாள். சீக்கிய சேனை ஸட்லெஜ் நதியைத் தாண்டி ஆங்கிலேயருக்குச் சொந்தமான நாட்டில் பிரவேசித்தது. கவர்னர் ஜெனரல் ஹார்டிஞ்சுபிரபு ஒருபெரிய சேனையைத் தயாரித்துத் தாமே அதற்குத்தலைமை வகித்து நடத்திச் சென்றார். **ஸர் ஹ்யூகப்** என்னும் தளகர்த்தர் அவருக்கு உதவியாகச் சென்றார். அவர்கள் சீக்கியப்படையைக் கி.பி. 1845ல் **முட்கி** என்னுமிடத்தில் சந்தித்தார்கள். **லால்சிங்கு** என்ற சீக்கிய தளகர்த்தர் திறமையுடன் போர் புரிந்த போதிலும், முடிவில் ஆங்கிலேயரே வெற்றி பெற்றனர். பிறகு **பிரோஸ் ஷா பாது** என்னுமிடத்தில் சண்டை நடந்தது. அச்சண்டையிலும் சீக்கியர்கள் தோல்வியடைந்த போதிலும், ஆங்கிலேயருக்கு அதிக நஷ்டம் ஏற்பட்டது. பின் சீக்கியர்கள் லூதியானா என்னுமிடத்தைப் பிடிக்க முயன்றார்கள். அவர்களை எதிர்த்த **ஸர் ஹாரி ஸ்மித்து** என்னும் ஆங்கில தளகர்த்தரைப் **புத்தவால்** என்னும் இடத்தில் தோற்கடித்தார்கள். ஆயினும், **அலிவால், ஸொப்ராயன்** என்னுமிடங்களில் நடந்த சண்டைகளில் சீக்கியர்கள் வீராவேசத்துடன் போர் புரிந்தபோதிலும், முடிவில் ஆங்கிலேயரே வெற்றிபெற்றனர்.

ஆங்கிலேயச் சேனை பஞ்சாபின் தலைநகராகிய **லாகூரை** அடைந்தது. சீக்கியர்கள் தைரியத்தை இழந்து, மேலும் சண்டை செய்ய முடியாதென்றுஉணர்ந்து, **லாகூரில்** கி.பி. 1846ல் ஆங்கிலேயருடன் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டனர். அதன்படி துலீப்சிங்கு கம்பெனியாருக்கு யுத்தத்தில் ஏற்பட்ட நஷ்டத்திற்காக 50லக்ஷம் ரூபாயும், **காஷ்மீர்** நாட்டையும் ஆங்கிலேயருக்குக் கொடுத்தார். மேலும், பீயாஸ், சட்லெஜ் நதிகளுக்கு இடையிலுள்ள **ஜலந்தர் தோவால்** என்னும் ஜில்லாவைக் கம்பெனியார் அடைந்தனர். துலீப் சிங்கு பஞ்சாபு அரசராக ஒப்புக்கொள்ளப்பட்டார். அவர் சிறுவரானதால், அவரது தாயாரே ராஜ்ய பரிபாலனம் நடத்துவது என்று ஏற்பாடாயிற்று. லாகூரில் **ஸர் ஹென்றி லாரென்ஸ்** என்பவர் ஸ்தானிகராக நியமிக்கப்பட்டார். **குலாப்சிங்கு** என்ற **ஜம்மு** அரசர் சீக்கிய யுத்தத்தில் ஆங்கிலேயருக்கு உதவிபுரிந்தபடியால், ஹார்டிஞ்சு காஷ்மீரை அவருக்கு ஒரு கோடி ரூபாய்க்கு விற்றுவிட்டார். குலாப்சிங்கின் சந்ததியாரே இன்னும் காஷ்மீரை ஆண்டுவருகின்றனர். இத்துடன் முதல் சீக்கிய யுத்தம் முடிவடைந்தது.

கி.பி. 1848-ஆம் வருஷம் ஹார்டிஞ்சு பிரபு இங்கிலாந்துக்குச் சென்றுவிட்டார். **டல்ஹௌஸி பிரபு** கவர்னர் ஜெனரல் ஆனார்.

கேள்விகள் :

1, 'பஞ்சாபு சிங்கம்' என்று யாருக்குப் பெயர் வழங்கி வந்தது? ஏன்?

2. முதலாவது சீக்கிய யுத்தத்திற்குக் காரணங்கள் எவை? அது எப்படி முடிந்தது?

3: காஷ்மீரம் எப்படி ஒரு தனிநாடாயிற்று?

6. டல்ஹௌஸி பிரபு (கி. பி. 1848—56)

இரண்டாவது சீக்கிய யுத்தம்: முதலாவது சீக்கிய யுத்தம் முடிந்தபின் பஞ்சாபு ராஜ்யம் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒரு ஸர்தாரின் ஆட்சியில் விடப்பட்டது. அப் பிரிவுகளில் **மூல்டான்** என்பது ஒன்று. அதற்கு **மூல்ராஜ்** என்ற சீக்கிய ஸர்தார் கவர்னராய் இருந்தார். ஆங்கிலேயருக்கு அடங்கி இருப்பது அவருக்குப்பிடிக்கவில்லை. ஆகையால், அவர் பஞ்சாபு அரசருக்குக் கப்பம் செலுத்தாமலும், ஆங்கிலேய

டல்ஹௌஸி பிரபு

ஸ்தானிகருக்குக் கீழ்ப்படியாமலும் இருந்தார். ஆங்கிலேய ஸ்தானிகர் அவரிடம் கணக்குக் கேட்டபொழுது அவர் தமது வேலையை ராஜினாமாக் கொடுத்துவிட்டார். உடனே ஸ்தானிகர் வேறொருவரை மூல்டானுக்குக் கவர்னராக நியமித்து அவருடன் இரண்டு ஆங்கில உத்தியோகஸ்தர்களைப் போர்ப் படைகளுடன் அனுப்பினர். அவர்கள் மூல்டான் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டார்கள். மூல்ராஜ் கலகம் செய்து அவ்விரு உத்தியோகஸ்தர்களையும் கொன்றுவிட்டார். மற்றச் சீக்கியத் தலைவர்களும் ஆங்கிலேயரைத் தங்கள் நாட்டினின்று விரட்டிவிட அதுவே தக்க சமயமெனக் கருதி, ஆங்கிலேயருக்கு விரோதமாகக் கிளம்பினர்கள்.

டல்ஹௌஸி பிரபு **ஸர் ஹியூகப்** என்பவர் வசம் ஒரு சேனையை அனுப்பினர். 1849ல் **சில்லியன் வாலா** என்ற இடத்தில் ஒரு பெரிய யுத்தம் நடந்தது. மூல்டான் ஆங்கிலேயர் வசமாயிற்று. மூல்ராஜ் சிறை பிடிக்கப்பட்டார். ஆயினும், ஆங்கி



டல்ஹௌசி காலத்திய
இந்தியா 1856
ஆப்கனிஸ்தானம்
காஸ்மீர்
லாகூர்
முல்டான்
ராஜபுதனம்
மீரட்
நேபாளம்
அயோத்தி
லக்னௌ
கான்பூர்
காசி
குவாலியர்
ஜான்ஸி
அலஹாபாத்
கங்கை
வங்காளம்
பீஹார்
பூடான்
அஸ்ஸாம்
டாக்கா
கல்கத்தா
சிட்டகாங்
ஆக்குயாப்
மாண்டலே
நாகபுரி
பேரார்
பரோடா
சூரத்
பேஸின்
பம்பாய்
ஸடாரா
நிஜாம்
இராஜ்ஜியம்
ஐதராபாத்
அரபிக்
கடல்
வங்காளக்
குடாக்கடல்
கோவா
மைசூர்
பெங்களூர்
சென்னை
மங்களூர்
பாஸின்
பெகு
காலட்
கெஜ்னி
சிம்லா
ஆக்ரா

லேயருக்குப் பெருத்த சேதம் ஏற்பட்டது. சீக்கியர்கள் ஆங்கிலேயரைக் **குஜரத்து** என்னுமிடத்தில் எதிர்த்துக் கடும்போர் புரிந்தனர். ஆனால், அவர்கள் முற்றிலும் தோல்வியடையவே, சீக்கியர்கள் சோர்வடைந்து கீழ்ப்படிந்தார்கள்.

டல்ஹௌஸி பிரபு துலீப் சிங்குக்கு உபகாரச் சம்பளம் ஏற்படுத்திவிட்டு, பஞ்சாபை ஆங்கிலராஜ்யத்துடன் சேர்த்துக் கொண்டார். சீக்கியர்கள் மறுபடியும் யுத்தத்திற்குக் கிளம் பாதபடி அவர்களுடைய கால்ஸாப் படை கலைக்கப்பட்டது. சீக்கிய வீரர்களில் பலர் ஆங்கிலேய இராணுவத்தில் சேர்ந்து இப்பொழுதும் அரிய சேவை செய்து வருகின்றனர்.

டல்ஹௌஸி பஞ்சாபை ஆண்டுவர மூன்று கமிஷனர்கள் அடங்கிய ஒரு சபையை ஏற்படுத்தினர். **ஸர் ஹென்றி லாரன்ஸ்** என்பவரைச்சபைத் தலைவராகவும், **ஸர் ஜான் லாரன்ஸ், சார்லஸ் மான்சல்** என்ற இருவரையும் அங்கத்தினர்களாகவும் கொண்ட அச்சபை, பஞ்சாபில் அமைதியை ஏற்படுத்தி, குடிகளுக்கு வேண்டிய பல நன்மைகளைச் செய்து வந்தது. பஞ்சாபு பல ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒவ்வோர் ஆங்கிலேய கலெக்டர் நியமிக்கப்பட்டார். நிலவரிகுறைக் கப்பட்டது. விவசாயத்திற்கான ஏரிகளும் கால்வாய்களும் வெட்டப்பட்டன. சாலைகளும் கிளைச்சாலைகளும் அமைக்கப் பட்டன. நியாய விசாரணை சம்பந்தமாகவும் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஹென்றி லாரன்ஸ் சீக்கிய சர்தார்களுடன் நெருங்கிப் பழகி, அவர்களுடைய அன்பைச் சம்பாதித்தார். ஆகையால், சீக்கியர்கள் ஆங்கிலேயரிடம் கொண்டிருந்த பகையை மறந்து, சமாதானம் அடைந்தார்கள்.

பஞ்சாபில் ஆங்கில ஆட்சியை நிலைநாட்டிய பின் வட மேற்கு எல்லையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஆங்கிலேயருக்கு ஏற்பட்டது. அங்கே பல புதிய கோட்டைகளைக் கட்ட ஆரம்பித்தனர், எல்லைப்புறச் சேனை ஒன்று ஸ்திரமாக

வைக்கப்பட்டது. லாரன்ஸ் சகோதரர்கள் பஞ்சாபில் இருந்து குடிகளுக்கு நன்மை செய்ததைப் போல, நிக்கல்ஸன் என்பவர்

பர்மா யுத்தம்



எல்லைப்புற மாகாணத்தை அடக்கிக் குடிகளுக்குப் பல நன்மைகளைச் செய்து அவர்களுடைய அன்பையும் நன்மதிப்பையும் பெற்று விளங்கினர்.

இரண்டாவது பர்மா யுத்தம்: சீக்கிய யுத்தம் முடிவடைந்து மூன்று வருஷங்களுக்குப் பின் டல்ஹௌஸி பிரபு பர்மாவுடன் யுத்தம் செய்ய நேர்ந்தது. பர்மா அரசர் முதலில் பர்மா யுத்தத்தின் முடிவில் செய்துகொண்ட **யாண்டபூ** உடன்படிக்கைக்கு விரோதமாக இரங்கூனிலிருந்த ஆங்கிலேய வர்த்தகர்களைத் துன்புறுத்தினர். மேலும், ஆவாவிலிருந்த ஆங்கிலேய ஸ்தானிகரை மரியாதைக் குறைவாக நடத்தியதால், அவர் கல்கத்தாவுக்குத் திரும்பிச் சென்றுவிட்டார். ஆகையால், டல்ஹௌஸி பிரபு கி. பி. 1852ல் ஓர் ஆங்கிலேயச் சேனையைப் பர்மாவுக்கு அனுப்பினர். அந்தச் சைனியம் **இரங்கூன், புரோம் பெகு** என்னும் இடங்களைப்பிடித்துக்கொண்டது. டல்ஹௌஸி அவற்றைக் **கீழ் பர்மா** என்ற தனி மாகாணமாக்கி, ஆங்கிலேய ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டார். பர்மா அரசர் கடலோரமாயுள்ள நாடுகளையெல்லாம் ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிட்டதால், அவருடைய ராஜ்யம் மிகவும் சிறியதாகிவிட்டது. அது முதல் ஆங்கிலேயரின் வியாபாரம் கீழ் பர்மாவில் அதிகரித்தது.

அரசிழக்கும் கோட்பாடு: வெல்லெஸ்லி பிரபு சுதேச மன்னர்களுடன் செய்துகொண்ட உதவிச்சேனை ஏற்பாட்டின்படி சுதேசராஜ்யங்களில் ஓர் ஆங்கிலேய சைனியத்தையும் ஒருஸ்தானிகரையும் வைத்து, சுதேச மன்னர்கள் ஒருவரோடொருவர் சண்டை செய்யாதபடி பார்த்து வந்தார். ஆங்கிலத் துரைத்தனத்தார் சுதேச மன்னர்களுடைய உள்நாட்டு அரசாட்சியில் தலையிடவில்லை. பல சுதேச மன்னர்கள் தங்களுடைய குடிகளின் நலத்தைச் சிறிதும் கருதாமல் சுயநலம் பாராட்டிப் பணத்தையும் காலத்தையும் வீணில் செலவு செய்து வந்தார்கள். அதனுல், குடிகள் பல கஷ்டங்களை அடைந்தார்கள். ஆகவே, ஆங்கிலத் துரைத்தனத்தார் சுதேச மன்னர்களின் உள் நாட்டு விவகாரங்களையும் கவனிக்கவேண்

டிய அவசியம் ஏற்பட்டது. டல்ஹௌஸி பிரபு இந்தியாவில் சுதேச சம்ஸ்தானங்களை குறைத்து, இந்தியா முழுவதையும் ஆங்கிலேயரின் நேரடியான ஆட்சியின்கீழ் கொண்டு வர வேண்டுமென்று விரும்பினார். ஆகவே, அவர் பற்பல காரணங்களைக்கொண்டு அநேக சுதேச ராஜ்யங்களை ஆங்கிலேய சாம்ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டார்.

டல்ஹௌஸி பிரபு **லாப்ஸ் கொள்கை** அல்லது **அரசிழக்கும் கோட்பாடு** என்ற நூதன முறையை மேற்கொண்டார். அதன்படி ஒரு சுதேச மன்னர் ஆண் சந்ததியின்றி இறந்துபோனால், அவருடைய ராஜ்யம் ஆங்கிலேய ராஜ்யத்துடன் சேர்த்துக் கொள்ளப்படும் என்றும், சந்ததியில்லாத சுதேச மன்னர்கள் சுவீகாரம் எடுத்துக்கொண்டால் அந்தச் சுவீகாரபுத்திரருக்குப் பட்டம் வகிக்க உரிமை கிடையாதென்றும், அந்த ராஜ்யங்கள் ஆங்கிலேயருக்குச் சொந்தமாகிவிடுமென்றும் ஒரு திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இந்துக்களில் புத்திர சந்ததி இல்லாதவர்கள் தம் நெருங்கிய பந்துக்களில் ஒருவனைப் புத்திரனாகச் சுவீகாரம் செய்துகொள்ளுவது புராதனமான வழக்கமாய் இருந்து வந்தது. இந்து அரசர்களும் அவ்வாறே சுவீகாரம் செய்துகொண்டு வந்தார்கள். அந்த ஏற்பாட்டை முகம்மதிய அரசர்களும் ஒப்புக்கொண்டிருந்தார்கள். டல்ஹௌஸி பிரபு அப்படிப்பட்ட சுவீகார புத்திரருக்கு ராஜ்யம் பாத்தியமாகாதென்று சொல்லி, வாரிசு இல்லாமல் இறந்த மன்னர்களின் ராஜ்யங்களை ஆங்கிலேய சாம்ராஜ்யத்தில் சேர்த்துக் கொண்டார். அதனால், ஆங்கிலேயருக்கு நண்பராயிருந்து வந்த பல சுதேச மன்னர்கள், அவர்களுக்கு விரோதமாகக் கிளம்பி, பெரிய சிப்பாய் கலகத்தால் ஆங்கிலேயருக்குப் பெருத்த துன்பத்தை விளைவித்தனர்.

அரசிழக்கும் கோட்பாட்டின்படி முதன்முதல் சேர்க்கப்பட்ட ராஜ்யம் **சதாரா** என்பது. நான்காவது மகாராஷ்டிர யுத்

தத்தின் முடிவில் பீஷ்வாவின் ராஜ்யத்தை ஆங்கிலேயர் கைப்பற்றிக்கொண்ட பொழுது, சிவாஜியின் வமிசத்தைச் சேர்ந்த ஒருவருக்குச் **சதாரா** என்னும் சிறிய ராஜ்யம் கொடுக்கப்பட்டது. அவ்வரசருக்குப் புத்திர • சந்தானமில்லாததால் தம் மரணத்தறுவாயில் ஒரு பையனைச் சுவீகாரம் எடுத்துக்கொண்டார். கி. பி. 1848ல் அவர் இறந்ததும், டல்ஹௌஸி அந்தச் சுவீகாரத்தை ஒப்புக்கொள்ளாமல் சதாராவை ஆங்கிலேய சாம்ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டார்.

கி. பி. 1853ல் ஜான்ஸி அரசர் வாரிசு இல்லாமல் இறக்கவே, அவருடைய இராணியார் செய்துகொண்ட சுவீகாரத்தை ஒப்புக்கொள்ளாமல் **ஜான்ஸியை** ஆங்கிலேய ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டனர். அதனுல், ஜான்ஸி இராணியாரான **லக்ஷ்மி பாய்** மிகுந்த கோபங்கொண்டு 1857ல் நடந்த பெரிய சிப்பாய் கலகத்தில் தலைமை வகித்து, ஆண் வேடந் தரித்து, ஆங்கிலேயருடன் சண்டை செய்து உயிர் நீத்தாள். இந்த ஏற்பாட்டின் • பிரகாரம் **நாகபுரி, ஜயத்புரி, ஸம்மல் புரி, உதய புரி, பகாத் புரி** ஆகிய சுதேச ராஜ்யங்கள் ஆங்கிலேய ராஜ்யத்தில் சேர்க்கப்பட்டன.

பீஷ்வா **இரண்டாம் பாஜிராவ்** கி. பி. 1853ல் இறந்துபோனுர். கம்பெனியார் அவருக்கு உபகாரச் சம்பளமாகக் கொடுத்து வந்த எட்டு லக்ஷம் ரூபாய்களை அவருடைய சுவீகார புத்திரரான **நானுசாகிபு** என்பவருக்குக் கொடுக்க மறுத்துவிட்டனர். அதனுல், அவர் கோபங்கொண்டு, சிப்பாய் கலகத்தில் ஆங்கிலேயருக்கு விரோதமாகச் சேர்ந்துகொண்டார்.

மேலும், கம்பெனியார் கர்நாடக நவாபுவுக்கும், தஞ்சாவூர் ராஜாவுக்கும் அளித்துவந்த உபகாரச் சம்பங்களை நிறுத்திவிட்டனர். ஹைதராபாதை ஆண்டு வந்த நிஜாம் மன்னர் ஆங்கிலேயருக்கு உதவிச் சேனையின் செலவுக்காகக் கொடுக்கவேண்டிய பணம் சரிவரக் கொடுபடவில்லை. அதனுல், டல்ஹௌஸி

நிஜாமுக்குச் சொந்தமான **பீராரைக்** கைப்பற்றி ஆங்கிலேய ராஜ யத்துடன் சேர்த்துக்கொண்டார். பீரார் வருமானத்தில் உத விச் சேனையின் செலவுக்குப் போக மீதியை நிஜாமுக்குக் கொடுப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. **அயோத்தி** நவாபு **வஜீட் அலீ** என்பவர் துரைத்தனத்தைச் சரியாய்க் கவனிக்க வில்லை என்னும் காரணத்தால் டல்ஹௌஸி கி. பி. 1856ல் அயோத்தி ராஜ்யத்தையும் ஆங்கிலேய ராஜ்யத்துடன் சேர்த் துக்கொண்டார். அயோத்தி சேர்க்கப்பட்டது இந்திய மன் னர்களிடையே மிகுந்த கலவரத்தை உண்டாக்கியது. சிப் பாய் கலகத்திற்கு அதுவும் ஒரு முக்கிய காரணமாயிற்று.

இவ்விதமாகப் பல புதிய நாடுகள் ஆங்கிலேயரின் நேர் அரசாட்சியின்கீழ் வந்ததனால் ஆங்கிலேய சாம்ராஜ்யம் மிக வும் பலமடைந்தது.

டல்ஹௌஸி பிரபு இந்தியாவில் பிரிட்டிஷ் சாம்ராஜ் யத்தை நிலைநாட்டிய நால்வருள் ஒருவராவர். கிளைவ் கம்பெனி யாரின் ஆட்சிக்கு அடிகோலினார். வெல்லெஸ்லி, ஹேஸ்டிங்ஸ் பிரபுக்கள் அதைப் பலப்படுத்திக் கம்பெனியாரின் ஏகாதிபத்தி யத்தை ஸ்தாபித்தார்கள். டல்ஹௌஸி பிரபு ஆங்கிலேய சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்திப் பலப்படுத்தினார்.

டல்ஹௌஸியின் சீர்திருத்தங்கள்: டல்ஹௌஸி பிரபு நாட் டின் முன்னேற்றத்திற்காக அநேக சீர்திருத்தங்களைச் செய் தார். இதுவரை வங்காளக் கவர்னரே கவர்னர் ஜெனரலாகவு மிருந்து வந்தார். கவர்னர் ஜெனரலுக்கு வேலை அதிகரித்துவிட் டதால், வங்காள ராஜதானியை வேருகப்பிரித்து, அதற்கு ஒரு லெப்டினண்ட் கவர்னரை நியமித்தார். அது மாதிரியாகப் புதி யனவாகச் சேர்க்கப்பட்ட பல மாகாணங்களிலும் லெப்டி னன்ட் கவர்னர்கள் நியமிக்கப்பட்டு, ஆட்சியைச் செவ்வனே கவ னித்து வந்தார்கள். இந்தியாவில் இருப்புப்பாதை முதன்முதல் டல்ஹௌஸி காலத்திலேதான் போடப்பட்டது. கி.பி. 1853ல்

20 மைல் தூரத்திற்கு இருப்புப் பாதை போடப்பட்டது. இப்பொழுது சுமார் 40000 மைல்களுக்குமேல் இருப்புப் பாதைகள் போடப்பட்டிருக்கின்றன. அவர் தந்தி தபால் இலாக்காக்களை ஏற்படுத்தினர். அரையணுத் தபால் முத்திரைகள் ஒட்டினுல் கடிதங்கள் இந்தியா முழுவதும் அனுப்பலாம் என்று ஏற்படுத்தினர். அதனுல், வியாபாரம் முன்னேற்றமடைந்தது. இதற்கு முன் சிவில்ஸர்விஸ் உத்தியோக நியமனங்களைக் கம்பெனியாரே வைத்துக்கொண்டிருந்தனர். டல்ஹௌஸி காலமுதல் ஜாதி மத வித்தியாசமில்லாமல் யாவரும் இங்கிலாந்துக்குச் சென்று படித்துப் பரீக்ஷையில் தேறி, சிவில் ஸர்விஸ் உத்தியோகங்களுக்கு நியமனம் பெறலாம் என்று விதி ஏற்பட்டது.

அவர் காலத்தில் **பொதுவேலை இலாக்கா** என்னும் ஓர் இலாக்கா ஏற்பட்டது. சாலைகள் போடுவதும், கால்வாய் வெட்டுவதும், பாலங்கள் அணைகள் கட்டுவதும், ஏரி குளங்களை மராமத்துச் செய்வதும், பள்ளிக்கூடங்கள், வைத்தியசாலைகள், சத்திரங்கள் சர்க்கார் கட்டடங்கள் முதலிய பொது வேலைகளைக் கவனிப்பதும் இந்த இலாக்காவின் வேலையாகும். ஹார்டிஞ்சு பிரபு காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட கங்கை நதிக்கால்வாய் டல்ஹௌஸி பிரபுவால் பூர்த்தி செய்யப்பட்டது. 18000 மைல் நீளமுள்ள அக்கால்வாயின் மூலம் அநேக ஆயிரம் ஏக்கரா விஸ்தீரணமுள்ள நிலங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. அவர்காலத்தில் துறைமுகப்பட்டினங்களில் தீப ஸ்தம்பங்கள் அமைக்கப்பட்டன.

டல்ஹௌஸி கல்வி அபிவிருத்திக்காக ஒவ்வொரு மாகாணத்திலும் கல்வி இலாக்கா என்று தனி இலாக்காவை ஏற்படுத்தினர். கல்கத்தா, பம்பாய், சென்னைப்பட்டினம் என்னும் நகரங்களில் சர்வ கலாசாலைகளும் ஏற்படுத்தப்பட்டன. பல இடங்களில் உயர்தரக்கலாசாலைகளை ஏற்படுத்தி, ஆங்கிலக் கல்வியைப் பரவச்செய்தார். கிராமங்களில் ஆரம்பப் பாடசாலைகளை ஏற்

படுத்தி அவைகளுக்குத் துரைத்தனத்தார் பொருளுதவி (கிராண்டு) செய்தல் என்னும் ஏற்பாட்டைச் செய்து வைத்தார். இவர் இந்தியர்களை உயர்ந்த உத்தியோகங்களில் நியமித்தார். ஆகையால், இவர் காலத்தில் விவசாயமும், வியாபாரமும், போக்கு வரவும் விருத்தியடைந்தன.

இவ்வாறாக நன்மை தரும் பல சீர்திருத்தங்களையும் செய்துவிட்டுக் கி.பி. 1856ல் இவர் இங்கிலாந்துக்குச் சென்றார்.

கேள்விகள் :

1. பஞ்சாபு எப்பொழுது ஆங்கிலேய சாம்ராஜ்யத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டது? அந்த மாகாணத்தின் அரசியல் சம்பந்தமாக என்ன ஏற்பாடு செய்யப்பட்டது?
2. இரண்டாவது பர்மா யுத்தத்தின் காரணங்கள் எவை? அதன் முடிவில் கம்பெனியாருக்குக் கிடைத்த நாடுகள் எவை?
3. 'லாப்ஸ் கொள்கை' என்பது என்ன? அதை டல்ஹௌஸி மேற்கொண்டதற்குக் காரணம் என்ன? அதனால் கம்பெனியார் எந்த நாடுகளைச் சேர்த்துக்கொண்டனர்?
4. அயோத்தி, பீரார் ராஜ்யங்கள் எவ்வாறு கம்பெனி ஆட்சியின்கீழ் வந்தன?
5. டல்ஹௌஸி செய்த முக்கிய சீர்திருத்தங்கள் எவை?

---

7. கானிங்கு பிரபுவும் சிப்பாய் கலகமும்

டல்ஹௌஸி பிரபுவுக்குப் பின் **கானிங்கு பிரபு** கவர்னர் ஜெனரலாய் வந்தார். அவர் கி. பி. 1856 முதல் 1862 வரை வேலை பார்த்தார். அவர் பதவியேற்ற சில மாதங்களுக்குள் இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சிக்கு விரோதமாய் ஒரு பெரிய கலகம் ஏற்பட்டது. அக்கலகத்தில் ஆங்கிலேய சைனியத்தில் வேலை பார்த்து வந்த சிப்பாய்களே அதிகமாய்க் கலந்துகொண்டதால், அதற்குச் 'சிப்பாய் கலகம்' என்னும் பெயர் ஏற்பட்டது.

கலகத்தின் காரணங்கள்: டல்ஹெளஸி பிரபு கையாண்ட லாப்ஸ் கொள்கையின் மூலம் பல தேச மன்னர்கள் தங்கள் ராஜ்யங்களை இழந்தார்கள். அவர்கள் ஆங்கிலேயருக்குப் பெரிய விரோதிகளாகி, அவர்களுடைய ஆட்சியைத் தொலைக்க விரும்பினார்கள். டல்ஹெளஸி அயோத்தியை ஆங்கிலேய சாம்ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டதால், நவாபின் வமிசத்தினர் ஆங்கிலேயரின்மீது பகைமை கொண்டனர். தாம் செய்துகொண்ட சுவீகாரத்தை அங்கீகரியாமல் தம் ராஜ்யத்தைச் சேர்த்துக்கொண்டதனால் ஜான்ஸி ராணியாரான **லக்ஷ்மிபாய்** ஆங்கிலேயரின்மீது கோபங்கொண்டு, அவர்களுக்கு விரோதமாகக் கலகம்செய்யத் தக்க சமயம் பார்த்துக்கொண்டிருந்தார். கடைசி பீஷ்வா இரண்டாம் பாஜிராவுக்கு ஆங்கிலேயர் கொடுத்து வந்த உபகாரச் சம்பளத்தை அவருடைய சுவீகார புத்திரரான **நானாசாகி**புக்குக் கொடுக்காமல் நிறுத்திவிட்டதால், அவர் ஆங்கிலேய ஆட்சிக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்து வந்தார். டில்லியில் கடைசி மொகலாயச் சக்கரவர்த்தியாரான **பஹதூர்ஷா**வின் பிள்ளைகளை ஆங்கிலேயர்கள் டில்லிக் கோட்டையை விட்டுப் போகும்படி சொன்னதால், அவர்களும் ஆங்கிலேயரிடம் கோபங்கொண்டிருந்தார்கள். பஹதூர்ஷா தாமிழந்த சாம்ராஜ்யத்தையும் பதவியையும் திரும்பவும் அடைய ஆசைகொண்டிருந்தார்.

கானிங்கு பிரபு

பள்ளிக்கூடங்களிலும், வைத்திய சாலைகளிலும், இரயில் வண்டிகளிலும் ஜாதி பேதமின்றி எல்லாரும் ஒன்றுகூட நேரிட்டது. சககமனம் தடை செய்யப்பட்டதாலும், விதவை

கள் புனர் விவாகம் செய்துகொள்ளலாமென்றும் ஓர் இந்து கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய போதிலும் அவனுக்குக் குடும்பக் சொத்தில் பாத்தியதை உண்டென்றும் சட்டங்கள் ஏற்பட்டதாலும், கிறிஸ்தவக் குருமார்கள் தங்களுடைய மதத்தை ஜனங்களுக்குப் போதித்து வந்ததாலும் ஆங்கிலேயர் இந்தியர்களைக் கிறிஸ்தவ மதத்தில் சேர்க்க ஏற்பாடு செய்கிறார்கள் என்று எண்ணினார்கள்.

இந்த நிலைமையில் சிப்பாய்களுக்கும் மன வருத்தம் உண்டாகும்படியான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. கடல் கடந்து பர்மாவுக்குப் போய்ப் போர் புரிய மறுத்ததற்காகப் பல இந்து சிப்பாய்கள் வேலையினின்று நீக்கப்பட்டார்கள். கி. பி. 1856ல் ஒரு புதிய இராணுவச் சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி துரைத்தனத்தார் விரும்பும் எந்த இடத்துக்கும் போய்ப் போர் புரிய சம்மதிக்காத எவரையும் படையில் சேர்க்கக் கூடாது என்னும் நியதி ஏற்பட்டது. அது இந்து சிப்பாய்களிடையே பெரிய கலவரத்தை உண்டாக்கிற்று. அச்சமயத்தில் வங்காளத்திலுள்ளசிப்பாய்களுக்குப் புதிதாகத் துப்பாக்கிகள் அளிக்கப்பட்டன. அவற்றில் வைக்கவேண்டிய தோட்டாக்களின்மேல் ஒருவகைக் கொழுப்புப் பூசப்பட்டிருந்தது. சிப்பாய்கள் அந்தக் கொழுப்பு மாடு பன்றி இவைகளின் கொழுப்பு என்று எண்ணினார்கள். இந்துக்கள் மாட்டைக் கொல்வது பாவம் என்று கருதியதாலும், முஸ்லீம்கள் பன்றி மிக அசுத்தமான மிருகம் என்று கருதியதாலும், சிப்பாய்கள் அந்தத் துப்பாக்கிகளை உபயோகப்படுத்த மறுத்துக் கலகம் செய்ய ஆரம்பித்தார்கள். ஆங்கிலேயரிடத்தில் வெறுப்படைந்து, அவர்களை நாட்டினின்று துரத்திவிட்டுச் சுயேச்சை அடைய எண்ணங்கொண்ட சுதேச மன்னர்களும், பொது ஜனங்களும் இக்கலகத்தில் கலந்து கொண்டார்கள்.

கலகத்தின் வரலாறு: கி.பி 1857-ஆம் வருஷம் ஏப்பிரல் மாதத்தில் **மீரத்தில்** இந்திய வீரர் சிலருக்குப் புதிய தோட்டாக்கள் கொடுக்கப்பட்டன. அவற்றை அவர்கள் தொட மறுத்தார்கள். அவற்றின்மீது கொழுப்புத் தடவப்படவில்லை என்று படைத்தலைவர் சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. அதனால், இராணுவச் சட்டப்படி அந்தப் போர் வீரர்கள் தண்டிக்கப்பட்டார்கள். இச்சம்பவம் இந்திய வீரர்களுக்கு ஆத்திரத்தை மூட்டியது. மேமாதம் 10ஆம் தேதியன்று மீரத்தில் உள்ள சிப்பாய்கள் ஒன்று சேர்ந்து, கலகம் தொடங்கித் தங்கள் மேலதிகாரிகளையும எதிர்ப்பட்ட மற்றைய ஆங்கிலேயர்களையும் சுட்டுக் கொன்றுவிட்டு, சிறைச்சாலைகளைத் திறந்து அவற்றிலிருநத கைதிகளை விடுவித்து, ஊரையும் கொள்ளையிட்டார்கள்; பிறகு டில்லிக்குச் சென்று அங்கிருந்த சிப்பாய்களைச் சேர்த்துக் கொண்டு டில்லியைச் சுலபமாகக் கைப்பற்றிககொண்டு, அங்கிருந்த ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களைக் கொன்றுவிட்டார்கள். வெடி மருந்துச் சாலையை அவர்கள் கைப்பற்ற முயன்றார்கள். அது கலகக்காரர் வசமானால் நிலைமை மோசமாகி விடுமென்று அறிந்த ஆங்கிலேய வீரர்கள் வெடி மருந்துக்கு நெருப்பு வைத்துக் கொளுத்திவிட்டார்கள். பிறகு கலகக்காரர்கள் டில்லி அரண்மனைக்குப் போய், அங்கு உபகாரச் சம்பளம் பெற்று வாழ்ந்து வந்த **பகதூர்ஷா**வைச் சிம்மாசனத்தில் ஏற்றி, இந்தியாவின் சக்கரவர்த்தியார் அவரே என்று விளம்பரம் செய்தார்கள்.

பின்பு இக்கலகம் வெகு துரிதமாக அயோத்தி ரோஹில் கண்டு முதலிய இடங்களிலும், ராஜபுதனம் குவாலியர் முதலிய இடங்களிலும் பரவியது. பண்டல்கண்டில் ஜான்ஸி ராணியார் தலைமை பூண்டு கலகம் செய்தார். அநேக ஆங்கிலேயர் கொல்லப்பட்டனர். **கான்பூ**ரில் நானாசாகிபு கலகக்காரர்களுக்குத் தலைவரானார். கான்பூரிலிருந்து படகுகளிலேறி அல

காபாதிற்குத் தப்பிச் செல்ல முயன்ற ஆங்கிலேயரைச் சிப்பாய்கள் சுட்டுக் கொன்றூர்கள். பின்னர் அவர்கள் **லக்னே**வைப் பிடித்துக்கொண்டு நானுசாகிபைப் பீஷ்வா என்று விளம்பரம் செய்தார்கள். அங்கு ஸ்தானிகராயிருந்த **ஸர் ஹென்றி லாரென்ஸ்** என்பவரின் இருப்பிடத்தைத் தாக்கினுர்கள். நடந்த சண்டையில் **ஸர் ஹென்றி லாரென்ஸ்** சுடப்பட்டு இறந்தார்.

கான்பூரில் கலகம் மிகவும் பலத்துப் போய்விட்டதனுல், ஆங்கிலேயர்கள் முதலில் **ஜெனரல் ஹாவ்லக்கு** என்பவர் தலைமையின்கீழ்க் கான்பூரைக் கைப்பற்ற ஒரு படையை அனுப்பினுர்கள். போகும் வழியிலேயே கலகக்காரர்கள் அப்படையைத் தாக்கிக் கடுமையாகப் போர் புரிந்தார்கள். ஆனுல், ஆங்கிலேயர் வெற்றியடைந்து கான்பூரை அடைந்தனர். நானுசாகிபு நாட்டைவிட்டு ஓடிவிட்டார். அவர் நேப்பாளத்திலுள்ள காடுகளில் மறைந்திருந்த பொழுது ஒரு புலியால் கொல்லப்பட்டார் என்று சொல்லப்படுகிறது.

பிறகு **ஜெனரல் ஹாவ்லக்கு, நீல், மேஜர் ஔட்ராம்** என்னும் ஆங்கிலேய சேனுதிபதிகள் ஒரு பெரும்படையுடன் லக்னேவுக்கு வந்தார்கள். சிப்பாய்கள் இப்படையை எதிர்த்துப் போர் செய்தார்கள். **நீல்** என்ற ஆங்கில தளகர்த்தர் இச்சண்டையில் கொல்லப்பட்டார். சிப்பாய்கள் தோல்வியுற்ற போதிலும் லக்னேவிலுள்ள ஸ்தானிகரின் இருப்பிடத்தைச் சூழ்ந்து கொண்டு, சுமார் இரண்டு மாத காலம் முற்றுகை செய்தனர். நேப்பாள மந்திரியாரான **ஸர் ஜாலர் ஜங் பகதூர்** என்பவர்ஆங்கிலேயருக்கு உதவியாக ஒரு கூர்க்கப் படையை அனுப்பினுர். அதை நடத்திச் சென்ற **ஸர் காலின் காம்பெல்** லக்னேவிற்கு வந்து, சிப்பாய்களைத் தோற்கடித்து, முற்றுகையை நீக்கினுர். பின்பு அவர் ஐக்கிய மாகாணத்திலிருந்த கோட்டைகளையெல்லாம் கலகக்காரர்களிடமிருந்து கைப்பற்றினுர்.

மற்ற இடங்களைவிட டில்லியிலேதான் கலகம் அதிகமாய் ஏற்பட்டது. ஆங்கிலேயர் தமது ஆதிக்கத்தையும் பெருமை யையும் நிலைநிறுத்த டில்லியை மறுபடியும் கைப்பற்ற வேண்டுவது அவசியமாயிற்று. அதற்கேற்றபடை பஞ்சாபிலிருந்துதான் வரவேண்டியிருந்தது. அதிர்ஷ்ட வசமாகப் பஞ்சாபிலும் எல்லைப்புறத்திலும் கலகம் பரவவில்லை. ஆகையால், பஞ்சாபிலிருந்த **ஸர் ஜான் லாரென்ஸ்,** எல்லைப்புற மாகாணத்திலிருந்த **நிக்கல்ஸன்** என்பவரின் தலைமையின்கீழ், சீக்கர்களும், பட்டாணியர்களும் ஆங்கிலேயர்களும் அடங்கிய ஒருபடையை டில்லி



டில்லிக்கோட்டை

யைக் கைப்பற்ற அனுப்பினர். ஆறு நாள் வரை டில்லியில் கொடிய சண்டை நடந்தது. நிக்கல்ஸன் எதிரிகளால் கொல்லப்பட்டார். கலகக்காரர்கள் வீராவேசத்துடன் போர் புரிந்த போதிலும் கடைசியில் தோற்கடிக்கப்பட்டார்கள். ஆங்கிலேய சைனியம் டில்லியைக் கைப்பற்றிக்கொண்டது. பஹதூர் ஷா கைது செய்யப்பட்டு, பர்மாவுக்கு அனுப்பப்பட்

டார். அங்குக் கி. பி. 1862ல் அவர் இறந்தார், அவருடைய இரு குமாரர்களும் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

மத்திய இந்தியாவில் ஜான்ஸி ராணியார் கலகத்திற்குத் தலைமை வகித்தார். நானா சாகிபின் சேனைத்தலைவரான **தாந்தியா தோபி** என்பவரும் ஜான்ஸி ராணியாருடன் ஒன்று சேர்ந்து ஆங்கிலேயருக்கு அனுகூலமாயிருந்த ஸிந்தியாவைத் தோற்கடித்து, அவரிடமிருந்து **குவாலியர்க்** கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டார். பம்பாயிலிருந்து **ஸர் ஹியூ ரோஸ்** என்பவர் தலைமையின்கீழ் ஒரு சேனையும், சென்னையிலிருந்து **விட்லாக்கு** என்பவர் தலைமையின்கீழ் ஒரு சேனையும் அனுப்பப்பட்டன. அவர்கள் கலகக்காரரைத் தோற்கடித்துக் குவாலியர்க்கோட்டையைப் பிடித்துக்கொண்டார்கள். தாந்தியா தோபி கைது செய்யப்பட்டுத் தூக்கிலிடப்பட்டார். ஜான்ஸி ராணியார் ஆண் வேடம் தரித்து, குதிரைமீதேறி, வீரா வேசத்துடன் சண்டை செய்து, யுத்த களத்தில் மாண்டார். கடைசியில் ஜான்ஸிக் கோட்டையும் ஆங்கிலேயரால் பிடிக்கப்பட்டது. கலகக்காரர்களின் தலைவர்கள் எல்லாம் கைதி செய்யப்பட்டு, மரண தண்டனையடைந்தார்கள். இத்துடன் கலகம் அடங்கி, அமைதி ஏற்பட்டது.

கலகம் அடக்கப்பட்டதற்குக் காரணங்கள்: இவ்வாறு கலகம் எளிதில் அடக்கப்பட்டதற்குப் பல காரணங்கள் உண்டு:

கலகத்தில் சம்பந்தப்பட்ட தலைவர்களுக்குள் ஒற்றுமையும் கட்டுப்பாடும் இல்லை. அவர்கள் ஒன்று சேர்ந்து ஒரே சமயத்தில் கலகத்தை ஆரம்பிக்காமல், தனித்தனியாகப் பல விடங்களில் ஆங்கிலேயரை எதிர்த்தார்கள். ஓரிடத்தில் கலகம் அடங்கியதும் மற்றோரிடத்தில் ஆரம்பமாயிற்று. அதனால், கலகங்களை அடக்குவது ஆங்கிலேயருக்கு எளிதாயிற்று. மேலும், இக்கலகத்தில் அதிகமாகப் பொது ஜனங்கள் கலந்து கொள்ளவில்லை. கலகம் சென்னை மாகாணத்திலோ, பம்பாய்

மாகாணத்திலோ பரவவில்லை. பஞ்சாபுமாகாணத்தில் ஸர்ஜான் லாரன்ஸ் சீக்கர்களைக் கலகத்தில் சேராதபடி செய்ததுமன்றி ஒரு படையையும் அனுப்பி வைத்தார். பல பெரிய சுதேச மன்னர்கள் கிளர்ச்சியில் சேரவில்லை. நிஜாம், ஸிந்தியா, நேப்பாள தேச மன்னர் ஆகியவர்கள் கலகத்தை அடக்குவதற்கு ஆங்கிலேயருக்கு உதவி செய்தார்கள். ஆப்கானிஸ்தான அமீரான **தோஸ்து முகம்மது** அங்கிலேயருடன் நட்புக்கொண்டிருந்தமையால், அவர் கலகக்காரர்களுக்கு உதவி புரியவில்லை. ஆங்கிலேய தளகர்த்தர்களான ஹாவலக்கு, நிக்கல்ஸன், ஹியூரோஸ் முதலியவர்கள் மிக்க திறமையுள்ளவர்கள்.

தவிரவும், கானிங்கு பிரபு புத்திசாலித்தனமாகவும் தயையுடனும் நடந்துகொண்டு, கலகக்காரர்களை அடக்கக் கொடிய முறைகளைக் கையாளமறுத்தார். ஆங்கிலேயர்களில் பலர் கலகக்காரர்களின்மீது பழிக்குப் பழி வாங்கவேண்டுமென்று வற்புறுத்தினர். ஆனல், கானிங்கு அதற்கு இசையாமல், சரணமடைந்த கலகக்காரர்களையெல்லாம் மன்னித்தார். ஆகையால்,ஆங்கிலேயர்கள் அவரை ஏளனமாகக்**'காருணியக் கானிங்கு'** என்று வழங்கினர்கள். இந்தியர்கள் அப்பெயராலேயே அவரைப் போற்றினர்கள்.

கேள்விகள் :

1. சிப்பாய் கலகத்திற்கு முக்கிய காரணங்கள் யாவை ?
2. கலகத்தின் முக்கிய சம்பவங்கள் யாவை ?
3. கலகம் எளிதில் அடக்கப்படக் காரணங்கள் யாவை ?

8. விக்டோரியா மகாராணியாரின் சாஸனம்

சிப்பாய் கலகத்தின் விளைவாக இந்தியாவில் கம்பெனியாரின் ஆட்சி முடிவு பெற்றது. கம்பெனியாரின் ஆட்சி இந்தியர்களுக்குத் திருப்தியளிக்கவில்லையென்று கருதி, கி. பி. 1858ல் இங்கிலாந்திலுள்ள பார்லிமெண்டு சபையார் ஒரு புதிய இந்தியச் சட்டத்தைப் பிறப்பித்தார்கள். அதன்படி இந்தியாவில் கிழக்கிந்திய கம்பெனியாரின் ஆட்சிமுடிவிற்குக் கொண்டுவரப்பட்டது. ஆங்கில அரசாங்கத்தாரே இந்தியாவில் கம்பெனியாருக்குச் சொந்தமான நாடுகளை அரசாளுவது என்னும் ஏற்பாடாயிற்று. ஆகவே அப்பொழுது இங்கிலாந்தை ஆண்டு வந்த விக்டோரியாராணியார், இந்தியாவிற்கும் மகாராணியாரானார். இந்தியாவின் அரசியலைக் கவனிப்பதற்கு இங்கிலாந்தில் **இந்தியக் காரிய துரிசியார்** ஒருவர் (Secretary of State for India) நியமனம் செய்யப்பட்டார். அவர் இந்தியாவைப் பற்றின விஷயங்களில் பார்லிமெண்டுக்குப் பொறுப்பானவர். அவர் ஆங்கிலேயத் துரைத்தன மந்திரிகளில் ஒருவர். அவருக்கு உதவியாகப் பதினைந்து அங்கத்தினர்களடங்கிய **இந்தியா கவுன்ஸில்** என்னும் சபை ஏற்

விக்டோரியா மகாராணியார்

படுத்தப்பபட்டது. இந்தியாவின் கவர்னர் ஜெனரலுக்கு **ராஜப் பிரதிநிதி** (வைஸ்ராய்) என்ற பெயர் கொடுக்கப்பட்டது. அவரது அதிகாரத்துக்கு உட்பட்டு மாகாணங்களை ஆட்சி செய்யக் கவர்னர்கள் ஆங்கிலமன்னரால் நியமனம் செய்யப்படுவார்கள். இச்சட்டத்தின்படி அப்பொழுது கவர்னர் ஜெனரலாயிருந்த கானிங்கு பிரபுவே முதல் வைஸ்ராய் ஆனார்.

மகாராணியாரின் சாஸனம்: கி.பி. 1858-ஆம் வருஷம் நவம்பர் மாதம் முதல் தேதியில் விக்டோரியா மகாராணியார் இந்தியாவின் அரசாட்சியை நேரே ஒப்புக்கொண்டார். அச்சமயம் அவர் இந்தியர்களுக்கு ஒரு சாஸனத்தை விளம்பரம் செய்தார். அதன் முக்கிய அமிசங்கள் பின் வருவன:—

"இதுவரையில் கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தார் நடத்தி வந்த இந்திய அரசாட்சியை இனி நாம் நடத்த ஒப்புக்கொண்டிருக்கிறோம். நமது இந்திய பிரஜைகள் நம்மிடத்தில் அன்பும் அபிமானமும் உடையவர்களாய் இருக்கவேண்டுமென்று நாம் கோருகிறோம்.

"கம்பெனியார் இந்திய சிற்றரசர்களோடு செய்துகொண்ட உடன்படிக்கைகளையெல்லாம் நாம் சிறிதும் பிசகாது காப்பாற்றுவோம். இந்திய அரசர்களுக்குரிய சுதந்திரங்களையும் கௌரவத்தையும் நம்முடையவை போலப் பாராட்டுவோம்.

"நாட்டிலுள்ள இந்திய அரசர்களைத் தொலைத்துவிட்டு அவர்களுடைய நாடுகளைக் கைக்கொண்டு நமது சாம்ராஜ்யத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டுமென்னும் எண்ணம் நமக்குச் சிறிதும் இல்லை. பிள்ளையில்லாத அரசர்கள் தங்களிஷ்டம் போல ஸ்வீகாரம் செய்துகொள்ளலாம். எந்த விதமான மத பேதத்தின் காரணமாகவும் நாம் நம் பிரஜைகளைப்பகைக்காமல், அனைவரிடத்திலும் ஒரே விதமான அன்பு வைத்துச் சட்டப்படி ஆட்சி செய்து வருவோம்.

"எல்லா மதஸ்தர்களுக்கும் யாதொரு வகையான வித்தியாசமும் இன்றி, அவரவர்களுடைய யோக்கியதைக்கும் கல்வி அறிவிற்கும் தகுந்தவாறு உத்தியோகங்கள் கொடுக்கப்படும்.

"கடவுள் கிருபையால் மற்படியும் சமாதானம் உண்டான பிறகு இந்திய நாட்டின் கைத்தொழில்களை விருத்தி செய்வதும், ஜனங்களின் பொது நன்மைக்கு வேண்டிய பல வேலைகளைச் செய்வதும், தேசத்தை அதன் குடிகளின் நன்மையை நாடி ஆட்சி செய்வதுமே நமது மனப்பூர்வமான விருப்பம் ஆகும்.''

இவ்வாறு மகாராணியாருடைய சாஸனத்தில் இந்தியர்களின் உரிமைகள் கூறப்பட்டிருந்ததால் இச்சாஸனம் இந்திய மக்களால் பெருமகிழ்ச்சியுடன் வரவேற்கப்பட்டது. டல்ஹௌஸியின் 'லாப்ஸ் கொள்கை' மகாசாஸனத்தால் ரத்துச் செய்யப்பட்டதாலும், விக்டோரியா மகாராணியார் சுதேச மன்னர்களுக்கும் இந்திய மக்களுக்கும் கொடுத்த வாக்குறுதியாலும் அவர்கள் ஆங்கிலேயரின்மீது கொண்டிருந்த வெறுப்பை மறந்து, அன்பு பாராட்டி நடக்கலானார்கள்.

1858-ஆம் வருஷம் நவம்பர் மாதம் 1-ஆம் தேதி கானிங்கு பிரபு அலஹாபாதில் ஒரு பெரிய தர்பாரைக் கூட்டி, மேற்கூறிய சாஸனத்தை விளம்பரப்படுத்தினார். இந்தியாவிலுள்ள முக்கிய பட்டணங்களில் எல்லாம் அந்தச் சாஸனம் அதே தினத்தில் பிரசுரம் செய்யப்பட்டது.

கேள்விகள் :

1. கம்பெனியாரின் இந்திய அரசாட்சி எப்பொழுது எங்ஙனம் முடிவுற்றது ?
2. இந்திய அரசாங்கத்தைக் கவனிப்பதற்காகப் பார்லிமெண்டார் செய்த ஏற்பாடுகள் எவை ?
3. மகாராணியாரின் சாஸனத்தில் கண்டுள்ள முக்கிய விஷயங்கள் யாவை ?

9. இந்தியாவில் ஆங்கில அரசர்களின் நேர் ஆட்சி

கானிங்கு பிரபு—முதல் வைஸ்ராய் (கி. பி. 1858–62)

ஆங்கில அரசாங்கத்தார் கி.பி. 1858ல் இந்தியாவின் அரசாட்சியை ஏற்றுக்கொண்ட பின் அவர்கள் இந்தியாவில் அமைதியைப் பரவச் செய்ய வேண்டும் என்று எண்ணங் கொண்டார்கள். விக்டோரியா மகாராணியாரின் சாஸனம் இந்தியர்களுக்கு ஆறுதலளித்தது. மேலும், முதல் ராஜப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட கானிங்கு பிரபு, இந்தியர்களிடம் மிக்க அன்புடனும் நீதியுடனும் சுமார் 5 வருஷம் உத்தியோகம் வகித்தார். சுதேச மன்னர்கள் ஆண் வாரிசு இல்லாவிட்டால் சுவீகாரம் செய்துகொள்ளலாம் என்று கானிங்கு தெரிவித்தார். மகாராணியாரின் சாஸனப்படி, நாடு சேர்க்கும் முறை முற்றிலும் கைவிடப்பட்டு, அந்நியர்கள் இந்தியாவின் மீது படையெடுக்காமல் தடுப்பதற்காக எல்லைப்புறங்களைப் பாதுகாப்பதிலும் நாட்டின் நன்மைக்கான பல சட்ட திட்டங்களைச் செய்வதிலும் வைஸ்ராய்கள் தங்கள் கவனத்தைச் செலுத்தினார்கள்.

துரைத்தனச் சீர்திருத்தங்கள்: கானிங்கு பிரபு நாட்டில் அமைதியைப் பரவச் செய்ததோடு பல சீர்திருத்தங்களையும் செய்தார். சிப்பாய் கலகத்தினால் ஆங்கிலேயருக்குச் சுமார் ஐம்பது கோடி ரூபாய் செலவு ஆயிற்று. அரசாங்க வருமானத்தை அதிகப்படுத்தி அந்த நஷ்டத்தைச் சரிப்படுத்துவதற்காகமுதன் முதலாக வருமான வரி விதிக்கப்பட்டது. சென்னை, பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களில் சர்வகலாசாலைகள் ஏற்படுத்தப்பட்டன. அதனால், இந்தியர்களிடை உயர்தரக்கல்வி பரவலாயிற்று. கி.பி. 1861ல், வைஸ்ராயின் கௌன்ஸிலுக்கு உத்தியோகஸ்தர்கள் அல்லாதவர்களும் அங்கத்தினராக நியமிக்கப்படலாம் என்று ஒரு புதிய சட்டம் செய்யப்பட்டது. கவர்னர்

களுடைய நிர்வாகத்திற்குட்பட்ட மாகாணங்களிலும் இம் மாதிரியான சிறிய சபைகள் ஏற்படுத்தப்பட்டன. அதன் அங்கத்தினர் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டனர். **ஹை கோர்ட்டுகள்** என்னும் உயர் நீதி மன்றங்கள் சென்னை, பம்பாய், கல்கத்தா நகரங்களில் ஏற்படுத்தப்பட்டன. ஜில்லா நீதிபதி களின் தீர்ப்புக்களுக்குமேல் ஹைகோர்டுக்கு அப்பீல் செய்து கொள்ளலாம் என்றும், ஹைகோர்ட்டுத் தீர்ப்புக்களில் திருப்தி அடையாதவர்கள் இங்கிலாந்திலுள்ள **பிரிவிகௌன்ஸி** லுக்கு அப்பீல் செய்துகொள்ளலாம் என்றும் விதி ஏற்பட்டது. நீதி பரிபாலனம் ஒழுங்காய் நடைபெறுவதற்குச் **சிவில் புரோஸீ ஜர் கோடு, கிரிமினில் புரோஸீஜர்கோடு, இந்தியன் பினல்கோடு** என் னும் சட்டங்கள் இயற்றப்பட்டன. கானிங்கு பிரபு கி.பி. 1859ல் **வங்காளப் பண்ணை முறைச்சட்டம்** என்பதை ஏற்படுத்தி, 12 வரு ஷங்களுக்குமேல் நிலத்தைப் பயிர் செய்து வந்த குடியானவர் கள் செலுத்தி வந்த குத்தகையை ஜமீந்தார்கள் தங்களிஷ்டம் போலக் கூட்டக்கூடாது என்று திட்டம் செய்தார். கானிங்கு பிரபு காலத்தில் பலபுதிய இரயில் பாதைகளும் சாலைகளும் ஏற் பட்டன. இவ்வாறு கானிங்கு பிரபு பல நன்மையான சீர்திருத் தங்களைச் செய்து, நாட்டில் அமைதியை நிலைநாட்டிவிட்டு கி. பி. 1862ல் இங்கிலாந்திற்குச் சென்றார்.

கானிங்கு பிரபுவுக்குப் பிறகு **எல்ஜின் பிரபு** என்பவர் ராஜப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். அவர் ஒரு வருஷத்திற்குள் இறந்துவிட்டபடியால், பஞ்சாபு துரைத்தனத்தைத் திறமை யுடன் நடத்தி வந்த **ஸர் ஜான் லாரென்ஸ்** வைஸ்ராயாக நியமிக் கப்பட்டார். அவர் யுத்தங்களில் பிரியமில்லாது, அமைதியுடன் ஆட்சிபுரிய விரும்பினர். அவர் ஜனங்களிடத்தில் அன்புகொண்டு இந்தியாவின் பணத்தை இந்தியாவுக்கு வெளியில் நடக்கும் யுத் தங்களுக்குச் செலவு செய்யக்கூடாது என்று தடுத்து வந்தார். அவர் காலத்தில் ஆப்கானிஸ்தானத்தை ஆண்டு வந்த **தோஸ்து**

முகம்மது மரணமடைந்தார். 1863ல் பட்டத்தைக் குறித்து அவர் குமாரர்களுக்குள் கலகம் ஏற்பட்டது. அவர்களுள் ஒருவரான **ஷேர் ஆலி** வைஸ்ராயின் உதவியை நாடினார். ஆனால், லாரென்ஸ் பிரபு அனுவசியமாக வெளிநாட்டு விவகாரங்களில் தலையிட்டுக்கொள்ள விரும்பவில்லை. கடைசியில் 1868ல் ஷேர் ஆலி தாமே யுத்தம் செய்து வெற்றிபெற்றுச் சிம்மாசனம் ஏறினார். லாரென்ஸ் அவரை அமீராக ஒப்புக்கொண்டு அவருடன் நட்புக்கொண்டார்.

அவர் காலத்தில் **பூடான்** அரசருடன் யுத்தம் ஏற்பட்டது. அதில் ஆங்கிலேயோர் ஜயித்து, பூடான் நாட்டின் ஒரு பகுதியைப் பெற்றனர். கானிங்கு பிரபுவைப் பின்பற்றி லாரென்ஸ் பிரபு **பஞ்சாபு பண்ணை முறைச் சட்டம், அயோத்தி மாகாணப் பண்ணை முறைச் சட்டம்** முதலிய சட்டங்களை ஏற்படுத்திக் குடியானவர்களுக்கு நன்மை செய்தார்.

அவரது ஆட்சியில் கி. பி. 1866-ஆம் ஆண்டில் ஒரிஸ்ஸா மாகாணத்தில் ஒரு கொடியபஞ்சமும், கி.பி. 1869-ஆம் ஆண்டில் ராஜபுதனத்திலும் பண்டல்கண்டிலும் ஒரு பஞ்சமும் ஏற்பட்டு அநேக ஜனங்கள் பசியால் வருந்தி மடிந்தார்கள். அப்பொழுது லாரென்ஸ் ஜனங்களுக்கு மிகுந்த நன்மை செய்து, அவர்களைப் பாதுகாத்தார். அதுமுதல் நாட்டில் பஞ்சம் ஏற்படாதிருக்க ஏற்பாடுகளும், ஏற்பட்டால் ஜனங்களின் துன்பத்தைப் போக்கப் பலவழிகளும் செய்யப்பட்டு வந்தன. இரயில் பாதைகள் ரஸ்தாக்கள் முதலிய போக்கு வரவு சாதனங்களும், அணைக்கட்டுகள் கால்வாய்கள் முதலிய நீர்ப்பாசன வசதிகளும் ஆரம்பிக்கப்பட்டன, லாரென்ஸ் பிரபுவின் ஆட்சியின் முடிவில் **சூயஸ் கால்வாய், பெர்டினண்டு டி லெஸெப்ஸ்** என்னும் பிரெஞ்சு இஞ்சினீயரால் கட்டி முடித்துத் திறக்கப்பட்டது. கி. பி. 1869ல் லாரென்ஸ் பிரபு இங்கிலாந்து சென்றார்.

கேள்விகள் :

1. இந்தியாவின் முதல் வைஸ்ராய் யார்?
2. கானிங்கு பிரபு செய்த சீர்திருத்தங்கள் யாவை?
3. லாரென்ஸ் பிரபுவின் காலத்தில் நடந்த முக்கிய சம்பவங்கள் எவை?

---

10. மேயோ பிரபுவும் பொருளாதாரச் சீர்திருத்தங்களும்

மேயோ பிரபு கி. பி. 1869 முதல் 1872 வரையில் வைஸ்ராயாய் இருந்தார். அந்த மூன்று வருஷங்களில் அவர் அநேக சீர்திருத்தங்களைச் செய்தார். அவைகளில் பொருளாதாரச் சீர்திருத்தம் மிகவும் முக்கியமானது.

மேயோ பிரபு

அவரது காலத்திற்கு முன்பு மாகாணங்களின் வரவு செலவுகள் ராஜப்பிரதிநிதியின் பொறுப்பில் இருந்தன. மாகாணக் கவர்ன்மெண்டார் வரிகளை வசூலித்து வந்த போதிலும், அவர்கள் தங்கள் மாகாணச் செலவிற்கு ஒவ்வொரு வருஷமும் கவர்னர் ஜெனரலின் அனுமதி பெற்றே செலவழிக்க வேண்டும். வருஷக் கடைசியில் ஒவ்வொரு மாகாணத்திலும் மீதியிருக்கும் தொகையை இந்திய சர்க்காரிடம் கொடுத்துவிட வேண்டும் என்று நியதி இருந்தது. எந்த மாகாணச் சர்க்காருக்காவது செலவுக்குப் பணம் போதாமலிருந்தால், மத்தியசர்க்கார் வேண்டிய பணத்தைக் கொடுத்துவந்தது. அதனால், அந்த மாகாணங்களின் கவர்னர்கள் பொறுப்பின்றித் தம் செலவை

அதிகப்படுத்திக்கொண்டு வந்தார்கள். ஆகையால், மாகாணங்களின் செலவினங்கள் வரவுக்குமேல் காணப்பட்டன. மாகாண கவர்னர்கள் மத்திய அரசாங்கத்தாரிடமிருந்து எவ்வளவு அதிகமானதொகையைப்பெறமுடியுமோ, அவ்வளவு தொகையையும் பெற முயன்று வந்தார்கள். இதனுல், மத்திய அரசாங்கத்தார் மாகாணத் துரைத்தனத்தாருக்குக் கொடுக்கவேண்டிய உதவிப் பணம் நாளுக்குநாள் அதிகரித்தது. இக்குறையைப் போக்க மேயோ பிரபு ஒவ்வொரு மாகாணத்திற்கும் வரவு செலவு திட்டம் வகுத்தார்; ஒவ்வொரு மாகாண அரசாங்கத்தாரும்துரைத்தனச் செலவிற்கு வேண்டிய பணத்தைத் தாங்களே தேடிக் கொள்ள வேண்டுமென்று ஏற்பாடு செய்தார். நில வரியையும் வேறு சில வரிகளையும் மாகாணக் கவர்னர்களின் பொறுப்பில் ஒப்புவித்து, அவைகளைத் தவிர மத்திய அரசாங்கத்தின் வருமானத்திலிருந்து ஒவ்வொரு மாகாணத்திற்கும் வருஷந்தோறும் எவ்வளவுபணம் கொடுக்கப்படும் என்பதையும் நிர்ணயித்தார். வரவில் செலவு போக மீதியிருந்தால், அதை முன்போலமத்திய அரசாங்கத்துக்குக் கொடுக்க வேண்டுவதில்லை; அந்தந்த மாகாண அரசாங்கத்தாரே வைத்துக்கொள்ளலாம் என்று ஏற்பாடு செய்தார். அதனுல், மாகாண சர்க்கார்கள் தங்கள் செலவில் சிக்கன முறைகளைக் கையாள வேண்டுவது அவசியமாயிற்று. சில மாகாணஅரசாங்கத்தார்கள் வரிகளை உயர்த்தும்படி நேரிட்டது. மாகாணங்களுக்கு இலாபம் தரக்கூடிய பொது வேலைகளுக்காகக் கடன் வாங்க உரிமை அளிக்கப்பட்டது. இந்த ஏற்பாடுகளினுல், மத்திய அரசாங்கத்தாரின் பணக் கஷ்டம் நீங்கியது. அவர்களின் செலவைவிட வருமானம் அதிகமாகிப் பணம் மிஞ்சியது.

மேயோ பிரபு ஜனங்களின் நன்மைக்காகப் பல காரியங்களைச் செய்தார். விவசாய அபிவிருத்திக்காக விவசாய இலாக்கா புதிதாக ஏற்படுத்தப்பட்டது. பொது வேலை இலாக்கா திருத்தி

அமைக்கப்பட்டது. பல புதிய இருப்புப் பாதைகளும், ரஸ்தாக்களும், கால்வாய்களும் அமைக்கப்பட்டன. சுதேச மன்னர்களின் குமாரர்கள், கல்வி கற்பதற்காக அஜ்மீர் என்னுமிடத்தில் ஒரு கலாசாலை ஏற்படுத்தப்பட்டது. அவர் காலத்திலேதான் முதல்முதலாக **ஜனத் தொகை**யைக் கணக்கெடுக்கும் வழக்கம் ஆரம்பமாயிற்று. அது முதலாகத்தான் பத்து வருஷங்களுக்கு ஒருமுறை ஜனத்தொகைக் கணக்கு எடுக்கப்பட்டு வருகிறது. அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்காகக் கானிங்கு பிரபு காலத்தில் விதிக்கப்பட்டிருந்த வருமான வரியை அதிகப்படுத்தினர். உப்பின்மீது விதிக்கப்பட்டிருந்த வரியும் உயர்த்தப்பட்டது.

மேயோ பிரபு ஆப்கானிய அமீரோடும், இந்தியாவின் எல்லைப்புறங்களிலிருந்த யார்கண்டு, நேப்பாளம், பர்மா முதலிய தேசங்களின் அரசர்களோடும் நட்புக்கொண்டார். அவர் இந்தியாவுக்கு வந்து இரண்டு மாதங்களுக்குள் **அம்பாலா**வில் ஒரு தர்பாரை நடத்தி, ஆப்கானிய அமீரான ஷேர் ஆலியை வரவேற்றார். அவருக்கு ஆங்கிலேயர் ஏற்கனவே வாக்களித்திருந்தபடி லக்ஷம் பவுன் இனாமாகக் கொடுத்தார். மேலும், அவருக்கு வேண்டும்போது ஆதரவும் உதவியும் அளிப்பதாக மேயோ பிரபு கூறினர். ஆப்கானிஸ்தானத்திற்கும் இந்தியாவுக்கும் இடையில் எல்லையை வரையறுத்து ஏற்படுத்தினர். இவற்றால் ஷேர் ஆலி சந்தோஷமடைந்து தம் நாடு திரும்பினர்.

மேயோ பிரபு கி. பி. 1872ல் அந்தமான் தீவுகளிலுள்ள சிறைச்சாலைகளைப் பார்வையிடச் சென்றபொழுது ஒரு கைதியால் கொலை செய்யப்பட்டு இறந்தார்.

நார்த்புருக்குப் பிரபு (கி. பி. 1872–76) :—மேயோவுக்குப் பிறகு நார்த்புருக்குப் பிரபு வைஸ்ராய் ஆனர். அவர் ஏற்றுமதி இறக்குமதி வரிகளை நீக்கினர். அவர் காலத்தில் வங்காளத்தில் ஒரு பஞ்சம் ஏற்பட்டது. அப்போது நார்த்புருக்கு ஏராளமான

பணத்தைச் செலவிட்டும், அநேக பொது வேலைகளை நடத்தி ஜனங்களுக்கு வேலை கொடுத்தும், அரசாங்கத்திலிருந்து இலவசமாகத் தானியம் கொடுத்தும் குடிகளைக்காப்பாற்றினார். ருஷியர்கள் தங்கள் ஆதிக்கத்தைக் கிழக்கில் பரப்பி வந்ததைக் கண்டு பயந்து ஆப்கானிஸ்தான அமீரான ஷேர் ஆலி ஆங்கிலேயருடன் ஒரு பரஸ்பர உபகார உடன்படிக்கை செய்து கொள்ள முயன்றார். ஆனால், நார்த்புருக்குப் பிரபு அதற்குச் சம்மதிக்கவில்லை. அவர் காலத்தில் விக்டோரியா மகாராணியாரின் மூத்த குமாரரும் வேல்ஸ் இளவரசருமான ஏழாவது எட்வர்டு இந்தியாவுக்கு விஜயம் செய்து நாடு முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்தார். நார்த்புருக்குப் பிரபு கி. பி. 1876ல் தமது வேலையை ராஜிநாமா செய்துவிட்டு, இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றார்.

கேள்விகள் :

1. மாகாண அரசாங்கங்களின் வரவு செலவு சம்பந்தமாக மேயோ பிரபு என்ன சீர்திருத்தம் செய்தார் ?
2. மேயோ பிரபு பொது ஜனங்களுக்குச் செய்த நன்மைகள் யாவை ?
3. மேயோ பிரபு எவ்வாறு ஆப்கானிய அரசரின் நட்பைப் பெற்றார் ?
4. நார்த்புருக்குப் பிரபு காலத்தில் ஏற்பட்ட முக்கிய நிகழ்ச்சிகள் யாவை ?

11. லிட்டன் பிரபுவும் இரண்டாம் ஆப்கானிய யுத்தமும்

நார்த்புருக்குப் பிரபுவிற்குப் பிறகு **லிட்டன் பிரபு** கி.பி. 1876 முதல் 1880 வரையில் நான்கு வருஷங்கள் வைஸ்ராயாய் இருந்தார். அவர் வைஸ்ராயான வருஷத்திலேதான் விக்டோரியா மகாராணியார் **இந்தியாவின் சக்கரவர்த்தினியார்** என்ற பட்டத்தை வகித்துக்கொண்டதாக ஓர் அறிக்கை வெளியிட்டார். அதைக் கொண்டாடுவதற்காக லிட்டன் பிரபு ஒரு பெரிய தர்பார் நடத்தினர். அச்சமயத்திலேதான் சென்னை மாகாணத்தில் ஒரு கொடிய பஞ்சம் ஏற்பட்டது. அந்தப் பஞ்சத்தைத்தான் **'தாது வருஷப் பஞ்சம்'** என்று சொல்லுவார்கள். அதனுல், ஐம்பது லக்ஷம் மக்கள் உணவின்றி மடிந்தார்கள். அக்காலத்தில் இப்பொழுதிருப்பதுபோல ரயில்பாதைகள் இல்லாததால் உணவுப் பொருள்கள் வேறிடங்களிலிருந்து சீக்கிரமாக வந்து சேர மார்க்கமில்லை. ஆனுல், லிட்டன் பிரபு பஞ்சத்தை ஒழிக்க ஒரு கோடி ரூபாய்க்கு மேலாகச் செலவு செய்தார். ஜனங்களுக்கு வேலைகொடுப்பதற்காக, **பக்கிங்காம்** கால்வாய் வெட்டப்பட்டது. கி. பி. 1878ல் **அச்சுச்சட்டம்** ஒன்று ஏற்படுத்திச் சுதேச பாஷைப்பத்திரிகைகளுக்குச் சுதந்திரத்தைக் குறைத்தார். **ஆயுதச் சட்டம்** ஏற்படுத்தி, இந்தியர்கள் லைசென்ஸ் இல்லாமல் ஆயுதங்களை வைத்திருக்கவோ, உபயோகிக்கவோகூடாதென்று தடை செய்தார். ஆகையால், இந்தியர்கள் அவர்மீது கோபங் கொண்டார்கள்.

இரண்டாம் ஆப்கானிய யுத்தம் (கி. பி. 1879): லிட்டன் பிரபு காலத்தில் ருஷியர் பயம் மறுபடியும் உண்டாகவே ஆங்கிலேயர் பெலுச்சிஸ்தானத்து அரசரோடு ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு அவரிடமிருந்து குவெட்டா நகரத்தைப் பெற்ருர்கள். லிட்டன் பிரபு குவெட்டாவைப் பலப்படுத்தி, **போலன் கணவாய்** வழியாக அன்னியர்கள் இந்தியாவுக்கு வரக்கூடாத

படி அங்கே ஒரு பெரிய ஆங்கிலப் படையை வைத்தார். **ஜில்ஜிட்டு** என்னுமிடத்தில் ஓர் ஆங்கிலேய சேனை காஷ்மீர் அரசருடைய அனுமதியின் பேரில் வைக்கப்பட்டது. லிட்டன் பிரபு ஓர் ஆங்கிலேய தூதரை ஆப்கானிஸ்தான் அமீரிடம் அனுப்பினர். நார்த்புருக்குப்பிரபு தம்முடன் ஓர் உடன்படிக்கை செய்துகொள்ள மறுத்ததால் அமீர்ஷேர் ஆலி ஆங்கிலேயரிடம் கோபங்கொண்டிருந்தார். லிட்டன் பிரபு செய்த ஏற்பாடுகள் தம்மைத் தாக்குவதற்காகச் செய்யப்பட்டன என்று பயந்து, அவர் ஆங்கிலேய தூதரை வரவேற்காது, ருஷியரிடமிருந்து வந்த தூதரை மிகுந்த மரியாதையுடன் ஏற்றுக்கொண்டார். ருஷியர்களுடைய செல்வாக்கு ஆப்கானிஸ்தானத்தில் அதிகரித்தால் இந்தியாவுக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்று எண்ணிய லிட்டன் பிரபு ஷேர் ஆலிமீது போர் தொடுத்தார்.

ஆங்கிலேய சேனைகள் கைபர், போலன் கணவாய்களின் வழியாகக் காபூலை நோக்கிச் செல்லவும், ஷேர் ஆலி பயந்து ஓடிப்போய்விட்டார். ஆங்கிலேயர் ஜலாலாபாது, காண்டகார், காபூல் என்னும் இடங்களைப் பிடித்துக்கொண்டனர். அதற்குள் ஷேர்ஆலி இறந்து போய்விட்டதால், அவருடைய மைந்தரான **யாகூப்கான்** கி. பி. 1879ல் **கண்டமக்கு** என்னுமிடத்தில் ஆங்கிலேயரோடு ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி **கைபர்க்கணவாயும், குர்ரம்** பள்ளத்தாக்கும் அமீரால் ஆங்கிலேயருக்குக் கொடுக்கப்பட்டன. அமீர் தமது நாட்டில் ஓர் ஆங்கிலேய ஸ்தானிகரை வைத்துக்கொள்ளுவதாகவும், தாம் வேறு எந்தத் தேசத்தவருடனும் சிநேகம் பாராட்டுவதில்லையென்றும் ஒப்புக்கொண்டார். ஆங்கிலேயர்கள் தாங்கள் பிடித்த இடங்களைத் திருப்பிக் கொடுத்துவிட்டார்கள்; அமீரை விரோதிகள் தாக்கினல் அவருக்கு உதவி புரிவதாகவும், வருஷத்திற்கு ஆறு லக்ஷ ரூபாய் சேனைகளின் செலவிற்காகக் கொடுப்பதாகவும் ஒப்புக்கொண்டார்கள்.

இந்த உடன்படிக்கை நடந்த சில தினங்களுக்குள்ளே ஆப்கானியர்கள், ஆங்கிலேயர்கள் தங்கள் நாட்டில் அதிகாரம் பெற்றதை வெறுத்து, அவர்களுக்கு விரோதமாகக் கலகம் செய்து, காபூலில் இருந்த ஆங்கிலேய ஸ்தானிகரான **ஸர் லூயிஸ் காவக்னரி** என்பவரைக் கொன்றுவிட்டார்கள். அதனுல், மறு படியும்போர் தொடங்கிற்று. அப்போர் முடிவதற்குள் லிட்டன் பிரபு பதவியிலிருந்து நீங்கிவிட்டார். அவருக்குப் பின் வைஸ் ராயாய் வந்த **ரிப்பன் பிரபு** காலத்தில் ஆப்கானியப் போர் வெற்றிகரமாக முடிவடைந்தது.

ஸ்டுவர்ட்ஸ் என்ற தளகர்த்தர் காண்டகாரைமீண்டும் கைப் பற்றினர். கைபர்க் கணவாயில் இருந்த ஆங்கிலேய தளகர்த்தர் ஜெனரல் **ராபர்ட்ஸ்** என்பவர் காபூலைப்பிடித்துக்கொண்டு, அமீர் **யாகூப்கானைக்**கைதியாக்கி இந்தியாவுக்கு அனுப்பிவிட்டார். அச் சமயத்தில் வைஸ்ராயாய்வந்த ரிப்பன் பிரபு சமாதானப்பிரியர். அவர் தோஸ்து முகம்மதுவின் பேரரான **அப்துர் ரஹிமான்** என்பவரை அமீராக நியமிக்க ஏற்பாடுசெய்தார். புதிய அமீர் ருஷியர்களையோ, மற்ற அன்னியர்களையோ தம் நாட்டில் பிரவேசிக்க அனுமதிக்கவில்லையென்றும், ஆங்கிலேயர்களுடன் சிநேகமாய் இருப்பதாகவும் வாக்களித்தார். அதற்குப் பதிலாக இந்தியத் துரைத்தனத்தார் அமீருக்கு வருடந்தோறும் இருபத்தைந்து லக்ஷம் ரூபாய் கொடுப்பதாகவும், அவரை விரோதிகள் தாக்கினுல் உதவி புரிவதாகவும் வாக்களித்தார்கள். அப்துர் ரஹிமான் கி. பி. 1901ல் தாம் இறக்கும் வரை ஆங்கிலேயருடன் நேசமாய் இருந்துவந்ததாலும், நாட்டைத் திறமையாய் ஆண்டு வந்ததாலும், இந்தியத் துரைத்தனத்தாருக்கு அவர் காலத்தில் ஆப்கானிஸ்தானத்தைப் பற்றிய கவலை இல்லாமலிருந்தது.

கேள்விகள் :

1. லிட்டன் பிரபு காலத்தில் நடந்த இரண்டு முக்கிய சம்பவங்கள் எவை ?

2. லிட்டன் பிரபுவிடம் இந்தியருக்கு அதிருப்தி ஏற்படக் காரணம் யாது ?
3. இரண்டாம் ஆப்கானிய யுத்தத்தின் காரணங்கள் எவை?
4. மூன்ருவது ஆப்கானிய யுத்தத்தின் முடிவு என்ன ?

---

12. ரிப்பன் பிரபுவும் ஸ்தல சுய ஆட்சியும்

கி. பி. 1880ல் ரிப்பன் பிரபு வைஸ்ராயாக நியமனம் செய்யப்பட்டார். அவர் வந்தவுடன் ஆப்கானிய யுத்தத்தை முடித்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்திஞர். அவர் இந்தியர்களின் நன்மையைக் கருதிப் பல சீர்திருத்தங்களேச் செய்தார். அவைகளில் முக்கியமானது **ஸ்தல சுய ஆட்சிச் சட்டம்** ஏற்படுத்தியதேயாகும்.

இந்தியாவில் மௌரிய அரசர்கள் ஆண்டு வந்த காலத்திலேயே ஸ்தல சுய ஆட்சி முறை இருந்து வந்தது. நகரங்களின் ஆட்சியைக் கவனிப்பதற்கு நகர பரிபாலன சபைகளும், கிராமங்களின் பொதுக்காரியங்களேக் கவனிப்பதற்குப் பஞ்சாயத்துக்களும் இருந்துவந்தன. தென்னிந்தியாவிலும் பல்லவ சோழ அரசர்கள் காலத்தில் இத்தகைய சபைகள் அமைக்கப்பட்டுப் பொதுநன்மைக்கான காரியங்களேச் செவ்வனே செய்து வந்தன. நாளடைவில் அன்னியப் படையெழுச்சிகளாலும், உள் நாட்டில் தோன்றிய கலகங்களாலும், இவ்வரிய ஸதாபனங்களெல்லாம் ஆங்கில ஆட்சி ஆரம்பிக்கும் முன்பே தளர்ச்சி

ரிப்பன் பிரபு

யடைந்து அழிந்து போயின. கம்பெனியாரும், அதிகாரம் முழுவதையும் தாமே பெற எண்ணி, இம்முறைகளை மாற்றி விட்டனர்.

ரிப்பன் பிரபு இந்தியர்கள் அரசியல் நிர்வாக விஷயங்களில் தேர்ச்சிபெறவேண்டுமென்பதற்காகக் கி. பி. 1882ல் **ஸ்தல சுய ஆட்சிச் சட்டத்தைப்**பிறப்பித்தார். கிராமம், நகரம், தாலூக்கா, ஜில்லா இவைகளின் பரிபாலனம் அங்கங்கேயுள்ள ஜனங்களின் பிரதிநிதிகளாலேயே நடத்தப்படுவதற்கு **ஸ்தல சுய ஆட்சி** என்பதுபெயர். அதன்படி நம்தேசத்தில் கிராமப்பஞ்சாயத்துகளும், நகர பரிபாலன சபைகளும் தாலூக்கா போர்டு, ஜில்லா போர்டு சபைகளும் ஏற்படுத்தப்பட்டன. இச்சபையின் அங்கத்தினர்கள் பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இச்சபையோர் தங்களுக்குள் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு, தத்தம் எல்லைக்குட்பட்ட இடங்களில் வசிக்கும் ஜனங்களின் பொது நன்மைக்கான பல காரியங்களைச் செய்து வருகிறார்கள். கல்வியபிவிருத்தி., ரஸ்தாக்களின் பரிபாலனம், சுகாதாரம் முதலிய வேலைகள் இந்த ஸ்தல ஸ்தாபனங்களுக்கு விடப்பட்டன. இச்சபைகளின் செலவுகளுக்கு வேண்டிய பணத்திற்காகச் சில வரிகளை விதிக்கவும், வருமானத்தைச் செலவழிக்கவும் அதிகாரம் அளிக்கப்பட்டது. பொது ஜனங்களின் நன்மைக்காக ஸதல ஸ்தாபனங்களை மீண்டும் ஏற்படுத்தின ரிப்பன் பிரபுவை இந்தியர்கள் **'லார்டு ரிப்பன் எங்களப்பன்'** என்று பாராட்டினார்கள். அவருக்கு நன்றியறிதலைக் காட்ட, சென்னையில் அவருடைய உருவச்சிலை வைக்கப்பட்டிருக்கிறது.சென்னை நகர பரிபாலன சபையின் கட்டடங்களுக்கும் 'ரிப்பன் கட்டடங்கள்' என்று பெயரிட்டு இருக்கிறார்கள்.

ரிப்பன் பிரபு வேறு பல சீர்திருத்தங்களையும் செய்தார். இந்திய பாஷைகளில் பிரசுரமாகும் வர்த்தமானப் பத்திரிகைகளுக்கு விதிக்கப்பட்டிருந்த கடுமையான நிபந்தனைகளை அவர்

நீக்கினர்; கல்வி வளர்ச்சிக்காகப் பல பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தினர்; இந்தியர்களுக்கு உயர்ந்த உத்தியோகங்களை அளித்தார்; பருத்தி ஆடைகளின்மீது விதித்திருந்த இறக்குமதி வரி குறைக்கப்பட்டது. பெரிய இயந்திரத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் நன்மையைக் கருதிச் சட்டங்கள் இயற்றினர். அவைகளை மேல் பார்க்கத் தொழிற்சாலை இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர் ஐரோப்பியர்களையும் இந்தியர்களையும் சமமாகப் பராட்டினர். இந்தியாவிலுள்ள ஐரோப்பியக் குற்றவாளிகளையும் இந்திய நியாயாதிபதிகளே விசாரித்துத் தீர்ப்புச் செய்வதற்கு அதிகாரம் கொடுக்கும்படியாக ரிப்பன்பிரபு முயற்சிசெய்தார். ஆனால்விசாரணைக்கு உதவி புரியும் ஜூரிகளில் பெரும்பான்மையோர் ஐரோப்பியராக இருக்கவேண்டும் என்பதும் தீர்மானிக்கப்பட்டது. கி.பி. 1830ல் பெண்டிங்கு பிரபு காலத்தில் மைசூர் ராஜ்யம் ஆங்கிலேய ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். ரிப்பன் பிரபு அந்த ராஜ்யத்தை முன் ஆண்டு வந்த கிருஷ்ணராஜ உடையாரின் சுவீகார புத்திரரான **சாமராஜ உடையாருக்குக்** கி. பி. 1881ல் திருப்பிக் கொடுத்துவிட்டார். அதுமுதல் அந்த மன்னரின் சந்ததியார் மைசூர் ராஜ்யத்தை வெகு சிறப்புடன் ஆண்டு வருகின்றனர்.

இந்தியர்களுக்கு இத்தனை நன்மைகள் செய்த ரிப்பன் பிரபு இந்திய வைஸ்ராய்களில் சிறந்தவராகக் கருதப்படுகிறார். கி. பி. 1884ல் அவர் பதவியிலிருந்து விலகி இங்கிலாந்துக்குச் சென்ற பொழுது இந்தியர்கள் யாவரும் வருத்தப்பட்டார்கள்.

கேள்விகள் :

1. ஸ்தல ஸ்தாபனங்கள் யாவை? அவை நமது தேசத்தில் எக்காலங்களில் சிறப்புடன் விளங்கின? அவை அழிந்து போகக் காரணமென்ன?
2. ஸ்தல ஸ்தாபனங்களைத் திரும்பவும் ஏற்படுத்தியவர்யார்? அவருடைய நோக்கம் யாது?
3. ரிப்பன் பிரபு செய்த வேறு சீர்திருத்தங்கள் யாவை?

13. டப்ரின் பிரபுவும் தேசியக் காங்கிரசும்

ரிப்பன் பிரபுவுக்குப் பின் **டப்ரின் பிரபு** கி. பி. 1884 முதல் 1888 வரை வைஸ்ராய் பதவியை வகித்தார். அவர் காலத்தில் **மூன்றும் பர்மா யுத்தம்** நடந்தது. டல்ஹௌஸி காலத்தில் நடந்த இரண்டாவது பர்மா யுத்தத்தில் ஆங்கிலேயருக்குத் தென் பர்மா மட்டுமே கிடைத்திருந்தது. வட பர்மாவில் **தீபா** என்னும் அரசர் ஆண்டுவந்தார். அவர் பிரெஞ்சுக்காரர்களுடன் நட்புக்கொண்டு பர்மாவிலுள்ள ஆங்கிலேய வியாபாரிகளுக்கு இடையூறுகள் செய்து வந்தார். ஆகையால், டப்ரின் ஓர் ஆங்கிலேயசேனையைப்பர்மாவுக்கு அனுப்பினர். தீபாவும் அவருடைய இராணியாரும் கைதி செய்யப்பட்டு, இந்தியாவிற்கு அனுப்பப்பட்டனர். கி. பி. 1886ல் **வட பர்மா** ஆங்கில ராஜ்யத்தில் சேர்க்கப்பட்டது. இத்துடன் பர்மா முழுவதும் ஆங்கிலேயர் வசம் வந்தது. பர்மாவில் ஓர் ஆங்கிலேய கவர்னர் நியமிக்கப்பட்டார்.

இந்திய தேசீயக் காங்கிரஸ் மகாசபை: கி. பி. 1885-ஆம் வருஷம் முதல்முதலாக **ஹியூம், வெட்டர்பர்ன், காட்டன்** முதலிய முற்போக்குக் கொள்கையுடைய ஆங்கிலேய பிரமுகர்களும், **தாதாபாய் நௌரோஜி** போன்ற இந்திய தேசாபிமானிகளும் செய்த தீவிர முயற்சியால், **காங்கிரஸ் மகாசபை** தோன்றிற்று. அச்சபையின் முதற்கூட்டம் பம்பாய் நகரில், கி.பி. 1885-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் 28-ஆம் தேதி **W.C. பானர்ஜி** என்பவரின் தலைமையின் கீழ்க்கூடியது. அதுமுதல் நம் தேசத்தின் தலைவர்களும் தேசாபிமானிகளும் அச்சபையை வருஷந்தோறும் நாட்டின் ஏதாவதோர் இடத்தில் கூட்டி நடத்தி வருகிறார்கள். அச்சபை இந்திய மக்களின் பிரதிநிதியாய் இருந்து, ஜனங்களின் குறைகளை அரசாங்கத்திற்குச் சொல்லி, தேச முன்னேற்றத்துக்காகப் பாடு பட்டு வருகிறது.

இந்தியர்களுக்கு ஐரோப்பியர் வகித்துவரும் பெரிய உத்தி யோகங்கள் அளிக்கப்பட வேண்டுமென்பதும், மேனுட்டி லுள்ள ஆட்சி முறைகளை இந்தியர் பெற்று அவற்றின்படி இந்திய அரசியலை இந்தியரே நடத்த வேண்டும் என்பதும் இந்திய தேசிய மகா சபையின் நோக்கமாய் இருந்தன. அதன் பொருட்டு அவர்கள் நிர்வாக சபைகளிலும், சட்ட சபைகளி லும் இந்தியருக்குப் பங்கு கொடுக்க வேண்டுமென்றும் சட்ட பூர்வமாகக் கிளர்ச்சி செய்து வந்தார்கள்.

டப்ரின் பிரபு காங்கிரஸ் மகாசபையினரின் நிதானமான கோரிக்கைகளை ஆதரித்து நிர்வாக சபைகளிலும், சட்ட சபை களிலும் இந்தியருக்கு அதிக இடங்கொடுக்க வேண்டுமென்று சிபாரிசு செய்தார். விக்டோரியா மகாராணியார் பட் டத்துக்கு வந்து ஐம்பது வருஷம் ஆனதைக் குறித்துப் **பொன் விழா** கி. பி. 1887ல் நம் நாட்டின் பல இடங்களில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

டப்ரின் பிரபுவின் மனைவியாரின் முயற்சியால் ஒரு பெரு நிதி திரட்டப்பட்டு, ஸ்திரீகளுக்கென்று பல வைத்தியசாலைகள் கட்டப்பட்டன.

லான்ஸ்டௌன் பிரபு (கி. பி. 1888–93): டப்ரின் பிரபுவுக் குப்பின் லான்ஸ்டௌன் பிரபு வைஸ்ராயானர். அவர் காலத் தில் **புதிய கௌன்ஸில் ஆக்டு** என்னும் சட்டம் கி. பி. 1892ல் நிறைவேறியது. அதன்படி சட்ட சபைகளின் அங்கத்தினர் களின் தொகை முன் இருந்ததைவிட அதிகப்படுத்தப்பட் டது. அதுவரை அரசாங்க உத்தியோகஸ்தர்களே சட்ட சபைகளில் அங்கத்தினர்களாய் இருந்தார்கள். புதிய சட் டப்படி இந்திய சட்ட சபைக்கும், மாகாணச் சட்ட சபைகளுக் கும் உத்தியோகஸ்தர் அல்லாதவர்களைப் பொதுஜனங்கள் பிரதி நிதிகளாகத் தேர்ந்தெடுத்து அனுப்ப அனுமதிக்கப்பட்டார்கள்.

சட்டசபை அங்கத்தினர்களுக்குத் துரைத்தன விவகாரங்களைப் பற்றிக் கேள்விகள் கேட்பதற்கும் வரவு செலவு திட்டத்தைப்பற்றி ஆலோசனை கூறுவதற்கும் உரிமை அளிக்கப்பட்டது.

லான்ஸ்டௌன் காலத்திலே தான் தங்கப்பவுனின் மதிப்பு எப்பொழுதும் பதினைந்து ரூபாயாகத்தான் இருக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அவர் வடமேற்கு எல்லைப்புறத்தில் சரியான பாதுகாப்பை ஏற்படுத்தினர். ஆப்கானிஸ்தான எல்லை வரையில் இருப்புப் பாதையும் சாலைகளும் அமைக்கப்பட்டன. அவர் கி. பி. 1893ல் ஆப்கானிய அமீர் அப்துர் ரஹிமானுடன் ஒரு புதிய உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி எல்லைப்புறத்தில் வசித்து வந்த ஜனங்களை ஆங்கிலேயர் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வருவதற்கு அமீர் சம்மதித்தார். அமீருக்கு ஆங்கிலேயர் கொடுக்க வேண்டிய மானியம் ரூபாய் 12 லக்ஷத்திலிருந்து 18 லக்ஷத்துக்கு உயர்த்தப்பட்டது.

இரண்டாம் எல்ஜின் பிரபு (கி. பி. 1894-99): லான்ஸ்டௌன் பிரபுவுக்குப் பின் எல்ஜின் பிரபு வைஸ்ராய் ஆனர். அவர் காலத்தில் பம்பாயில் **பிளேகு** என்னும் கொடிய வியாதி ஏற்பட்டது. அத்துடன் நாடெங்கும் கொடிய பஞ்சம் ஏற்பட்டு, அநேகர் மாண்டனர். வடமேற்கு எல்லைப்புறத்தில் வசித்துவந்த பட்டாணியர்கள் ஆங்கிலேயர் முன்னேறி வருவதைக் கண்டு தங்கள் சுயேச்சைக்கு ஆபத்து ஏற்பட்டுவிடுமென்று அஞ்சிக் கலகம் செய்தார்கள். எல்ஜின் பிரபு பெரிய சைனியத்தை அனுப்பிக் கி. பி. 1898ல் அக்கலகங்களை அடக்கினர். கி. பி. 1897-ஆம் வருஷம் விக்டோரியா மகாராணியார் பட்டத்துக்கு வந்த 60-ஆம் வருஷம் **வைர ஜூபிலி விழா** கொண்டாடப்பட்டது.

கேள்விகள் :

1. மூன்ருவது பர்மா யுத்தத்தின் காரணமும் அதன் முடிவும் என்ன ?

இந்தியா, 1895



பிரிட்டிஷ் இராஜ்ஜியம்
சீக்கியர்
சிந்துநதி
டில்லி
ரோஹில்
கண்டு
அலிகார்
நேபாளம்
இராஜபுதனம்
சிந்து
அயோத்தி
குவாலியர்
கங்கைநதி
பீஹார்
இந்தூர்
பரோடா
நர்மதைநதி
வங்காளம்
தபதிநதி
ஆர்கான
தானங்கள்
ஒரிஸா
சூரத்
நாகபுரி
அஸ்ஸே
ஸால்ஸெட்
பம்பாய்
கோதாவரிநதி
மராட்டிய சமஸ்
ஆமத்நகர்
வடசர்க்கார்
ஹைதராபாத்
கிருஷ்ணாநதி
அரபிக்கடல்
வங்காளக்குடாக்கடல்
கன்னடம்
சென்னை
மைசூர்
கர்நாடகம்
சென்ட்டேவிட்கோட்டை
காவேரிநதி
தஞ்சாவூர்
திருவாங்கூர்
இலங்கை
இந்து மகா சமுத்திரம்

2. காங்கிரஸ் மகாசபை எந்த வைஸ்ராய் காலத்தில் யாரால் ஸ்தாபிக்கப்பட்டது? அவர்களுடைய நோக்கம் யாது?
3. புதிய கௌன்ஸில் ஆக்டு யார் காலத்தில் ஏற்பட்டது? அதனால் ஏற்பட்ட மாறுதல்கள் எவை?
4. எல்ஜின் பிரபு காலத்தில் நடந்த முக்கிய சம்பவங்கள் எவை?

---

14. கர்ஸன் பிரபுவும் சீர்திருத்தத் திட்டங்களும்

எல்ஜின் பிரபுவுக்குப் பிறகு **கர்ஸன் பிரபு** வைஸ்ராயாய் வந்தார். அவர் கி. பி. 1899 முதல் 1905 வரையில் ஆறு வருஷங்கள் பதவி வகித்தார். அவர் சொல் வன்மையும், நிர்வாகத்திறமையும் உடையவர். அவர் காலத்தில் இந்தியாவில் அநேக சீர்திருத்தங்களும், மாறுதல்களும் ஏற்பட்டன. கி. பி. 1901ல் விக்டோரியா மகாராணியார் இறந்து போகவே, அவருடைய மூத்த குமாரர் **ஏழாம் எட்வர்டு** இந்தியாவின் சக்கரவர்த்தியாரானார். அக்கொண்டாட்டத்திற்காகக் கி. பி. 1903-ஆம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதியன்று கர்ஸன் பிரபு டில்லி நகரத்தில் ஒரு பெரிய தர்பார் நடத்தினார்.

ஏழாம் எட்வர்டு

எல்லைப்புறப் பாதுகாப்புச் சம்பந்தமாக மிண்டோ பிரபு காலமுதலே இரண்டு விதமான அபிப்பிராயங்கள் இருந்து வந்

தன. அன்னியர்கள் நம் நாட்டின்மீது படையெடாதபடி தடுக்க வேண்டுமானல் ஆப்கானிய விவகாரங்களில் தலையிட்டு ஆங்கிலேயர்கள் தங்கள் அதிகாரத்தை நிலை நிறுத்தவேண்டுமென்பது லிட்டன் பிரபு போன்றவர்களின் அபிப்பிராயம். ஆங்கிலேயர் எல்லைப்புறங்களில் செவ்வனே ஆட்சி புரிந்து அங்கு வசிக்கும் ஜனங்களின் அன்பைப் பெறுவதே எல்லைப்புறப் பாதுகாப்பிற்குச் சிறந்த வழி என்று லாரன்ஸ் பிரபு அபிப்பிராயப்பட்டார். கர்ஸன் பிரபு லாரன்ஸ் பிரபுவின் வழியைப பின்பற்றி எல்லைப் புறப் பாதுகாட்பிற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்.

எல்லைப்புறக் கொள்கை : கர்ஸன் பிரபு வடமேற்கு எல்லைப் புறப் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருந்த ஆங்கிலேயப் படைகளை நீக்கிவிட்டு, அவற்றிற்குப் பதிலாக அந்த எல்லை நாட்டு முரட்டு ஜாதியார்கள் அடங்கிய ஒரு பெரிய படையை அமைத்து அவர்களைக்கொண்டே மலைக் கணவாய்களைப் பாதுகாக்கும்படி ஏற்பாடு செய்தார். மேலும், அவர் சிந்து நதிக்கு மேற்கேயுள்ள எல்லா நாடுகளையும் ஒன்று சேர்த்து, **வட மேற்கு எல்லை மாகாணம்** என்னும் புது மாகாணத்தை அமைத்தார். பிஷாவர், கோஹாட்டு, பன்னு, டேரா இஸ்மெயில்கான் என்ற ஜில்லாக்களும் வேறு சில பகுதிகளும் இம்மாகாணத்தில் அடங்கியிருந்தன. இதன் நிர்வாகத்தை நடத்திவர ஒரு தனி மாகாண அதிகாரியை நியமனம் செய்தார். இந்த ஏற்பாட்டினல் வடமேற்கு எல்லையைப் பாதுகாப்பது எளிதாயிற்று.

கி. பி. 1901ல் ஆப்கானிஸ்தான் அமீர் அப்துர் ரஹிமான் இறந்தார். அவருக்குப் பின் பட்டத்துக்குவந்த **அமீர் ஹபிபுல்லா**வும் ஆங்கிலேயருடன் நண்பராய் இருந்துவந்தார். வழக்கம் போலவே அவருக்கும் பிரதி வருஷமும் 18 லக்ஷம் ரூபாய் உதவித் தொகை கொடுப்பதாகக் கர்ஸன்பிரபு ஒப்புக்கொண்டார்

இவ்வாறுக ஆங்கிலேயருக்கும் அமீருக்கும் இருந்த நட்பு, பலப் பட்டது.

திபேத்து சண்டை: வாரன் ஹேஸ்டிங்ஸ் காலம் முதற் கொண்டே இமயமலைக்கு வடக்கேயுள்ள திபேத்து ராஜ்யத்தின் அரசர்கள் ஆங்கிலேயருடன் நேசமாயிருந்து வந்தனர். ஆனுல், கர்ஸன் பிரபுவின் காலத்தில் திபேத்து அரசரும், மதக் குருவு மாகிய **தலாய் லாமா** ஆங்கிலேய வர்த்தகர்களுக்கு இடையூறு களை விளைத்து, ருஷியர்களுடன் நட்புக்கொண்டு, தம் நாட்டில் ஒரு ருஷிய தூதரை வரவேற்று உபசரித்தார். எனவே, கர்ஸன் பிரபு **கர்னல் யங் ஹஸ்பண்டு** என்பவரின் தலைமையில் ஒரு சைனியத்தைத் திபேத்துக்கு அனுப்பினுர். அந்தச் சைனியம் திபேத்தின் தலைநகரான **லாஸா**வைப் பிடித்துக்கொள்ளவே, இரு திறத்தாருக்கும் சமாதானம் ஏற்பட்டது. ஆங்கிலேயர் மறுபடியும் வியாபார வசதிக்காக அதுவரை கண்டுபிடிக்கப் படாத சில மலைப்பாதைகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவை களின் மூலம் திபேத்துக்கும் இந்தியாவுக்கும் போக்கு வரவு கள் ஏற்பட்டன.

கர்ஸன் பிரபுவின் சீர்திருத்தங்கள்: கர்ஸன் பிரபு இந்தியர் களின் நன்மைக்கான பல சீர்திருத்தங்களைச் செய்தார். கி. பி. 1900ல் மறுபடியும் ஒரு பஞ்சம் ஏற்பட்டது. கர்ஸன் பஞ்ச நிவாரணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தார். பல புதிய ரஸ்தாக்களும், இருப்புப் பாதைகளும் போடப்பட்டன. பஞ்சம் ஏற்பட்ட இடத்திற்கு மற்ற இடங்களிலிருந்து உணவுப் பொருள்கள் அனுப்பப்பட்டன.

பஞ்ச காலங்களில் நிலவரிகளைக் குறைப்பதற்கும், வஜா செய்வதற்கும் ஜில்லாக் கலெக்டர்களுக்கு அதிகாரம் கொடுக் கப்பட்டது. பஞ்சாபில் விவசாயிகள் கடனாளிகளாகித் தங்கள் நிலங்களை இழந்து வந்தார்கள். கர்ஸன் பிரபு ஒரு சட்டத்தை இயற்றி, கடன் கொடுத்தவர்கள் நிலங்களைப் பிடுங்கிக்

கொள்ள முடியாதபடி செய்தார். மேலும், விவசாயிகளுக்குக் குறைந்த வட்டிக்குக் கடன் கிடைக்கும்படி **கூட்டுறவுச் சங்கங்கள்** ஏற்படுத்தப்பட்டன. அகில இந்திய விவசாய இலாக்கா ஒன்றை ஏற்படுத்தி, விவசாயிகள் புதிய முறைகளைக் கையாளும்படி செய்தார். விளைச்சலை அதிகப்படுத்தி நல்ல பலனைப் பெறக்கூடிய பயிர்த்தொழில் முறைகளை விவசாய இலாக்காதார் குடியானவர்களுக்குப் போதித்து வரலாயினர்.

வியாபாரத்தையும் கைத்தொழில்களையும் விருத்தி செய்வதற்காக வர்த்தகத் தொழில் இலாக்கா என்ற ஒரு தனி இலாக்கா ஏற்படுத்தப்பட்டது. ஏழை ஜனங்களின் சௌகரியத்துக்காக உப்பு வரியும் குறைக்கப்பட்டது. போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளத்தைக் கூட்டிப் போலீஸ் இலாக்காவைச் சீர்திருத்தி அமைத்தார்.

கி. பி. 1904ல் கர்ஸன் பிரபு **இந்திய சர்வகலாசாலைச் சட்டம்** என்பதைப்பிறப்பித்தார். அதன்படி சர்வ கலாசாலைகளின்சுவாதீனமும் அதிகாரமும் குறைந்தன. அவைகள் துரைத்தனத்தாரின் அதிகாரத்திற்குள் கொண்டுவரப்பட்டன. கர்ஸன் பிரபு ஆரம்பக் கல்வியும், மத்தியதரக் கல்வியும் பரவுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தார்; மாகாணக் கல்வி அதிகாரிகளை நியமித்து மாகாணத்தின் கல்வி முன்னேற்றத்திற்கு அவர்களைப் பொறுப்பாளிகள் ஆக்கினர்.

இந்தியாவின் சரித்திரத்திற்கு ஆதாரமாகவும், நம் நாட்டின் புராதன நாகரிகத்திற்கும் பெருமைக்கும் அத்தாட்சியாகவும் விளங்குகின்ற கட்டடங்கள், கோவில்கள், மசூதிகள், குகைகள், ஸ்தூபிகள், கோட்டைகள், கல்வெட்டுகள் முதலியவற்றை அழியாமல் பாதுகாப்பதற்காகப் **புராதனச்சின்னங்களின் பாதுகாப்பு இலாக்கா** ஒன்றை ஏற்படுத்தினர். அந்த இலாக்கா சரித்திர சம்பந்தமான கட்டடங்கள், ஸ்தூபிகள் முதலியவை பழுதுபடாமல் பாதுகாத்து நல்ல நிலையில் வைத்திருப்பதுடன்

பூமிக்கடியில் புதைந்துபோன பட்டணங்களைத் தோண்டிப் பார்த்து, சரித்திர சம்பந்தமான விஷயங்களை ஆராய்ச்சிசெய்து வருகிறது. இக்காலத்தில் மோஹஞ்சோதாரோ, ஹாரப்பா என்னும் இடங்களில் இவ்வித ஆராய்ச்சிகளை இந்த இலாக்காதார் நடத்தி வருகின்றனர்.

வங்காளப் பிரிவினை : வங்காள மாகாணம் மிகப் பெரிதாய் இருந்ததால், ஒரு கவர்னர் அதை நிர்வாகம் செய்வது சாத்தியமில்லை என்று எண்ணிக் கர்ஸன் பிரபு கி. பி. 1904ல் அதைக் கிழக்கு வங்காளமென்றும், மேற்கு வங்காளமென்றும் இரு பிரிவுகளாகச் செய்தார். ஆனால், இச்செய்கை வங்காளிகளின் ஒற்றுமையைக் கெடுக்கச் செய்த ஏற்பாடு என்று வங்காளிகள் கிளர்ச்சி செய்தனர். அவர்கள் அப்பிரிவினையை ஏற்றுக்கொள்ளமறுத்து, அதை ரத்துச்செய்ய வேண்டுமென்று பெரு முயற்சி செய்தார்கள். அந்தக் கிளர்ச்சி நாடெங்கும் பரவியது. **சுரேந்திரநாத பானர்ஜி** என்னும் சிறந்த தேசாபிமானி அந்தக் கிளர்ச்சிக்குத் தலைமை வகித்து, நாடெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்து, தேசீய உணர்ச்சியை உண்டுபண்ணினர். காங்கிரஸ் மகா சபை பலமடைந்ததும் ஜனங்கள் சுதேச வஸ்துக்களையே வாங்கவேண்டுமென்றும் ஆங்கிலேயரின் பொருள்களைப் பகிஷ்காரம் செய்ய வேண்டுமென்றும் ஓர் இயக்கம் நாடெங்கும் பரவியது. ஆனால் கர்ஸன் பிரபு பிடிவாதமாய்ப் பிரிவினையைரத்துச்செய்ய மறுத்துவிட்டார். கி.பி. 1911ல் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் இந்தியாவுக்கு வந்தபொழுது பிரிவினை ரத்துச் செய்யப்பட்டு, வங்காளம் ஒரே மாகாணமாக்கப்பட்டது. அப்பொழுதுதான் கிளர்ச்சி ஒருவாறு அடங்கியது. கர்ஸன் பிரபு இந்தியர்களுக்குப் பல நன்மைகள் செய்தபோதிலும், அவர் இந்தியரை நம்பாமல் நடந்ததாலும், வங்காளத்தைப் பிரித்ததாலும் பொது மக்களின் மதிப்பை முற்றிலும் இழந்தார்.

கர்ஸன் பிரபுவின் ராஜிநாமா: கர்ஸன் காலத்தில் இராணுவ தளகர்த்தராய் இருந்த **கிச்சினர் பிரபு**, வைஸ்ராயின் அலோசனை சபையிலுள்ள இராணுவ அங்கத்தினரின் அதிகாரத்துக்குத் தாம்அடங்கி நடக்கமுடியாதென்றும், அப்பதவியை இராணுவ தளகர்த்தரேபெறவேண்டும் என்றும் வாதித்தார். அது விஷயத்தில் அபிப்பிராய பேதம் ஏற்பட்டதால், இங்கிலாந்திலுள்ள மேலதிகாரிகளுக்கு அது தெரிவிக்கப்பட்டது. கடைசியில் கிச்சினரின் அபிப்பிராயமே ஏற்றுக்கொள்ளப்பட்டு, இராணுவதள கர்த்தரே வைஸ்ராய் ஆலோசனை சபையின் இராணுவ அங்கத்தினர் ஆனார். ஆகையால், கர்ஸன் பிரபு கி. பி. 1905ல் தமது வேலையை ராஜிநாமா செய்துவிட்டு, இங்கிலாந்திற்குச் சென்றார்.

கேள்விகள்:

1. கர்ஸன் பிரபு வடமேற்கு எல்லைப் பாதுகாப்பிற்காக எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை?
2. விவசாயிகளுக்குக் கர்ஸன் பிரபு செய்த நன்மைகள் யாவை?
3. கல்வி சம்பந்தமாகவும், சரித்திர ஆராய்ச்சி சம்பந்தமாகவும் கர்ஸன் பிரபு செய்த ஏற்பாடுகள் யாவை?
4. கர்ஸன் பிரபு எந்த மாகாணத்தைப் பிரிவினை செய்தார்? ஏன்? அதன் பயன் யாது?
5. கர்ஸன் பிரபு தமது வேலையை ராஜிநாமா செய்யக் காரணம் என்ன?

15. மிண்டோ—மார்லி சீர்திருத்தங்கள்

(கி. பி. 1909)

கர்ஸன் பிரபுவுக்குப் பின்பு இந்திய வைஸ்ராயாய் வந்த **மிண்டோ பிரபு** கி. பி. 1905 முதல் கி. பி. 1910 வரையில் வேலை பார்த்தார். அவர் முன்பு கவர்னர் ஜெனரலாயிருந்த மிண்டோ பிரபுவின் வமிசத்தில் பிறந்தவர். அவர் வைஸ்ராயாய் வந்த சமயத்தில் நாட்டில் அமைதி குறைந்து குழப்பம் மேலிட்டிருந்தது. கர்ஸன் பிரபு பொது ஜன அபிப்பிராயத்தை அவமதித்து வங்காளத்தைப் பிரித்ததும், கல்வி இலாக்காவில் செய்த சில சீர்திருத்தங்களும் ஜனங்களுக்கு அரசாங்கத்தாரிடம் அதிருப்பதியை விளைவித்தன. ஜனங்கள் தங்கள் மனக்

மிண்டோ பிரபு

கொதிப்பைக் காட்டுவதற்காகப் பொதுக் கூட்டங்கள் நடத்தியும் பத்திரிகைகளில் அரசாங்கத்தாரின் செய்கைகளைப் பலமாகக் கண்டித்தும் வந்தார்கள். இந்திய மக்களிடையே தேசீய இயக்கம் வலுத்து வந்தது. கி.பி. 1885ல் ஸ்தாபிக்கப்பட்ட காங்கிரஸ் மகாசபையின் உறுப்பினர் தொகையும் செல்வாக்கும் அதிகரித்தன. இந்திய அரசியல் நிர்வாகம் இந்தியர்களுடைய பொறுப்பாகவே இருக்கவேண்டுமென்று தீவிர தேசீய வாதிகள் கிளர்ச்சி செய்தார்கள். ஆங்கில சாமான்களின் பகிஷ்காரம், சட்ட மறுப்பு முதலிய இயக்கங்கள் பெருகின. ராஜத்துவேஷமும் கலகங்களும் அதிகமாயின. இக்கிளர்ச்சியை அடக்க எண்ணி மிண்டோ பிரபு போலீஸையும் இராணு

வத்தையும் கொண்டு, அடக்கு முறைகளைக் கையாண்டார். **கிரிமினல் லா அமெண்ட்மெண்டு ஆக்டு** போன்ற பல அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன. **லாலா லஜபதி ராய்** என்னும் தேசியத்தலைவர் கைதுசெய்யப்பட்டுத் தேசப்பிரஷ்டம் செய்யப் பட்டார். பல தேசியத் தலைவர் சிறையிலடைக்கப்பட்டனர். பத்திரிகைகளுக்குக் கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. ஆனால், இம்முறைகளினால் நாட்டில் கிளர்ச்சி அதிகரித்ததே யொழியக் குறையவில்லை. **கோபால கிருஷ்ண கோகலே** போன்ற மித வாதத் தலைவர்கள், இந்தியர்களை யும் அரசாங்கப் பொறுப்பில் ஈடு படுத்தி நாட்டிலுள்ள படித்த மக்களைச் சமாதானப் படுத்திக் கொள்வதுதான் அமைதியை ஏற் படுத்துவதற்குச் சிறந்த மார்க்கம்

கோபாலகிருஷ்ண கோகலே

என்று யோசனை கூறினார்கள். மிண்டோ பிரபு அதை ஏற்றுக்கொண்டு, அப்போது இங்கி லாந்தில் இந்திய காரியதரிசியாராயிருந்த **மார்லி பிரபுவுடன்** கலந்து, கி. பி. 1909ல் ஒரு சீர்திருத்தச் சட்டத்தைப் பிறப்பித் தனர்.

மிண்டோ-மார்லி சீர்திருத்தச் சட்டத்தினால் அகில இந்தியாசட்ட சபை அங்கத்தினரின் தொகை அதிகமாக்கப்பட்டது. இத ற்கு முன்பு அச்சபையில் 21 அங்கத்தினர்கள் இருந்தார்கள். புதிய ஏற்பாட்டில் அவர்களின் எண்ணிக்கை, 60 ஆக்கப் பட்டது. அவர்களில் உத்தியோகஸ்தர்கள் 25 பேருக்கு மேல் இருக்கக்கூடாது. மற்றைய அங்கத்தினர்களில் பெரும்

பாலோரைத் தேர்ந்தெடுத்து அனுப்பும் உரிமை வியாபார சங்கங்களுக்கும், சர்வ கலாசாலைகளுக்கும், ஜில்லா போர்டு களுக்கும், முனிஸிபாலிட்டிகளுக்கும், பெரிய நிலச்சுவான்களுக் கும் அளிக்கப்பட்டது. சிலரைத் துரைத்தனத்தார் அங்கத் தினர்களாக நியமனம் செய்தனர். முஸ்லீம்களுக்குத் தனித் தொகுதியின் மூலமாகப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் கொடுக்கப்பட்டது. இவ்வாறே மாகாணச் சட்ட சபைகளின் அங்கத்தினர்களின் எண்ணிக்கையும் அதிகப்படுத் தப்பட்டது. தவிரவும், இலண்டனிலிருந்த இந்தியா கௌன் ஸிலுக்கு இரண்டு இந்தியர் நியமனம் செய்யப்பட்டனர். வைஸ்ராயின் நிர்வாக சபையிலும், மாகாணக் கவர்னர்கள் சபையிலும் இந்தியர் நியமனம் செய்யப்பட்டனர். அரசாங் கத்தின் வரவு செலவு திட்டத்தைப் பற்றியும், அரசியல் சட் டங்களைப் பற்றியும், மற்றும் பொது நலன்களைப் பற்றியும் விவாதிக்கவும் தீர்மானங்கள் கொண்டு வரவும் சட்ட சபை அங்கத்தினர்களுக்கு உரிமை அளிக்கப்பட்டது. இந்தியரில் முதன்முதலாக ‘லார்டு’ பட்டம் பெற்ற **ஸின்ஹா** என்பவர் வைஸ்ராயின் நிர்வாக சபைக்கு அங்கத்தினராக நியமனம் செய்யப்பட்டார். பிறகு இவர் இந்தியா காரியதரிசியாருக்கு உதவிக் காரியதரிசியாராகவும், கி. பி. 1921ல் பீஹார் மாகா ணக் கவர்னராகவும் நியமிக்கப்பட்டார். இவர்தாம் இத் தகைய உயர்ந்த பதவிகளைப் பெற்ற முதல் இந்தியர்.

மிண்டோ-மார்லி சீர்திருத்தங்களால் அரசியல் நிர்வாகத் தில் இந்தியர்களுக்கு ஓரளவு சுதந்திரம் ஏற்பட்டது. இச் சட்டம் இந்தியருக்கு முன்னிலும் அதிகரித்த பதவிகளையும், உத்தியோகங்களையும், அரசியல் முறைகளில் ஈடுபட்டுப் பழக வசதிகளையும் அளித்தது. ஆனால், முஸ்லீம்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவமும், வாக்குரிமையும் ஏற்படுத்தியதும், கிறிஸ் தவர்கள், சீக்கியர்கள் முதலான மற்றைய சிறுபான்மை

வகுப்பினருக்கும் இம்மாதிரித் தனி உரிமைகள் பெறவேண்டு மென்னும்பேரவா ஏற்படலாயிற்று. காங்கிரஸ் மகா சபையும், தேசாபிமானிகள் பலரும் முஸ்லீம்களுக்குத் தனித் தொகுதி கள் ஏற்படுத்தியது தேசிய உணர்ச்சிக்கும் ஒற்றுமைக்கும் இடையூருய் இருப்பதாகவும், ஜாதிமத பேதங்களை வளர்ப்ப தற்கு இடங்கொடுப்பதாகவும் கருதி, அதை ஒப்புக்கொள்ள வில்லை. முஸ்லீம்களும், மிதவாதிகளும் அச்சீர்திருத்தங்களை ஒப்புக்கொண்டு, அரசாங்கத்துடன் ஒத்துழைக்க முன் வந் தார்கள். **லோகமான்ய பால கங்காதர திலகரின்** தலைமையில் காங்கிரஸ் மகா சபையார் மிண்டோ-மார்லி சட்டத்தை மாற்றி இந்தியர்களுக்குச் சுய ஆட்சி உரிமை கோரிக் கிளர்ச்சி செய்து வந்தனர்.

1905-ஆம் வருஷம் அப்போது வேல்ஸ் இளவரசராயிருந்த **ஐந்தாம் ஜார்ஜ்** இந்தியாவுக்கு விஜயம் செய்தார். அப்போது அவர் சென்னைக்கும் வந்தார். அப்பொழுதுதான் கோட்டைக்கு வெளியில் இந்தியர்கள் வசித்து வந்த இடத்தின் பெயராகிய **பிளாக் டவுன்** என்பதை மாற்றி **ஜார்ஜ் டவுன்** என்ற பெயரிடப் பட்டது. மிண்டோ பிரபு கி. பி. 1910ல் இங்கிலாந்து சென்ருர்.

கேள்விகள் :

1. மிண்டோ பிரபு வைஸ்ராயாய் வந்த சமயத்தில் நாட்டில் ஏன் அமைதி இல்லாதிருந்தது ?
2. மிண்டோ-மார்லி சீர்திருத்தங்களினுல் ஏற்பட்ட மாறு தல்கள் எவை ? அவற்றின் பயன்கள் யாவை ?
3. குறிப்பெழுது :—(1) லார்டு ஸின்ஹா, (2) ஜார்ஜ் இள வரசரின் இந்திய விஜயம்.

16. இந்தியாவும் ஐரோப்பிய மகா யுத்தமும்

ஹார்டிஞ்சு பிரபு (கி.பி. 1910 - 16): மிண்டோ பிரபுவுக்குப் பிறகு ஹார்டிஞ்சு பிரபு வைஸ்ராயாய் வந்தார். கி. பி. 1910ல் ஏழாம் எட்வர்டு சக்கரவர்த்தியார் மரணமடைந்தபடியால் அவர்குமாரர் **ஐந்தாம் ஜார்ஜ்** அரசரானர். கி. பி. 1911-ஆம் வருஷம் டிசம்பர்மாதம் 12-ஆம் தேதி ஹார்டிஞ்சு பிரபு டில்லி நகரத்தில் ஒரு பெரிய தர்பார் கூட்டினர். அச்சமயம் இந்தியா சக்கரவர்த்தியாரான ஐந்தாம் ஜார்ஜும், மேரி ராணியாரும் டில்லி நகரத்திற்கு வந்து மகுடாபிஷேகம் செய்துகொண்டார்கள். ஆயிரக்கணக்கான பிரபுக்களும், மகாராஜாக்களும் அந்த வைபவத்திற்கு விஜயம் செய்திருந்தார்கள். அப்பொழுது சக்கரவர்த்தியார் டில்லி நகரை இந்தியாவின் தலைநகராகச் செய்திருப்பதாயும், வங்காளப் பிரிவினையை ரத்துச் செய்திருப்பதாயும் தெரிவித்தார். ஆரம்பக்கல்விக்காக இனிமேல் அதிகப் பணம் செலவிடுவார்கள் என்றும் தெரிவித்தார். அதன்படி இந்தியாவின் தலைமை ஸ்தானம் கல்கத்தாவிலிருந்து டில்லிக்கு மாற்றப்பட்டது. அரசாங்கத்தார் அநேக கோடி ரூபாய்கள் செலவிட்டு வைஸ்ராய் வசிப்



ஐந்தாம் ஜார்ஜ்

பதற்கு அழகான மாளிகையையும், அகில இந்திய சட்டசபைக் கட்டடங்களையும், மற்றும் பல உத்தியோகசாலைகளையும் கட்டி, புதிய டில்லி என்னுமிடத்தை மிகவும் அழகான நகரமாகச் செய்திருக்கிறார்கள். வங்காளம், பிரிவினைக்கு முன்னிருந்தது போல ஒன்றாக இணைக்கப்பட்டது. அஸ்ஸாம், தனி மாகாண மாயிற்று. பீஹார், ஓரிஸ்ஸா இவ்விரண்டும் சேர்ந்து ஒரு மாகாணமாகச் செய்யப்பட்டன. சக்கரவர்த்தியாரின் அறிக்கையால் ஜனங்கள் மிகுந்த திருப்தியும் சந்தோஷமும் அடைந்தார்கள். ஹார்டிஞ்சு பிரபுவும் சமரச முறைகளைக் கையாண்டு, நாட்டில் அமைதியை ஏற்படுத்தினார். இச்சமயத்தில் ஐரோப்பாவில் மகா யுத்தம் ஆரம்பித்தது.

ஐரோப்பிய மகா யுத்தம்: கி.பி. 1914-ஆம் வருஷம் முதல் 1918 வரை சுமார் நான்கு வருஷங்கள் உலகத்திலேயே அது வரை நடைபெற்றிராத பெரிய யுத்தம் ஐரோப்பாவில் நடைபெற்றது. ஐரோப்பாவில் ஜெர்மனித் தேசம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் **பிஸ்மார்க்கு** அரசரின் காலத்தில் மிகவும் பலமடைந்தது. அவருக்குப்பின் வந்த **வில்ஹெல்ம் கெய்ஸர்** காலத்தில் ஜெர்மானியர் மிகவும் முன்னேற்றமடைந்தனர். அவர்களுக்கு ஐரோப்பா முழுவதையும் தங்களுடைய ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வரவேண்டும் என்ற அவா மிகுதியாய் இருந்தது. இதே சமயத்தில் ஐரோப்பியத் தேசங்களுக்கிடையே குடியேற்ற நாடுகள் சம்பந்தமாகவும், வியாபாரப் போட்டியாலும், பரஸ்பர அவநம்பிக்கையும் விரோதமும் ஏற்பட்டிருந்தன. கி.பி. 1871ல் தன்னிடமிருந்து ஜெர்மனி பிடுங்கிக்கொண்ட **ஆல்ஸாஸ், லோரெய்ன்** என்னும் நாடுகளை பிரான்ஸ் மறுபடியும் அடைய விரும்பியது. ஜெர்மனி தன் கடற்படையைப் பெருக்கிவந்ததால் ஆங்கிலேயர் தங்கள் கடல் ஆதிக்கம் போய்விடுமென்றும், தங்களுடைய சாம்ராஜ்யத்திற்கே ஆபத்துஏற்படலாமென்றும் பயந்தனர். அதனால் இங்கி

லாந்துக்கும் ஜெர்மனிக்கும் விரோதம் அதிகரித்து வந்தது. இருபதாம் நூற்றுண்டு ஆரம்பித்ததுமுதலே ஐரோப்பிய நாடுகள் இருகட்சிகளாகப் பிரிந்து, தத்தம் ஆயுதபலத்தைப் பெருக்கிவந்தன. இங்கிலாந்து, பிரான்ஸ், ருஷியா ஆகிய நாடுகளுக்குள் நேச உடன்படிக்கைகள் ஏற்பட்டிருந்தன. அதே போல, ஜெர்மனி, ஆஸ்டிரியா, துருக்கி என்ற நாடுகளும் உடன்படிக்கை செய்துகொண்டிருந்தன. இச்சமயத்தில் 1914-ஆம் வருஷம் நடந்த ஒரு சிறு சம்பவத்தால் ஐரோப்பிய மகாயுத்தம் ஆரம்பித்தது.

1914-ஆம் வருஷம் ஜூன் மாதம் 28-ஆம் தேதி ஆஸ்டிரியா நாட்டு இளவரசரான **பிரான்சிஸ் பர்டினண்டு** என்பவரும் அவருடைய மனைவியாரும் **பாஸ்னியாவிலுள்ள ஸரோஜிவோ** என்னும் சிறு பட்டணத்தில் **ஸெர்பியா** தேசத்தான் ஒருவனுல் கொலை செய்யப்பட்டார்கள். ஆஸ்டிரியா அரசாங்கத்தார் அக்கொலை ஒரு தனிச்சம்பவம் அல்ல என்றும், அது ஸெர்பிய அரசாங்கத்தாரின் தூண்டுதலின் பேரில் நடந்தது என்றும் குற்றஞ்சாட்டி ஸெர்பியாவின்மீது படையெடுத்தார்கள். ஸெர்பியர் தங்களுக்கு உதவி செய்யுமாறு ருஷியர்களைக் கேட்டார்கள். ருஷியர்கள் அதற்கிணங்கித் தங்கள் நண்பர்களான பிரெஞ்சுக்காரரையும் சேர்த்துக்கொண்டனர். ஆஸ்டிரியாவுடன் நட்பாய் இருந்த ஜெர்மனி அவர்களுக்கு உதவி செய்ய முன் வந்தது. ஜெர்மன் மன்னர் 1914-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் தேதி ருஷியாமீதும், பிரான்ஸ்மீதும் போர் தொடுத்தார். ஜெர்மனி பிரான்ஸைத்தாக்குவதற்கு, பெல்ஜிய நாட்டின் வழியாகத்தான் சௌகரியமான வழி இருந்தது. பெல்ஜியம் போரில் நடுநிலைமை வகித்ததால், தன் வழியாக ஜெர்மன் சைனியம் செல்வதைத் தடுத்தது. ஆகவே, ஜெர்மனிக்கும் பெல்ஜியத்துக்கும் சண்டை மூண்டது. கி. பி. 1839ல் பெல்ஜியத்தின் சுயாதீன உரிமைகளைக் காப்ப

தாகச் சம்மதித்து ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து என்னும் மூன்று தேசங்களும் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டிருந்தன. அதற்கு விரோதமாய் ஜெர்மனி நடந்துகொண்டதால், பெல்ஜியம், பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு உதவி செய்வதற்காக இங்கிலாந்து, ஜெர்மனிமீது 1914-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 4-ஆம் தேதி போர் தொடுத்தது. துருக்கி இத்தாலியரும் ஜப்பானியரும் ஆங்கிலேயருடனும், துருக்கியர் ஜெர்மானியருடனும் சேர்ந்துகொண்டனர். யுத்தம் ஐரோப்பாமுழுவதும் பரவிற்று. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் அடங்கியிருந்த எல்லா நாடுகளும் பிரிட்டனுக்கு உதவி புரிந்தன. இந்தியாவும் இங்கிலாந்திற்கு விசேஷ உதவி புரிந்தது.

நான்கு வருஷ காலம் கடும்போர் நிகழ்ந்தது. அந்த ஐரோப்பிய யுத்தத்தைப் போன்ற பயங்கரமான யுத்தம் அது வரையில் நடைபெற்றதில்லை. உலகத்தின் பல இடங்களில் நிலத்திலும், நீரிலும், ஆகாயத்திலும் சண்டைகள் நடந்தன. இந்த யுத்தத்தில் பல நூதனமான யுத்த சாதனங்களும் கருவிகளும் உபயோகிக்கப்பட்டன. பீரங்கிகள், வெடி குண்டுகள், விஷக்காற்றுகள், சப்மரைன் என்னும் நீர் மூழ்கிக்கப்பல்கள், ஏரோப்பிளேன்கள் ஆகாய வெடி விமானங்கள், மேடு பள்ளம் எதிலும் செல்லக் கூடிய டாங்குகள் ஆகிய பல விதமான போர்க்கருவிகளும் இந்த யுத்தத்தில் உபயோகிக்கப்பட்டன. லக்ஷக்கணக்கான வீரர்கள் மாண்டார்கள். கணக்கற்ற பொருட்சேதமும் உயிர்ச் சேதமும் ஏற்பட்டன. யுத்தத்தில் சேராத நாடுகளுங்கூட பல விதத்திலும் கஷ்டப்பட்டன. எங்குப் பார்த்தாலும் வியாபாரமும் கைத்தொழிலும் சீர்குலைந்தன.

மகா யுத்தத்தின் போக்கு: முதலில் ஜெர்மன் கட்சியினர் பல வெற்றிகளைப் பெற்றனர். பெல்ஜியத்தைக் கைப்பற்றிக் கொண்டு ஜெர்மன் சைனியம் பிரான்ஸில் நுழைந்து, அதன்

தலை நகராகிய **பாரிஸ்** நகரத்தை நோக்கி முன்னேறியது. மற்றொரு ஜெர்மன் படை ருஷியர்களை எதிர்த்துத் தோற்கடித்தது. இதற்குள் பிரெஞ்சு சைனியமும் ஆங்கிலேய சைனியமும் ஒன்று சேர்ந்து, ஜெர்மானியரின் முன்னேற்றத்தைத்தடுத்தன. இந்த யுத்தத்தில் ஆங்கிலேயருக்குப் பேருதவியாயிருந்தது, அவர்களுடைய கப்பற்படையே. ஆங்கிலேய கப்பற்படை ஜெர்மன் கப்பற்படையை அது தங்கியிருந்த துறைமுகத்தை விட்டு வெளியேற முடியாமல் தடுத்துவிட்டது; மேலும், ஜெர்மானியர்களுக்கு நடு நிலைமை நாடுகளிலிருந்து எவ்வித உதவியும் கிடைக்காதபடி கடல்களைச் சூழ்ந்துகொண்டது. தனது கப்பல்களில் சண்டை நடந்து வந்த இடங்களுக்கெல்லாம் போர்ப்படைகளையும் உணவுப் பொருள்களையும் கொண்டு சென்றது. யுத்த ஆரம்பத்தில் நீர் மூழ்கிக் கப்பல்களால் ஆங்கிலேய கப்பல்களுக்குப் பெருஞ்சேதம் ஏற்பட்ட போதிலும் சிறிது காலத்திற்குள் அவைகளால் உண்டான துன்பங்களைத் தவிர்க்கும்வழிகளைக் கண்டுபிடித்து, ஆங்கிலேயர்கள் தங்கள் கப்பல்களைப் பாதுகாத்துக்கொண்டார்கள். மேலும், 1917-ஆம்வருஷத்தில் அமெரிக்காவும் படைகளை அனுப்பி பிரிட்டிஷாருக்குத் துணை புரிந்தது. ஜெர்மானியர்களுக்கு வெளிநாடுகளிலிருந்து சாமான்கள் போகாததால் ஜெர்மனியில் உணவுப் பொருள்கள் கிடைக்காமல் பஞ்சம் ஏற்பட்டது. ஜெர்மன் அரசரான **கெய்ஸர்** ஹாலந்துக்கு ஓடிவிட்டார். ஜெர்மானியர்கள் சோர்வடைந்து சமாதானத்துக்கு வந்தனர். கி. பி. 1918-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ஆம் தேதி போர் நிறுத்தப்பட்டது. கி. பி. 1919ல் **வெர்சேல்ஸ்** என்னுமிடத்தில் சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. அதன்படி ஜெர்மனி தனது குடியேற்ற நாடுகளை இழந்தது. ஜெர்மனியின் படைப் பலம் மிகவும் குறைக்கப்பட்டது. ஜெர்மனி நேச தேசக் கட்சியாருக்கு ஏராளமான தொகை நஷ்ட ஈடு கொடுக்கும்படி தீர்மானிக்கப்பட்டது.

இந்தியரின் பேருதவி: இந்தப் பெரிய யுத்தத்தில் ஆங்கிலேயர் வெற்றியடைந்ததற்கு இந்தியர்கள் செய்த பேருதவி ஒரு காரணமாகும். இந்த யுத்தம் ஆரம்பமான பொழுது ஆங்கிலேயரிடம் போதிய போர்ப் படைகளில்லை. ஆகையால், இந்தியாவிலிருந்து இரண்டு படைகள் பிரான்ஸுக்கு அனுப்பப்பட்டன. ஜெர்மானியர் விஷக்காற்றை உபயோகித்த போதிலும், இந்திய வீரர்கள் சிறிதும் அஞ்சாமல் மிக்க தைரியத்துடன் போர்புரிந்து புகழ்பெற்றனர். இந்தியப் படைகள் யுத்தம் நடந்த எல்லா இடங்களுக்கும் அனுப்பப்பட்டன. முக்கியமாகத் துருக்கியிலும், மெஸபொட்டேமியாவிலும், பாலஸ்தீனத்திலும், கிழக்கு ஆப்பிரிக்காவிலும் இந்தியப் படைகள் சண்டை செய்து வெற்றி பெற்றன. நம் தேசத்திலுள்ள சுதேச மன்னர் அனைவரும் தம் படைகளையும் பொருள்களையும் கொடுத்து உதவினர்.

மகா யுத்தம் நடந்த காலத்தில் இந்திய தேசீயத் தலைவர் பலரும் இங்கிலாந்துக்கு உதவ முன் வந்தனர். சிறிய நாடுகளின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக ஏற்பட்ட தர்ம யுத்தம் என்று எண்ணி இந்திய மக்கள் முழுமனத்துடன் ஒத்துழைத்தார்கள். படை வீரர்களைத் தவிர மற்றும் பல வேலைகளிலும் இந்தியர் ஈடுபட்டனர். ஆங்கிலேயர் யுத்தம் முடிந்ததும் இந்தியாவுக்குச் சுய ஆட்சி அளிக்கக் கூடுமென்று நம்பிக் காங்கிரஸ் மகாசபை கிளர்ச்சி செய்வதை விட்டு, சண்டைக்கு உதவி புரிய முன் வந்தது. அதற்குக் காரணமாய் இருந்தவர் **மகாத்துமா காந்தி**யேயாவர். அவர் படைக்கு ஆள் திரட்டுவதற்கும், காயம்பட்டவர்களுக்குச் சிகிச்சை செய்வதற்கும் பணம் சேகரிப்பதற்கும் வேண்டிய உதவி புரிந்தார். சண்டையின் துவக்கத்தில் நம் நாட்டிலிருந்த 80,000 ஆங்கிலப் போர் வீரர்களையும், 1,70,000 இந்தியப் போர் வீரர்களையும் நம் நாடு கொடுத்து உதவியது. யுத்தம் நடைபெற்று வருகை

யில்சண்டைக்கு லாயக்கானவர்கள் சுமார் 10லக்ஷம் பேர்களும், வேறு வகைகளில் உதவக்கூடியவர்கள் 4 லக்ஷம் பேர்களும் பிரிட்டிஷ் படைகளுடன் சேர்ந்துகொண்டார்கள். சுமார் 25 கோடிப் பவுன் பணமும் நம்நாடு கொடுத்துதவியது. இவற்றைத் தவிர இந்தியாவினின்று ஏராளமான உணவுப் பொருள்களும், ஆடைகளும், வங்காளத்திலிருந்து சாக்குப் பைகளும், பூட்ஸுகள் செய்வதற்குப் பதனிட்ட தோலும், யுத்தக்கருவிகள் செய்வதற்கு வேண்டிய மைக்கா, இரும்பு முதலிய உலோகப் பொருள்களும் கணக்கின்றி அனுப்பப் பட்டன. சுமார் 40,000 இந்தியசிப்பாய்கள் இந்த யுத்தத்தில் மாண்டார்கள். லக்ஷக்கணக்கான வீரர் அங்கவீனமடைந்தனர். இந்தியரின் தியாகத்தையும் வீரத்தையும் அரசாங்கத்தாரே போற்றிப் பேசினர். வைஸ்ராய் ஹார்டிஞ்சு பிரபு 'இந்தியா தனது இரத்தம் முழுவதும் கொடுத்து வெள்ளென வெளுத்து விட்டது' என்று கூறினர். இந்தியாவிலும் யுத்த ஆரம்பத்தில் **'எம்டன்'** என்னும் ஜெர்மன் கப்பல் சென்னைக் கடற்கரைக்கு அருகிலிருந்த எண்ணெய்க்கிடங்குகளில் சில குண்டுகளை வீசிச் சென்றது. இதைத் தவிர நம் நாட்டில் வேறெந்தப் பாகமும் எதிரிகளால் தாக்கப்படவில்லை.

இந்தியர்கள் செய்த பேருபகாரத்திற்காக, பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்திய அரசியலில் சில சீர்திருத்தங்களைச் செய்யத் தீர்மானித்தனர். இந்தியா காரியதரிசியாராய் இருந்த **மாண்டேகு பிரபு** கி.பி. 1917-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20ஆம் தேதி இந்தியருக்குப் பொறுப்பாட்சி படிப்படியாகக் கொடுப்பதாகவும், நாளடைவில் இந்தியாவும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலுள்ள கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளைப் போன்ற சுய ஆட்சி நாடாக வேண்டுமென்பதே தங்கள் நோக்கமென்றும் ஓர் அறிக்கையை வெளியிட்டார். யுத்தத்தில்

வீரத்துடன் போர் புரிந்த• பலருக்கு **விக்டோரியா கிராஸ்** போன்ற பதக்கங்களும், பதவிகளும் அளிக்கப்பட்டன.

பீக்கானிர் மகா ராஜாவும், ஸின்ஹா பிரபுவும் யுத்த முடிவில் நடந்த வெர்ஸேல்ஸ் சமாதான. மகாநாட்டிற்கு இந்திய பிரதிநிதிகளாக அழைக்கப்பட்டு, உடன்படிக்கையில் கையொப்பமிட்டனர். சர்வதேச சங்கத்தில் இந்தியாவுக்குத் தனி ஸ்தானம் அளிக்கப்பட்டது. அதனுடன் கவர்னர் ஜெனரல் பதவியைத் தவிர மற்ற எல்லாப் பதவிகளும் இந்தியர்களுக்கு அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதை அனுசரித்துக் கி. பி. 1921ல் ஸின்ஹா பிரபு பீஹார் மாகாணக் கவர்னராக நியமிக்கப்பட்டார்.

கேள்விகள் :

1. ஹார்டிஞ்சு பிரபுவின் காலத்தில் நடந்த இரண்டு முக்கியமான சம்பவங்கள் எவை?
2. ஐரோப்பிய மகா யுத்தத்தின் காரணங்கள் யாவை ?
3. இந்த யுத்தத்தை 'மகா யுத்தம்' என்று கூறுவது ஏன்?
4. இந்த யுத்தத்தில் இந்தியர் எவ்வாறு உதவி புரிந்தனர் ?
5. ஐரோப்பிய மகா யுத்தம் எந்த உடன்படிக்கையால் முடிவுக்கு வந்தது ?

---

17. மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள்

ஹார்டிஞ்சு பிரபுவுக்குப் பின் **செம்ஸ்போர்டு பிரபு** வைஸ்ராயாய் நியமிக்கப்பட்டார். அவர் கி. பி. 1916 முதல் 1921 வரை ஐந்து வருஷங்கள் வேலை பார்த்து வந்தார். ஹார்டிஞ்சு பிரபு காலத்தில் ஆரம்பித்த ஐரோப்பிய மகா யுத்தம் செம்ஸ்போர்டு பிரபு காலத்திலும் நடந்து வந்தது. அவர் காலத்திலேதான் கி. பி. 1919-ஆம் வருஷம் யுத்தம் முடிவடைந்தது.

மூன்ருவது ஆப்கானிய யுத்தம்: ஐரோப்பிய மகா யுத்தத்தில் துருக்கி ஜெர்மனியுடன் சேர்ந்ததனுல் ஆப்கானிஸ்தான

மும் துருக்கியுடன் சேரவேண்டும் என்று சில ஆப்கானியர் கலகம் செய்தனர். ஆங்கிலேயருடன் நட்பாயிருந்த **அமீர் அபிபுல்லா** தாம் நடுநிலைமை வகிக்கத் தீர்மானித்தார். ஆனால், அவர் கி. பி. 1919ல் கொலையுண்டு போகவே, அவருடைய குமாரர் **அமனுல்லா** அமீரானார். அவர் பட்டத்துக்கு வந்த சமயத்திலேதான் ஐரோப்பிய மகா யுத்தம் முடிந்தது. ஆங்கிலேயரும் ஜெர்மானியரும் சமாதானம் செய்துகொண்டனர். யுத்த முடிவில் துருக்கிக்குச் சொந்தமானதும், முகம்மதியர்களுக்குப் புனிதமானதுமான சில நாடுகளை ஆங்கிலேயர் தங்கள் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்ததால், முகம்மதியர் ஓர் **கிலாபத்து** என்னும் இயக்கத்தை ஆரம்பித்தனர். ஆப்கானிஸ்தானத்தில் அந்த இயக்கம் வலுத்து ஆங்கிலேயருக்கு விரோதமாகக் கிளர்ச்சி ஏற்பட்டது. ஆதலால், அமனுல்லா ஆங்கிலேயருடன் போர் தொடுத்தார். காபூலின்மீது ஆகாய விமானங்களினின்று குண்டுகள் போடப்பட்டன. ஆப்கானிய சைனியம் எளிதில் தோற்கடிக்கப்பட்டது. அமனுல்லா ஆங்கிலேயரிடம் சமாதானம் கோரினார். இருவரும் செய்துகொண்ட சமாதான உடன்படிக்கையின்படி இந்திய துரைத்தனத்தார் அமீருக்குக் கொடுத்துவந்த உதவிப் பணத்தை நிறுத்திவிட்டனர். அமீர் ஆப்கானிஸ்தானத்தைத் தம் இஷ்டப்படி ஆட்சி செய்ய உரிமை கொடுக்கப்பட்டது.

செம்ஸ்போர்டு பிரபு

அமனுல்லா கி. பி. 1928ல் ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டுத் தம் நாடு திரும்பியதும் மேல் நாட்டு நாகரிகத்தையும் பழக்க வழக்கங்களையும் தம் நாட்டில் புகுத்த முயன்றார். ஆப்கானியர் அவைகளை வெறுத்தனர். அவர்கள்

அரசருக்கு விரோதமாகக் கிளம்பி, அவரை நாட்டை விட்டுத் துரத்திவிட்டார்கள். பின்பு சிறிது காலம் ஆப்கானிஸ்தானத்தில் குழப்பமாய் இருந்தது. முடிவில் அமனுல்லாவிடம் மந்திரி வேலை பார்த்துவந்த **நாதர்ஷா** என்பவர் அமீரானுர். அவரும் கி. பி. 1933-ஆம் வருஷத்தில் கொலை செய்யப்படவே, அவருடைய மைந்தர் பட்டத்திற்கு வந்தார். அவர் ஆங்கிலேயருடன் சிநேகமாய் இருந்து வருகிருர்.

மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் (கி. பி. 1919): ஐரோப்பிய மகா யுத்தத்தில் இந்தியர்கள் ஆங்கிலேயருக்கு உதவி செய்தபோதிலும் ஜனங்களுக்கு ஆங்கிலேயர்மீது அதிருப்தி தீரவில்லை. காங்கிரஸ் மகா சபை **கோபாலகிருஷ்ண கோகலே, ஸர். பெரோஸ்ஷா மேத்தா** போன்ற மிதவாதத் தலைவர்களின் தலைமையிலிருந்து **லோகமான்ய பால கங்காதர திலகர், லாலா லஜபதிராய்** போன்ற தீவிரவாதத் தலைவர்களின் வசம் வந்தது. அவர்கள் இந்தியாவிற்குச் சுயராஜ்ய உரிமை கொடுக்கப்படவேண்டுமென்று கிளர்ச்சிசெய்தார்கள். சென்னையில் **டாக்டர் அன்னிபெஸன்டு** அம்மையாரின் தலைமையில் **'இந்தியன் ஹோம் ரூல்'** கிளர்ச்சி ஏற்பட்டு, மிகத் தீவிரமாய் நடந்து வந்தது. ஆகையால், அரசாங்கத்தார் **பெஸன்டு அம்மையாரைக்** கைது செய்தார்கள். அதனுல், கிளர்ச்சி மேலும் அதிகமாயிற்று. ஆகையால், அச்சமயம் இங்கிலாந்தில் இந்திய காரியதரிசியாராயிருந்த **மாண்டேகு** என்பவர் இந்தியாவுக்கு வந்து ஜனங்களின் மனப்பான்மையை அறிந்துகொண்டு இந்தியர்களுக்குப் படிப்படியாகச் சுதந்திரம் அளிக்கப்படும் என்று ஓர் அறிக்கை வெளியிட்டார். அதன் பிரகாரம் மாண்டேகுவும், செம்ஸ்போர்டு பிரபுவும் சேர்ந்து ஒரு புதிய அரசியல் திட்டத்தைத் தயாரித்தனர். அச்சட்டம் கி. பி. 1919ல் இங்கிலாந்து பார்லிமெண்டாரால் நிறைவேற்றப்பட்டது. அதனுல் ஏற்பட்ட சீர்திருத்தங்

கள் **மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள்** என்னும் பெயர் பெற்றன.

அதன்படி இங்கிலாந்திலுள்ள இந்தியா கௌன்ஸிலில் இந்தியர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த ஸ்தானங்கள் இரண்டிலிருந்து மூன்று ஆக்கப்பட்டன. வைஸ்ராயின் நிர்வாக சபையிலும் இந்தியர்களின் ஸ்தானங்கள் ஒன்றிலிருந்து மூன்று ஆக்கப்பட்டன. அகில இந்தியா சட்டசபை இரண்டாகப் பிரிக்கப்பட்டது. ஒன்று **கௌன்ஸில் ஆவ் ஸ்டேட்டு** அல்லது **ராஜாங்க சபை** எனப்படும். மற்ருென்று **லெஜிஸ்லேட்டிவ் அஸெம்பிளி** அல்லது **இந்திய சட்டசபை** எனப்படும். இவற்றில் இந்திய சட்டசபையில் 145 அங்கத்தினர்கள் உண்டு. அவர்களில் 104 அங்கத்தினர்கள் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், பாக்கியுள்ளவர்கள் வைஸ்ராயால் நியமனம் செய்யப்பட்டவர்கள். ராஜாங்க சபையில் 60 அங்கத்தினர்கள் உண்டு. அவர்களில் 33 அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். பாக்கியுள்ள 27 பேர்கள் நியமனம் செய்யப்பட்டவர்கள், அவர்களில் உத்தியோகஸ்தர்களின் தொகை 20 பேர்களுக்கு மேற்படக்கூடாது. ராஜாங்க சபையின் தலைவரும் உபதலைவரும் வைஸ்ராயால் நியமிக்கப்படுகிருர்கள். இச்சபையின் அங்கத்தினர்களுக்கு இந்திய சட்டசபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைப் பரிசோதனை செய்து, அவற்றை ஒப்புக்கொள்ளவோ, நிராகரிக்கவோ அதிகாரம் உண்டு. இந்திய சட்டசபையின் தலைவரும், உபதலைவர்களும் அச்சபை அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிருர்கள். இந்திய சட்ட சபை அங்கத்தினர் அரசாங்க வரவு செலவு திட்டத்தைப்பற்றி விவாதிக்கவும், இந்தியா முழுவதற்கும் பொதுவான சட்டங்கள் இயற்றவும் உரிமை பெற்றிருந்தனர். இராணுவச் செலவைப்பற்றி மட்டும் இவர்கள் தீர்மானங்கள் கொண்டுவர முடியாது. வைஸ்ராய்க்குச் சட்ட சபைகளின் தீர்மானங்களை மாற்றவும், ரத்துச் செய்யவும் அதிகாரம்

உண்டு. இச்சபைகளுக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை ஒரு குறிப்பிட்ட அளவு வரி கொடுப்போருக்கும் அளிக்கப்பட்டது. ராஜாங்க சபை ஐந்து வருஷ காலமும், இந்திய சட்ட சபை மூன்று வருஷ காலமும் இருக்கலாம். அதற்குப் பிறகு புதிய சபைகள் கூட்டப்பட வேண்டும்.

மாகாண இரட்டையாட்சி: இவ்வாறே மாகாணத் துரைத்தனத்திலும் பெரிய மாறுதல் ஏற்பட்டது. மாகாணக் கவர்னர்களின் நிர்வாக சபை அங்கத்தினர்களின் எண்ணிக்கை இரண்டு முதல் நான்கு வரையில் இருக்கலாம் என்பது தீர்மானிக்கப்பட்டது. அவர்கள் கவர்னர்களால் நியமனம் செய்யப்பட்டு நிர்வாகம் நடத்தி வருகிறார்கள். மாகாண நிர்வாகம் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒன்று மேற்கூறிய நியமனம் பெற்ற அங்கத்தினர்களின் பொறுப்பிலும், மற்றொன்று சட்ட சபை அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரிகளின் பொறுப்பிலும் விடப்பட்டன. இம்முறைக்கு **இரட்டை ஆட்சி** என்பது பெயர். வரி வசூல், சட்டம், போலீஸ், நியாய விசாரணை, வரவுசெலவு கணக்குகள் முதலியவை **ஒதுக்கி வைக்கப்பட்டவை** (Reserved subjects) எனவும்; கல்வி, சுகாதாரம், வைத்தியம், கூட்டுறவு, ஸ்தல சுய ஆட்சி, கைத்தொழில், பொதுமராமத்து முதலியவை **மாற்றப்பட்டவை** (Transferred subjects) எனவும் பெயர் பெற்றன. மாகாணச் சட்ட சபைகளின் அங்கத்தினர்களின் சங்கியை அந்தந்த மாகாணத்தின் விஸ்தீரணத்திற்குத் தக்கவாறு 50 முதல் 150 வரை குறிப்பிடப்பட்டது. அவர்களுள் நூற்றுக்கு எழுபதுபேர் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். முகம்மதியர்கள், கிறிஸ்தவர்கள், ஐரோப்பியர்கள் ஆகிய சிறுபான்மை வகுப்பினர்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவமும், தனித் தொகுதிகளும் ஏற்படுத்தப்பட்டன. சென்னை மாகாணத்தில் பிராமணரல்லாதாருக்கும் தனித் தொகுதி ஏற்படுத்தப்பட்டது. மாகாணச் சபைத் தலைவரும்

உபதலைவரும் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுக்குச் சம்பளம் உண்டு. மாகாணச் சட்ட சபையின் பெரும்பான்மைக் கட்சியார் தங்களில் சிலரை மந்திரிக ளாகத் தேர்ந்தெடுப்பார்கள். மந்திரிகள் மாற்றப்பட்ட இலாக்காகளுக்குப் பொறுப்பாளர்களாய் இருந்து, நிர்வா கத்தை நடத்திவருவார்கள். மந்திரிகளுக்குச் சம்பளம் உண்டு. மாகாணச்சட்ட சட்டசபைகளுக்கும் இந்திய சட்ட சபையைப் போலத் தீர்மானங்கள் கொண்டுவரவும், வரவு செலவு கணக்கு களைப்பரிசோதனை செய்யவும், துரைத்தனத்தார் செய்து வரும் வேலைகளைப் பற்றிக் கேள்விகள் கேட்கவும், மாகாண சம்பந்த மாகச் சட்ட சபையினரால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங் களை மாற்றவும், ரத்துச் செய்யவும் கவர்னருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. ஆகையால், மாகாணச் சட்டசபை யில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் கவர்னரின் அங்கீகாரம் பெற்றாலன்றிச் சட்டங்களாகா. ஒதுக்கப்பட்ட இலாக்கா கள் சம்பந்தமாகச் சட்டசபையார் எதையும் மாற்றவோ, கூட்டவோ முடியாது.

இவ்வாறு மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தங் களின் பயனாக இந்திய அரசியல் நிர்வாகத்தில்இந்தியர் ஓரளவு உரிமையளிக்கப் பெற்றனர். இத்திட்டமானது நாளடைவில் இந்தியர்கள் சுய ஆட்சி பெறுவதற்கு முதற்படியாகுமென்று அரசாங்கத்தார்கள் கூறினார்கள். ஆனால், இத்திட்டத்தின்படி வைஸ்ராய்க்கும், மாகாணக் கவர்னர்களுக்கும் விசேஷ அதி காரம் கொடுக்கப்பட்டிருந்தது. மாகாண ஆட்சியிலும் ஒரு பகுதியே ஜனப்பிரதிநிதிகளுக்கு விடப்பட்டிருந்தது. தனித் தொகுதி முறைகள் ஏற்படுத்தப்பட்டது நாட்டின் ஒற்றுமை உணர்ச்சிக்குத் கெடுதலாய் இருந்தது. மேற்கூறிய காரணங்க ளால் முற்போக்குக் கொள்கைகளையுடையதேசியத்தலைவர்கள்

இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். யுத்தத்தில் உயிரையும் பணத்தையும் கொடுத்து உதவி செய்த இந்தியர்களுக்கு நிர்வாகத்தில் போதுமான அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்றும், நாட்டில் முழு ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என்றும் காங்கிரஸ் மகாசபை கிளர்ச்சி செய்து வந்தது. அவர்கள் இச்சீர்திருத்தங்களை ஒப்புக்கொள்ளாது **மகாத்துமா காந்தியடிகளின்** தலைமையில் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினார்கள். நாட்டில் குழப்பம் மேலிட்டது. அதை அடக்கச் செம்ஸ்போர்டு பிரபு, 1919-ஆம் வருஷத்தில் **ரௌலட்டுச் சட்டம்** போன்ற சில கடுமையான சட்டங்களைப் பிறப்பித்தார். அதன்படி ஜனங்கள் விசாரணையின்றிச் சிறையில் அடைக்கப்பட்டார்கள். மேலும், இந்திய அரசாங்கத்தார் பிரசங்கங்களைச் செய்வதிலும், பத்திரிகைகளை வெளியிடுவதிலும் பல கட்டுப்பாடுகளைச் செய்தார்கள். அதனால், நாட்டில் பரபரப்பு ஏற்பட்டது. ரௌலட்டுச் சட்டத்தை எதிர்த்து நாடெங்கும் பிரசாரம் நடைபெற்றது. பஞ்சாபில் அமிர்தசரஸ் நகரில் **ஜாலியன் வாலா பாகு** என்னும் தோட்டத்தில் சுமார் 20,000 பேர்கள் கூட்டம் கூடியிருந்தார்கள்; **ஜெனரல் டயர்** என்னும் இராணுவ உத்தியோகஸ்தர் அவர்களைக் கலையுமாறு கூற, அவர்கள் கேட்காதபடியால் அவர்களைச் சுடும்படி தம் வீரர்களுக்கு உத்தரவிட்டார். அதனால் நிராயுதபாணிகளான ஆண், பெண், குழந்தைகள் அடங்கிய அக்கூட்டத்தில் சுமார் 400 பேர் உயிரிழந்தனர். 2000 பேர் காயமடைந்தனர். இதுதான் **பஞ்சாபு படுகொலை** என்று வழங்கி வருகிறது.

பஞ்சாபில் இராணுவச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டு ஜனங்கள் கடுமையான அடக்கு முறைக்கு ஆளானார்கள். இவைகளால் ஜனங்கள் அரசாங்கத்தாரிடம் மிகுந்த வெறுப்படைந்தார்கள்.

தேசியத் தலைவர்கள் பொது ஜனக் கூட்டங்களிலும், பத்திரிகைகளிலும், துண்டுப் பிரசுரங்களிலும் அரசாங்கத்தாரின் செயல்களைக் கண்டித்து வரலானார்கள். அதனால், நாடெங்கும் கிளர்ச்சி அதிகமாயிற்று. இக்நிலையில் கி.பி. 1921ல் செம்ஸ்போர்டு பிரபு இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றார்.

கேள்விகள் :

1. மூன்றாவது ஆப்கானிய யுத்தம் ஏற்படக் காரணம் என்ன?
2. மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் எந்த வருஷத்தில் இயற்றப்பட்டன ?
3. அச்சீர்திருத்தங்களினால் இந்திய அரசியல் முறையில் ஏற்பட்ட மாறுதல்கள் யாவை ?
4. ஏன் அந்தச் சட்டம் இந்தியர்களுக்கு முழுதும் திருப்தி அளிக்கவில்லை ?
5. ரௌலட்டுச் சட்டம் ஏன் ஏற்படுத்தப்பட்டது? அதனால் என்ன நேரிட்டது ?

---

18. இந்திய தேசிய இயக்கமும் மகாத்துமா காந்தியும்

தேசிய உணர்ச்சி: வில்லியம் பெண்டிங்கு பிரபு காலம்முதல் இந்தியர்கள் ஆங்கிலக் கல்வி கற்க ஆரம்பித்தார்கள். நாளடைவில் இந்தியர்களுக்குள் மேனாட்டுக் கல்வியறிவு மென்மேலும் பரவியது. ஜனங்களின் நாகரிகமும் அறிவும் பெருகப் பெருக, அவர்கள் நாட்டின் அரசியல் நிர்வாகத்தில் அதிகாரம் பெற ஆசை கொண்டார்கள். ஆங்கிலேய ஆட்சிக்கு முன்பு நாட்டில் பல ராஜ்யங்களிருந்தன. அந்தராஜ்யங்களுக்குள் அடிக்கடி சண்டைகள் நடந்து வந்தன. ஒரு ராஜ்யத்திலுள்ள ஜனங்கள் மற்றொரு ராஜ்யத்திலுள்ள ஜனங்களை அந்நியராகப் பாவித்து வந்தார்கள். தேசம் முழுமையும் ஆங்கிலேய ஆட்சிக்குள் வந்த

பின் அந்த வேற்றுமைகள் நீங்கி இந்தியர்களெல்லோரும் ஒரு தேசத்தினர் என்ற உணர்ச்சி ஏற்பட்டது. இங்கிலாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளில் தேசிய உணர்ச்சியும், ஜன நாயக ஆட்சியும் இருப்பதைப்போல இந்தியாவின் உணர்ச்சி நாட்டில் பரவியது. ஆகையால், இந்தியர்களை ஒன்று கூட்டி அவர்களுக்கு வேண்டிய தேவைகளை அரசாங்கத்தாருக்குத்தெரி வித்து, அவர்களுக்குரிய உரிமைகளைப் பெறுவதற்காகக் கி.பி. 1885ல் **இந்தியன் நாஷனல் காங்கிரஸ்** ஏற்படுத்தப்பட்டது. அது முதல் வருஷா வருஷம் டிசம்பர் மாதத்தில் காங்கிரஸ் தலைவர் கள் கூடித் தேச மக்களின் குறைகளையும் விருப்பங்களையும் தீர்மானங்களாக நிறைவேற்றி, அரசாங்கத்தாருக்குத் தெரி வித்து வந்தார்கள். ரிப்பன் பிரபு ஏற்படுத்திய ஸ்தல சுய ஆட்சிச் சட்டத்தின்மூலமாக இந்தியர்க்கு ஒரு புதிய உணர்ச்சி உண்டாயிற்று. முதன்முதல் படித்தவர்கள் மட்டுமே காங் கிரஸில் ஈடுபட்டிருந்தார்கள்.

கர்ஸன் பிரபு வங்காளப்பிரிவினை செய்த சமயத்தில் தேசீய இயக்கம் வலுவடைந்தது. வங்காளத்தில் ஆங்கிலேயருக்கு விசேஷமாகப் பலாத்கார இயக்கமும் தோன்றியது. **சுரேந்திர நாத பானர்ஜி, விபின் சந்திர பாலர்** போன்ற தலைவர்கள் சுதேசி இயக்கத்தை நாடெங்கும் பரவச் செய்தனர். **பால கங்காதர திலகர்** என்னும் சிறந்த தேசாபிமானி, ‘ஸ்வராஜ்யம் இந்திய ரின் பிறப்புரிமை’ என்று கூறி, மக்களிடையே தேசீய உணர்ச் சியைப் பெருகச்செய்தார். நம் தமிழ் நாட்டிலும் **வீ. ஓ. சிதம்பரம் பிள்ளை,** சேலம் **விஜயராகவாசாரியார்** போன்ற பல பிர பல தேசியத் தலைவர்கள் தோன்றி ஜனங்களிடையே தம் முடைய கொள்கைகளையும், நோக்கங்களையும் எடுத்துக்கூறிப் பிரசாரம் செய்யத்தலைப்பட்டார்கள். சுப்பிரமணிய பாரதியார் தேசீய கீதங்களைப்பாடித் தமிழ் நாட்டில் தேசீய உணர்ச்சியை வளர்த்தார்.

நாட்டில் பல கட்சிகள் தோன்றுதல்: கி. பி. 1907ல் காங்கிரஸ் மகாநாடு **சூரத்து** நகரில் கூடியது. **கோபாலகிருஷ்ண கோகலே** போன்ற மிதவாதிகள் பூரண சுதந்திரம் கேட்காமல், இந்தியர்களுக்குப் பரிபாலன விஷயத்தில் அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று மட்டும் கூறினர். முற்போக்குடைய தீவிர வாதிகளுக்கு அது பிடிக்கவில்லை. ஆகையால், காங்கிரஸ் தலைவர்களுக்குள் பிளவு உண்டாகியது. அச்சமயத்தில் அளிக்கப்பட்ட மிண்டோ - மார்லி சீர்திருத்தங்கள் பெரும்பான்மையோருக்குத் திருப்தியை அளிக்கவில்லை. காங்கிரஸ் தலைவர்களில் சிலர் தீவிர முறையை மேற்கொண்டனர். அரசாங்கத்தார் அவர்களை அடக்கவேண்டி அடக்குமுறைகளைக் கையாண்டார்கள். பல தலைவர்களைச் சிறை செய்தார்கள்; பலரைத் தேசப்பிரஷ்டம் செய்தார்கள். கி. பி. 1907 முதல் மிதவாதிகள் காங்கிரஸ் மகா சபையிலிருந்து விலகித் தனிக்கட்சியை ஸ்தாபித்துக்கொண்டார்கள். அதன் தலைவர்களில் முக்கியமானவர்கள் **ஸர் தேஜ் பஹதூர் ஸப்ரூ, வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார்** என்பவர்கள். தவிரவும், கோபாலகிருஷ்ண கோகலேயின் முயற்சியால் பூனாவில் **இந்திய ஊழியர்களின் சங்கம்** (Servants of India Society) என்னும் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அச்சங்கம் நாட்டில் கல்வியைப் பரப்புவதிலும் பொது நன்மைக்கான சீர்திருத்தங்கள் செய்வதிலும் ஈடுபட்டு உழைத்து வருகிறது. கி. பி. 1906-ஆம் வருஷம் **முஸ்லீம் லீகு** என்ற கட்சி முஸ்லீம்களுடைய முன்னேற்றத்தைக் கருதி ஏற்படுத்தப்பட்டது. **இந்து மகாசபை** என்னும் ஒரு சபை இந்துக்களின் முன்னேற்றத்திற்காக ஸ்தாபிக்கப்பட்டது.

கி. பி. 1914ல் ஐரோப்பிய மகா யுத்தம் ஆரம்பித்ததும், இந்தியத் தலைவர்கள் தாங்கள் கிளர்ச்சி செய்வதை நிறுத்திவிட்டு, யுத்தத்தில் ஆங்கிலேயரின் வெற்றியைக் கோரிப் பூரண உதவி செய்தார்கள். யுத்தம் முடிந்ததும் இந்தியருக்குச் சுய

ஆட்சி அளிக்கப்படுமென்று. நினைத்தார்கள். ஆனால், கி. பி. 1919ல் செய்யப்பட்ட மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தம் தேசிய வாதிகளுக்கு ஏமாற்றத்தை அளித்தது.

மகாத்துமா காந்தியும் ஒத்துழையாமையும்: இந்தியாவில் ஹார்டிஞ்சு பிரபு வைஸ்ராயாய் இருந்த சமயத்தில் தென் ஆப்பிரிக்காவிலுள்ள ஆங்கிலேயர் அங்கிருந்த இந்தியரைக் கறுப்பு மனிதர் என்று அவமதித்து, இந்தியர்கள் அங்கே வியாபாரமாவது விவசாயமாவது செய்யக் கூடாதென்றும், சொந்தமாக நிலங்கள் வைத்துக்கொள்ளக் கூடாதென்றும் சில கடுமையான சட்டங்களை உண்டாக்கினார்கள். அச்சமயம் கத்தியவாரிலுள்ள ராஜகோட்டுச் சமஸ்தான திவானின் குமாரர் **மோஹன்தாஸ் கரம்சந்து காந்தி** என்பவர் பாரிஸ்டராகத் தென் ஆப்பிரிக்கா சென்றிருந்தார். அவர் இந்தியருக்கு ஏற்பட்ட அநீதியைக் கண்டு, அங்குள்ள இந்தியர்களை ஒன்று சேர்த்து, துரைத்தனத்தாரை எதிர்த்துப் போராடி, இந்தியர்களுக்குச் சில உரிமைகளை வாங்கிக்கொடுத்தார். பிறகு அவர் இந்தியாவிற்கு வந்து காங்கிரஸ் மகா சபையில் சேர்ந்துகொண்டு உழைத்துவந்தார். அவர் யுத்தத்தின்போது ஆங்கிலேயருக்குப் பல விதமாக உதவிபுரிந்தார். அவரும் யுத்தத்திற்குப் பின்பு இந்தியர்களுக்குச் சுய ஆட்சி உரிமை அளிக்கப்படும் என்று எண்ணினர். ஆனால், ஆங்கிலத் துரைத்தனத்தார் மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தத்

மகாத்துமா காந்தி

த்தைத்தான் அளித்தார்கள். அச்சீர்திருத்தத்தால் அரசியல் துறையில் முன்னேற்றமில்லை என்று கருதிக் காங்கிரஸ் மகா சபை அதை ஏற்றுக்கொள்ள மறுத்தது. அச்சீர்திருத்தங்களைப் பகிஷ்காரம் செய்யவேண்டுமென்றும் காங்கிரஸ் தலைவர்கள் தீவிரமாகப் பிரசாரம் செய்யத் துவக்கினார்கள். இத்தறுவாயில் இந்திய துரைத்தனத்தார் அமுலுக்குக் கொண்டு வந்த ரௌலட்டுச் சட்டமும், ஜாலியன்வாலாபாகில் ஜெனரல் டயர் நடத்திய படுகொலையும் நாட்டில் குழப்பங்களை அதிகரிக்கச் செய்தன. அச்சமயத்தில் **மகாத்துமா காந்தி** காங்கிரஸின் தலைமையை மேற்கொண்டு, ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தார். அவர் பலாத்காரச்செயல்களை முற்றிலும் வெறுத்தார். **அஹிம்ஸை** முறையிலேயே துரைத்தனத்தாருடன் போராடி இந்தியாவுக்குச் சுயஆட்சி பெறவேண்டுமென்று அவர் போதித்தார். துரைத்தனத்தார் இந்தியரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும்படி வற்புறுத்த அரசாங்கத்துடன் மக்கள் ஒத்துழைக்கக்கூடாது என்று பிரசாரம் செய்தார். அதன்படி பல இந்தியர்கள் கலாசாலைகள், நியாய ஸ்தலங்கள் முதலியவற்றினின்று நீங்கினார்கள். சிலர் தம் உத்தியோகங்களை ராஜிநாமா செய்தனர். 'அந்நிய நாட்டுச் சாமான்களைப் பகிஷ்கரிக்க வேண்டும். சுதேசிச் சாமான்களையே உபயோகித்தல் வேண்டும். கையினால் நூற்று, கையினால் நெய்யப்பட்ட கதர் ஆடைகளையே எல்லோரும் அணிய வேண்டும். குடிப் பழக்கத்தை ஒழிக்க வேண்டும். தீண்டாமையை ஒழிக்க வேண்டும். இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் ஒற்றுமை ஏற்படவேண்டும்' என்று அவர் போதித்தார்; பேச்சளவில் நில்லாமல் தம் நோக்கங்களைப் பெறுவதற்குச் சட்ட மறுப்பு, சத்தியாக்கிரஹம் என்ற காரிய முறைகளையும் பழக்கத்திற்குக் கொண்டுவந்தார். மகாத்துமாகாந்தி ஏழைமக்களின் முன்னேற்றத்தையே நாடி உழைத்து வந்ததால் அவருடைய செல்வாக்கு

நாட்டில் அதிகரித்தது. **சித்த ரஞ்சன தாஸர், பண்டித மோதிலால் நேரு** போன்ற பல பிரமுகர்கள் அவரைப் பின்பற்றி ஏராளமான வரும்படி வந்துகொண்டிருந்த தங்களுடைய வக்கீல் தொழில்களை விட்டு, ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டனர். அதே சமயத்தில் துருக்கிக்குச் சொந்தமான பல நாடுகள் பிடுங்கப்பட்டதால், இந்திய முஸ்லீம்களும் அரசாங்கத்தாரிடம் கோபமடைந்து, **கிலாபத்து** இயக்கத்தை ஆரம்பித்து காங்கிரஸ் கட்சியினருடன் ஒத்துழைக்கலாயினர். இவ்வாறு எதிர்ப்புக்கட்சி பலமடைவதைக் கண்ட துரைத்தனத்தார், அடக்கு முறைகளை உபயோகித்து ஏராளமான காங்கிரஸ்வாதிகளைச் சிறையில் அடைத்தனர். தேசியத் தலைவர்கள் மாண்டேகு—செம்ஸ்போர்டு திட்டப்படி முதல்முதல் நடந்த தேர்தல்களைப் பகிஷ்கரித்தனர். சீர்திருத்தங்களில் திருப்தி கொண்ட மற்றக் கட்சியினர் தேர்தல்களில் நின்று சட்டசபை அங்கத்தினர்களாகவும் மந்திரிகளாகவும் பதவிகளையேற்று, அரசாங்கத்தாருடன் ஒத்துழைத்தார்கள். ஐந்தாம் ஜார்ஜ சக்கரவர்த்தியாரின் சிறிய தகப்பனுரான கானுட்டுக் கோமகனுர், சட்ட சபைகளை ஆரம்பித்து வைத்தார்.

இச்சமயத்தில் சென்னை மாகாணத்தில் பிராமணரல்லாதார் ஒன்றுசேர்ந்து **ஜஸ்டிஸ் கட்சி** என்ற ஒரு புதிய கட்சியைத் தொடங்கினுர்கள். அவர்கள் கி. பி. 1921-ஆம் வருஷம் மாண்டேகு—செம்ஸ்போர்டு திட்டத்தின்படி நடந்த தேர்தல்களில் கலந்துகொண்டு சட்டசபையில் பெரும்பான்மையான ஸ்தானங்களைப் பெற்றனர். சட்ட சபையில் அக்கட்சியின் தலைவராயிருந்த **பனகால் அரசர்** மந்திரி சபையை அமைத்து, இரட்டை ஆட்சியை நடத்தி வந்தார். **ஸர். பிட்டி. தியாகராய செட்டியார், டாக்டர் மாதவ நாயர்** முதலானவர்களின் தலைமையின்கீழ் ஜஸ்டிஸ் கட்சி பலமடைந்தது.

கி. பி. 1921ல் **ரீடிங்கு பிரபு** வைஸ்ராய் ஆனர். அவர் காலத்திலேதான் ஒத்துழையாமை இயக்கம் வலுத்தது. அவ்வருஷம் நவம்பர் மாதத்தில் **வேல்ஸ் இளவரசர்** இந்தியாவுக்கு வந்த பொழுது காங்கிரஸ்காரர்கள் அவ்ரை வரவேற்கும் விழாவைப் பகிஷ்கரித்தார்கள். பின்னர் மகாத்துமாகாந்தி ஒரு பெரிய சட்ட மறுப்பு இயக்கத்திற்குத் திட்டம் போட்டுக்கொண்டிருந்ததை அறிந்த அரசாங்கத்தார், கி. பி. 1922ல் அவரைக் கைது செய்து, ஆறு வருஷம் சிறைத் தண்டனை விதித்தனர். ஆனல், கி. பி. 1924ல் அவருக்குத் தேக அசௌக்கியம் ஏற்பட்டபடியால், அவர் விடுதலை செய்யப்பட்டார்.


ரீடிங்கு பிரபு

மகாத்துமா காந்தி சிறையில் இருந்த சமயத்தில் காங்கிரஸ் தலைவர்களில் சிலர் சட்டசபைத் தேர்தலில் கலந்துகொண்டு, சட்டசபைகளின் உள்ளிருந்துகொண்டே அரசாங்கத்தாரை எதிர்த்து இரட்டையாட்சி நடைபெறவொட்டாமல் தடைசெய்ய வேண்டுமென்று எண்ணினர்கள். அதற்காக அவர்கள் காங்கிரஸ் மகாசபையினுள்ளேயே **சுயராஜ்யக் கட்சி** என்னும் ஒரு பிரிவை உண்டாக்கினர்கள். **சித்தரஞ்சன தாஸர், பண்டித மோதிலால் நேரு** ஆகிய அறிவாளிகள் அக்கட்சிக்குத் தலைமை வகித்து நடத்தினர்கள். கி. பி. 1925-ஆம் வருஷம் நடந்த சட்டசபைத் தேர்தலில் சுயராஜ்யக் கட்சியார் அநேக மாகாணச் சட்டசபைகளில் பெரும்பான்மையான ஸ்தானங்களைக் கைப்பற்றினர். முக்கியமாக வங்காளம், மத்திய மாகாணம் இவைகளில் காங்கிரஸ் அங்கத்தினர்கள் பெரும்பான்

மையோராய் இருந்தும், மந்திரி பதவியை ஏற்க மறுத்து, எதிர் கட்சியிலேயே இருந்து, அம்மாகாணங்களில் இரட்டையாட்சி நடக்கவொட்டாமல் செய்தார்கள். இந்தியா சட்ட சபையிலும், காங்கிரஸ் அங்கத்தினர் ஏராளமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுள் **வித்தல்பாய்** படேல் என்ற தேசாபிமானி, சட்டசபையின் அக்கிராசனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, வெகு கண்ணியத்துடனும் திறமையுடனும் வேலை பார்த்து வந்தார். அவர்தாம் இந்தியா சட்டசபையின் முதல் இந்திய அக்கிராசனாதிபதியாவர். சுயராஜ்யக் கட்சியினர் மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களின் குறைகளை எடுத்துக்காட்டியதுடன், சட்ட சபைகளில் அரசாங்கத்தாருடன் வாதாடி, அரசாங்க விஷயங்கள் நடக்கவொட்டாமல் தடை செய்தார்கள். இவ்வாறாக இந்தியாவில் தேசீய இயக்கம் மேன்மேலும் வளர்ந்து வந்தது. சட்ட மறுப்பு இயக்கம் கைவிடப்பட்ட போதிலும், காங்கிரஸ் மகாசபையின் முயற்சிகள் குன்றவில்லை. மகாத்துமா காந்தியின் தலைமையின்கீழ்க் காங்கிரஸ் மகாசபை பலமடைந்தது. காங்கிரஸ் அங்கத்தினர்களின் தொகை வரவர அதிகமாயிற்று. கிராமங்களிலும், நகரங்களிலும் காங்கிரஸ் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன. இந்த நிலையில் ரீடிங்கு பிரபு கி.பி. 1926ல் இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றார்.

கேள்விகள் :

1. தேசீய உணர்ச்சி இந்தியாவில் ஏற்படக் காரணங்கள் எவை ?
2. காங்கிரஸ் மகாசபையில் எப்போது பிளவு ஏற்பட்டது ? ஏன் ?
3. ரீடிங்கு பிரபு காலத்தில் நம்தேசத்தில் உண்டான கிளர்ச்சிக்குக் காரணங்கள் எவை ? அதை நடத்தியவர் யார் ?

4. சுயராஜ்யக் கட்சி யாரால் ஏற்படுத்தப்பட்டது? அதன் நோக்கமென்ன? அது எவ்வளவு தூரம் வெற்றி அடைந்தது?

5. மகாத்துமா காந்தியின் நோக்கங்களும் கொள்கைகளும் யாவை?

6. குறிப்பு எழுது:—(1) இந்திய ஊழியர் சங்கம், (2) வித்தல்பாய் படேல்,

19. சைமன் கமிஷனும் வட்ட மேஜை மகா நாடுகளும்

ரீடிங்கு பிரபுவுக்குப் பிறகு **இர்வின் பிரபு** வைஸ்ராயாய் வந்தார். அவர் கி. பி. 1926 முதல் 1931 வரையில் வேலை பார்த்தார். அவர் இந்தியர்களிடம் அன்பும் அனுதாபமும் கொண்டவர். அடக்கு முறைகளைவிடச் சமாதான முறைகளிலேயே அவருக்கு நம்பிக்கை அதிகம். அவர் இந்திய அரசியல் முறையில் விரைவில் சில மாறுதல்களைச் செய்ய வேண்டுமென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தாரிடம் தெரிவித்தார். அவரது விருப்பத்தின்படியே கி. பி. 1927ல் **ஸர். ஜான் சைமன்** என்பவரைத் தலைவராகக் கொண்ட ஒரு கமிஷனைப் பார்லிமெண்டார் நியமித்தனர். அதற்குச் **சைமன் கமிஷன்** என்னும் பெயர் கொடுக்கப்பட்டது. அவர்கள் இந்தியாவைச் சுற்றிப் பார்த்து, மாண்டேகு-செம்ஸ்போர்டு திட்டங்கள் நடைபெற்ற விதத்தைக் கண்டறிந்து, இந்தியர்களுக்கு இன்னும் எவ்வளவு தூரம் பொறுப்பாட்சி அளிக்கலாம் என்று தீர்மானிப்பதற்காக அனுப்பப்பட்டார்கள். ஆனால்,

இர்வின் பிரபு

அந்தக் கமிஷனில் ஓர் இந்தியரேனும் நியமிக்கப்படாததால், தேசீய வாதிகள் அதனுடன் ஒத்துழைப்பதில்லை என்று தீர் மானித்தார்கள். சைமன் கமிஷன் இந்தியாவுக்கு வந்த பொழுது அதைப் பகிஷ்காரம் செய்யவேண்டுமென்று அவர் கள் கிளர்ச்சி செய்தார்கள். பல பிரபல இந்தியர்களும், அரசி யல் நிர்வாகத்தில் நல்ல அனுபவமுள்ள பல பிரமுகர்களும், சைமன் கமிஷன் முன்பு தங்கள் அபிப்பிராயங்களைத் தெரி விக்க மறுத்தார்கள். இந்தியர்களில் சிறுபான்மையோரே கமி ஷனுடன் ஒத்துழைத்தனர். ஆயினும், அந்தக் கமிஷன் சில மாதங்கள் இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்து, அரசியல் முறை நடைபெறும் விதங்களைப்பற்றி விசாரணைகள் செய்து விட்டு இங்கிலாந்து சென்று, கி. பி. 1930ல் ஓர் அறிக்கை வெளியிட்டது. இர்வின் பிரபு இங்கிலாந்துக்குச் சென்று இந்தி யாவின் உண்மையான நிலைமையை ஆங்கில அரசாங்கத் தாருக்கு எடுத்துக் கூறினார். அக்காலத்தில் இங்கிலாந்தில் பிரதம மந்திரியாராயிருந்த **ராம்ஸே மாக்டொனல்டு** இந்தியர் களுக்கு எத்தகைய அரசியல் கொடுக்கலாம் என்பதை நிர்ண யிக்க ஒரு **வட்டமேஜை மகா நாட்டைக்** கூட்டினார். அம்மகா நாட்டின் பிரதிநிதிகள் ஒரு வட்டமான மேஜையைச் சுற்றிச் சமத்துவமாய் அமர்ந்து ஆலோசனைகள் நடத்தியதால், அக் கூட்டத்திற்கு வட்டமேஜை மகா நாடு என்ற பெயர் ஏற்பட் டது. இந்தியாவிலுள்ள பல கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதி களும், சில சுதேசமன்னர்களும், பிரிட்டிஷ் பிரதிநிதிகளும் அந்த மகா நாட்டிற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். கி. பி. 1929ல் இலாகூரில் பண்டித மோதிலால் நேருவின் குமாரர் **பண்டித ஜவஹர்லால் நேருவின்** தலைமையில் கூடிய காங்கிரஸ் மகாசபையார் பூரணசுதந்திரம் பெறுவதுதான் இந்தியரின் நோக் கம் என்று தீர்மானித்திருந்தனர். ஆகையால், காங்கிரஸ் தலைவர்கள் இர்வின் பிரபுவைச் சந்தித்து, கனடா, ஆஸ்திரேலியா

போன்ற குடியேற்ற நாடுகளுக்குக் கொடுக்கப்பட்ட அரசியல் சுதந்திரம் இந்தியாவுக்கும் கொடுப்பதாக வாக்களித்தால் தாங்கள் வட்டமேஜை மகா நாட்டில் கலந்துகொள்ளுவதாகத் தெரிவித்தார்கள். அங்கிலேய துரைத்தனத்தார் அதற்குச்சம்மதியாததால் காங்கிரஸ் மகாசபை வட்ட மேஜை மகா நாட்டில் கலந்துகொள்வதில்லை என்றும், இந்தியா பூரண சுதந்திரம் பெறுவதற்கு வேண்டிய வழிகளைத் தேட வேண்டுமென்றும் தீர்மானித்தது. ஆகவே, கி. பி. 1930ல் மகாத்துமா காந்தி **உப்புச் சத்தியாக்கிரஹம்** என்ற பெயரையுடைய சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பித்தார். அரசாங்க சட்டத்தை மீறி உப்புத் தயாரிப்பதற்காகக் காந்திஜீ **தண்டி** என்ற இடத்திற்குச் சென்றார். அவரைப் பின்பற்றி நாட்டின் பல பாகங்களிலும் ஜனங்கள் சட்டத்தை மீறி உப்புக் காய்ச்ச ஆரம்பித்தார்கள். துரைத்தனத்தார் மறுபடியும் மகாத்துமா காந்தியைக் கைது செய்து எரவாடா ஜெயிலில் சிறை வைத்தனர். ஆயிரக் கணக்கான தொண்டர்களும் தலைவர்களும் சிறை சென்றார்கள். இந்த இயக்கத்தை அடக்குவதற்குப் பல அவசரச் சட்டங்களையும் விசேஷ அதிகாரங்களையும் அரசாங்கத்தார் உபயோகித்தனர்.

முதலாவது வட்ட மேஜை மகாநாடு 1930-ஆம் ஆண்டு செப்டம்பர்மாதம் முதல் 1931-ஆம் ஆண்டு ஜனவரிமாதம்வரையில் இலண்டன்மா நகரில் நடைபெற்றது. காங்கிரஸ் கட்சியினரைத் தவிர இந்தியாவிலுள்ள மற்றக்கட்சியினர்களெல்லாம் அந்த மகா நாட்டில் கலந்துகொண்டனர். அதில் இந்தியாவில் ஐக்கிய அரசியல் ஏற்படுத்த வேண்டுமென்பதும், இந்தியாவுக்கு மாகாணச் சுயாட்சி கொடுக்கவேண்டுமென்பதும் தீர்மானிக்கப்பட்டன.

அதன் பிறகு இர்வின் பிரபு இந்திய அரசியல் நிர்ணயம் செய்வதற்குக் காங்கிரஸ் பிரதிநிதிகளும் வட்டமேஜை மகாநாட்

டில் கலந்துகொள்வது அவசியம் என்பதை உணர்ந்து மகாத்துமா காந்தியையும், மற்றும் காங்கிரஸ் தலைவர்களையும் விடுதலை செய்தார். அதன்பிறகு கி. பி. 1931-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் மகாத்துமா காந்தியைத் தம்மிடம் வரவேற்று அவருடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார். அதற்குக் **காந்தி-இர்வின் ஒப்பந்தம்** என்பது பெயர். அதனால், காங்கிரஸ் தலைவர்கள் வட்ட மேஜை மகா நாட்டில் கலந்துகொண்டு காங்கிரஸ் மகா சபையின் கோரிக்கைகளை எடுத்துரைக்க வேண்டுமென்றும், சட்ட மறுப்புக் காரணமாகச் சிறையிலடைபட்டவர்களை அரசாங்கத்தார் விடுவித்துவிட வேண்டுமென்றும், சட்ட மறுப்பு இயக்கம் நிறுத்தப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டன. காங்கிரஸ் மகாசபையார் அமைதியான முறையில் மது விலக்கு, கதர் அபிவிருத்தி சம்பந்தமான பிரசாரங்களைச் செய்து வரலாமென்றும், ஏழைகள் வரியில்லாமல் தங்கள் உபயோகத்துக்கு வேண்டிய உப்பைக் காய்ச்சி எடுத்துக்கொள்ளலாமென்றும் கூறினர். காங்கிரஸ் மகாசபை கூடி மகாத்துமா காந்தியைக் காங்கிரஸ் சபையின் ஒரே பிரதிநிதியாக அனுப்பத் தீர்மானித்தது. இந்தச் சமயத்தில் இர்வின் பிரபு இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றார்.

வில்லிங்டன் பிரபு (கி. பி. 1931–36) இர்வின் பிரபுவுக்குப் பின் வில்லிங்டன் பிரபு வைஸ்ராயாய் வந்தார். அவர் ஏற்கெனவே சென்னை மாகாணக் கவர்னராயிருந்தவர். அவர் காலத்தில் கி. பி. 1931-ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் லண்டன் நகரில் **இரண்டாவது வட்ட மேஜை மகா நாடு** நடைபெற்றது. மகாத்துமா காந்தி காங்கிரஸ் மகா சபையின் ஏகப்பிரதிநிதியாக இங்கிலாந்திற்குச் சென்று, மகா நாட்டில் கலந்துகொண்டார்; அங்கே காங்கிரஸ் மகா சபையின் கோரிக்கைகளைத் தெளிவாக எடுத்துரைத்தார்; குடியேற்ற நாடுகள் அனுபவித்து வரும் முழுச் சுயேச்சையும் இந்தியாவிற்கும் அளிக்

கப்படவேண்டும் என்று வற்புறுத்தினர். எவ்வளவு சொல்லியும் திருப்திகரமான முடிவு ஒன்றும் ஏற்படவில்லை. மகாத்துமாகாந்தி இந்தியாவுக்குத் திரும்பியதும் வைஸ்ராயைக் கண்டு பேச அனுமதி கோரினர். வில்லிங்டன் பிரபு அவருக்குப் பேட்டியளிக்க மறுத்துவிட்டார். மறுபடியும் சட்ட மறுப்பு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. மகாத்துமா காந்தி சிறையிலடைக்கப்பட்டார். மற்றும் பல காங்கிரஸ் தலைவர்களும், தொண்டர்களும் சிறையிலடைக்கப்பட்டார்கள். வில்லிங்டன் பிரபு அடக்குமுறைகளைக் கையாண்டு கிளர்ச்சியை அடக்கமுயற்சி செய்தார். அதனால், நாடெங்கும் குழப்பம் ஏற்பட்டது. இந்த நிலைமையில் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் லண்டன் நகரில் கி. பி. 1932ல் **மூன்ருவது வட்டமேஜை மகா நாட்டைக்** கூட்டினர்கள். அதில் காங்கிரஸ் தலைவர்கள் கலந்துகொள்ளவில்லை.



வில்லிங்டன் பிரபு

அந்த மகா நாட்டினர் முன் கூறப்பட்ட ஆலோசனைகளையெல்லாம் பரிசீலனை செய்து, இந்திய அரசியல் சம்பந்தமாக என்ன மாறுதல்கள் செய்யப்படவேண்டுமென்று முடிவான தீர்மானங்கள் செய்தனர். அந்த முடிவுகளை ஆதாரமாகக்கொண்டு **ஒரு புதிய இந்திய அரசியல் சட்டம்** கி. பி. 1935ல் பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்டது.

வில்லிங்டன் பிரபு காலத்தில் கி. பி. 1935-ஆம் ஆண்டில் **பீஹாரில்** ஒரு பெரிய **பூகம்பம்** ஏற்பட்டது. அதனால், பெருத்த உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டன. **பாபு ராஜேந்திர பிரசாத்** என்னும் தேசாபிமானி பூகம்பக் கஷ்ட நிவாரண நிதி

திரட்டி மக்களுக்குப் பேருதவி புரிந்து, அழியாப் புகழ்பெற்றூர். அரசாங்கத்தாரும் மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து உதவினுர்கள். சில மாதங்களுக்குள் குவெட்டா என்னுமிடத்தில் மற்ருெரு பூகம்பம் ஏற்பட்டது. கி. பி. 1935-ஆம் வருஷம் மே மாதம் ஐந்தாம் ஜார்ஜ் மன்னருடைய **முடிசூட்டு வெள்ளி விழா**, சாம்ராஜ்யம் எங்கும் நடைபெற்றது.

ஆரும் ஜார்ஜ் சக்கரவர்த்தியார்

லின்லித்கோ பிரபு

அதே வருஷம் டிசம்பர் மாதத்தில் **காங்கிரஸ் பொன்விழா** வைபவம் நாடெங்கும் கொண்டாடப்பட்டது. கி. பி. 1936-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் மரணமடைந்தார். அவருக்குப் பின் அவருடைய மூத்த மைந்தரான

எட்டாம் எட்வர்டு பட்டத்திற்கு வந்தார். அவர் தொழிலாளர் குடியானவர்களிடம் மிகவும் அனுதாபமுள்ளவர். அவர் கி. பி. 1936-ஆம் ஆண்டில் பட்டத்தைத் துறந்தார். அவரது இஷ்டம் போல **மிஸஸ் ஸிம்ஸன்** என்னும் சீமாட்டியை அவர் மணந்து கொள்ள மந்திரிகள் சம்மதியாதபடியால் அவர் அந்தப் பதவியைத் துறந்தார்; முடி துறந்த பின் **விண்ட்ஸர் கோமான்** என்னும் பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது. அவருக்குப் பின் அவரது இளைய சகோதரர் **ஆறும் ஜார்ஜ்** என்னும் பெயருடன் சிம்மாசனம் ஏறி இப்பொழுது ஆண்டு வருகிறார். அவரும் அவரது மனைவியாரான **எலிஸபெத்து மகாராணியா**ரும் ஜனங்களால் மிகவும் நேசிக்கப்பட்டு வருகின்றனர்.

வில்லிங்டன் பிரபு கி.பி. 1936-ஆம் ஆண்டு வேலையை விட்டுச் சென்றார். அவருக்குப் பின் தற்போது வைஸ்ராயாய் உள்ள **லின்லித்கோ பிரபு** அப்பதவியை மேற்கொண்டார். இவர் விவசாயிகளின் முன்னேற்றத்தில் மிகுந்த சிரத்தையுடையவர். இவர் காலத்தில் நம் நாட்டிற்கு விசேஷ நன்மைகள் ஏற்படுமென்று எதிர்பார்க்கிறோம்.

கேள்விகள் :

1. சைமன் கமிஷன் எப்பொழுது, எதற்காக நியமிக்கப்பட்டது?
2. 'வட்டமேஜை மகாநாடு' என்னும் பெயர் ஏற்படக்காரணமென்ன? எத்தனை வட்டமேஜை மகாநாடுகள் நடந்தன? எந்த மகாநாட்டில் மகாத்துமா காந்தி கலந்துகொண்டார்?
3. காந்தி-இர்வின் ஒப்பந்தம் எப்போது ஏற்பட்டது? அதன் நிபந்தனைகள் எவை?
4. வட்ட மேஜை மகாநாடுகள் கூடியதன் பயன் யாது?

20. 1935-ஆம் வருஷத்து இந்திய அரசியல் சட்டம்

வட்ட மேஜை மகாநாடுகளின் முடிவுகளை அடிப்படையாகக்கொண்டு 1935-ஆம் வருஷத்து இந்திய அரசியல் சட்டம் செய்யப்பட்டது. இச்சட்டத்தின்படி **பர்மா** இந்தியாவினின்றும் தனியாகப் பிரிக்கப்பட்டது. இந்திய மாகாணங்களின் தொகை ஒன்பதிலிருந்துபதினொன்று ஆக்கப்பட்டது. பீஹாரிலிருந்து **ஒரிஸ்ஸாவும்**, பம்பாயிலிருந்து **சிந்துவும்** பிரிக்கப்பட்டுத் தனி மாகாணங்கள் ஆயின. இவை தவிர, 6 சிறு மாகாணங்களும் சுமார் 700 சுதேச மன்னர்களால் ஆளப்படும் ராஜ்யங்களும் இருக்கின்றன. பிரிட்டிஷ் ஆளுகையின் கீழுள்ள மாகாணங்களையும், சேர விரும்பும் சுதேச மன்னர்களையும் ஒன்று சேர்த்து ஓர் **ஐக்கிய இந்திய அரசியல்** அல்லது **சமஷ்டித் துரைத்தன முறை** (Federation) யையும், மாகாணங்களில் சுய ஆட்சியையும் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் புதிய சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அந்த ஏற்பாட்டின்படி **மாகாணச் சுயாட்சி** மட்டும் தற்சமயம் நடந்து வருகிறது. சமஷ்டி அரசியல் இன்னும் அமுலுக்கு வரவில்லை. எனவே, மத்திய அரசாங்கம் மாண்டு-போர்டு திட்டத்தின்படியே நடந்து வருகிறது. **இந்திய சமஷ்டி அரசிய**லின்படி இந்திய அரசியலைக் கவனிப்பதற்கு இங்கிலாந்தில் **இந்தியா காரியதரிசி** என்ற மந்திரியும் அவருக்கு உதவியாக **இந்தியாகௌன்ஸில்** என்ற ஒரு சபையும் உண்டு. அதில் சில இந்தியர்களும் அங்கத்தினர்களாக நியமிக்கப்படுவார்கள். **வைஸ்ராய்** சக்கரவர்த்தியாரின் பிரதிநிதியாய் இந்தியாவிலிருந்து ஆண்டு வருகிறார். வைஸ்ராய்தான் இந்திய சமஷ்டியின் தலைவராவர்.

சமஷ்டி விவகாரங்களைக் கவனிப்பதற்கு இரண்டு சட்ட சபைகள் இருக்கும். ஒன்று ராஜாங்க சபை (council of state);

மற்ருென்று ஜனப் பிரதிநிதி சபை (House of Assembly). ராஜாங்க சபை ஏழு வருஷங்களும், ஜனப்பிரதிநிதி சபை ஐந்து வருஷங்களும் வேலே பார்த்து வரலாம். ராஜாங்க சபையின் மொத்த அங்கத்தினர்கள் 260 பேர்கள். அவர்களில் 150 பேர் பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்தும், 100 பேர் சுதேச மன்னர்களின் ராஜ்யங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். 10 அங்கத்தினர்களேக் கவர்னர் ஜெனரல் நியமனம் செய்யலாம். சுதேச ராஜ்யங்களின் பிரதிநிதிகள் அரசர்களால் நியமிக்கப்படுவார்கள். ஜனப்பிரதிநிதி சபையில் மொத்தம் 325 அங்கத்தினர்கள் இருப்பார்கள். அவர்களில் 125 பேர் சுதேச மன்னர்களின் பிரதிநிதிகள். அவர்களே ஜனங்களே நேராகத் தேர்ந்தெடுப்பதில்லே. மாகாணச் சட்ட சபைகளிலிருந்து வகுப்புவாரியாகப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

பதினெரு கவர்னர் மாகாணங்களிலும், சமஷ்டியில் அடங்கியிருக்க இசைந்த சுதேச மன்னர்களின் நாடுகளிலும், டில்லி, ஆஜ்மீர்–மெர்வாரா, குடகு, அந்தமான் நிக்கோபார்த் தீவுகள் ஆகிய பிரிட்டிஷ் ஆளுகையின் கீழுள்ள நாடுகளிலும் சமஷ்டித் துரைத்தனத்தின் அதிகாரம் நடைபெறும். பிரிட்டிஷ் பலுச்சிஸ்தானத்தை மட்டும் கவர்னர் ஜெனரல் தாமே நேரில் ஆட்சி செய்வார். தேசப்பாதுகாப்பு, இராணுவம், அயல்நாட்டு உறவு, மதவிஷயங்கள் ஆகிய இவற்றைக் கவர்னர் ஜெனரல் தாமே நேரில் கவனித்து வருவார். இவற்றின் நிர்வாகத்தில் தமக்கு உதவியாக மூன்று பேர்களுக்கு மேற்படாதபடி உத்தியோகஸ்தரை நியமித்துக்கொள்ளலாம். இவற்றைத்தவிர இதர அரசியல் விஷயங்களேப் பரிபாலனம் செய்ய **ஒரு மந்திரி சபை** அமைக்கப்படும். சமஷ்டி சட்ட சபைகளில் எக்கட்சியார் பெரும்பான்மையோராய் இருக்கின்றனரோ, அக்கட்சியினின்று வைஸ்ராய் மந்திரிகளே நியமித்துக்கொள்வார்.

இந்தியா முழுவதுக்கும் பொதுவான தந்தி, தபால், இருப்புப் பாதை, ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம், வருமானவரி போன்ற விஷயங்கள் சமஷ்டி அரசாங்கத்தின் மந்திரிகளின் நிர்வாகத்தில் இருக்கும். இந்தியா முழுமைக்கும் சட்டம் செய்யவும், வரி விதிக்கவும் இச்சட்ட சபைகளுக்கு அதிகாரமுண்டு. இச்சபைகளால் செய்யப்படும் சட்டதிட்டங்கள் கவர்னர் ஜெனரல் ஒப்புக்கொண்ட பிறகுதான் அமுலுக்குக் கொண்டுவரப்படும். எந்தச் சட்டத்தையும் மாற்றவும் தள்ளவும், புதிய சட்டங்கள் கொண்டு வரவும் வைஸ்ராய்க்கு அதிகாரம் உண்டு. பொருளாதார விஷயங்களில் ஆலோசனை கூறுவதற்கு ஒரு **பொருளாதாரநிபுணரை** வைஸ்ராய் நியமித்துக்கொள்ளலாம். மந்திரிகள் எந்தச் சபையின் அங்கத்தினரோ, அச்சபையிலேதான் பேசவும் 'ஓட்டு'ச்செய்யவும் கூடும். மற்றொரு சபையில் பேசலாமேயன்றி 'ஓட்டு'ச் செய்யக்கூடாது. வைஸ்ராயால் நியமனம் செய்யப்பட்ட மூன்று உத்தியோகஸ்தர்களும் இரு சபைகளிலும் அங்கத்தினர்களாகக் கருதப்படுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு 'ஓட்டு' உரிமை இல்லை.

மாகாணங்கள், சுதேச மாகாணங்கள், மத்திய அரசாங்கம் இவற்றுள் ஏற்படும் தகராறுகளைத் தீர்த்துவைக்கவும், சட்ட சபைகள் நிறைவேற்றும் சட்டங்களின் நியாயத்தை வரையறை செய்யவும், மாகாண ஹைகோர்ட்டுகளிலிருந்து வரும் அப்பீலை விசாரணை செய்யவும் **சமஷ்டி நியாய ஸ்தலம்** (Federal Court) ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் பொருளாதார நிலைமையைப் பலப்படுத்துவதற்காக **ரிசர்வ் பாங்கி** என்னும் அரசாங்க பாங்கி ஏற்படுத்தப்பட்டது. நாணயங்களுக்குப் பதிலாக வழங்கும் கரன்ஸி நோட்டுகள் ரிசர்வ் பாங்கியாரால் அச்சிடப்படுகின்றன. 1935-ஆம் வருஷத்து அரசியல் திட்டத்தின்படி **சமஷ்டி அமைப்பு**

இன்னும் ஏற்படவில்லை. சமஷ்டி முறை மாண்டேகு-செம்ஸ் போர்டு சீர்திருத்தப்படி மாகாணங்களில் நடந்த இரட்டை ஆட்சி போன்று இருப்பதால், அதை இந்தியாவில் எந்தக் கட்சியாரும் ஒப்புக்கொள்ளவில்லை. சுதேச மன்னர்களும் அதில் சேரும் விஷயத்தில் அதிக ஊக்கங் கொள்ளவில்லை. ஏனெனில், அவர்கள் சமஷ்டியில் சேரும்போது தங்கள் அதி காரத்தில் அடங்கிய சில விஷயங்களைச் சமஷ்டித் துரைத் தனத்திற்கு மாற்றிவிட இசைய வேண்டும். இவற்றிற் கிடையில் ஐரோப்பாவில் மறுபடியும் யுத்தம் ஏற்பட்டுவிட்ட தால், சமஷ்டி அரசியல் ஏற்படுத்துவது தள்ளி வைக்கப்பட் டுள்ளது.

மாகாணச் சுய ஆட்சி: கி. பி. 1937-ஆம் வருஷம் ஏப்பிரல் மாதம் தொடங்கி மாகாணச் சுயாட்சி மாத்திரம் புதிய சீர்திருத் தச் சட்டத்தையொட்டி நடைபெறுகின்றது. புதிய சட்டப்படி பிரிட்டிஷ் இந்தியா பதினொரு மாகாணங்களாகப் பிரிக்கப்பட் பட்டுள்ளது. அவை வருமாறு: (1) சென்னை, (2) பம்பாய், (3) வங்காளம், (4)ஐக்கிய மாகாணங்கள், (5)பீஹார், (6) அஸ் ஸாம், (7) சிந்து, (8)பஞ்சாபு, (9)வடமேற்கு எல்லைப்புற மாகா ணம், (10) மத்திய மாகாணம், (11) ஒரிஸ்ஸா. இவற்றுள் ஒவ் வொன்றும் ஒரு கவர்னருடைய நிர்வாகத்திற்குள் இருக்கும். கவர்னருக்கு உதவியாக ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரு மந் திரி சபை அமைக்கப்படும். அந்த மந்திரிகள் பல இலாக்காக் களுக்குத் தலைமை அதிகாரிகளாய் இருந்து, மாகாண அரசாங் கத்தை நடத்தி வருவார்கள்.

சென்னை, பம்பாய், வங்காளம், ஐக்கிய மாகாணங்கள், பீஹார், அஸ்ஸாம் ஆகிய ஆறு மாகாணங்களில் இரண்டு சட்ட சபைகளும்; மற்ற ஐந்து மாகாணங்களில் ஒரு சட்ட சபையும் அமைக்கப்பட்டிருக்கின்றன. சட்ட சபை அங்கத்தினர்களின் தொகை அந்தந்த மாகாணத்தின் ஜனத்தொகையைப் பொறுத்

தது. நம் சென்னை மாகாணத்தில் **லெஜிஸ்லேட்டிவ் கௌன்சில்** என்னும் மேல் சபையும், **லெஜிஸ்லேட்டிவ் அஸெம்பிளி** என்னும் கீழ்ச் சபையும் உண்டு. ஒரே சபை உள்ள மாகாணங்களில் மேல் சபை என்பது இல்லை. சென்னை மாகாணத்தின் மேல் சபையில் 56க்கு மேற்படாத அங்கத்தினர்கள் உண்டு. அவர்களில் 46 பேர் அதிக வரி கொடுக்கும் ஜனத்தொகுதியினரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். மற்றவரில் எட்டு அல்லது பத்துப் பேர் கவர்னரால் நியமனம் செய்யப்பட்டவர். கீழ்ச் சபையில் மொத்தம் 215 அங்கத்தினர்கள் உண்டு. அவர்கள் எல்லோரும் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள். நியமன அங்கத்தினர்களே இந்தச் சபையில் இல்லை. இந்த 215 அங்கத்தினர்களில் 152 அங்கத்தினர்கள் பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அவர்களுள் தாழ்ந்த வகுப்புப் பிரதிநிதிகள் முப்பது பேரும், ஸ்திரீகள் ஆறு பேரும் ஆவர். மற்றைய 63 பேர் தனி வாக்காளர்கள் தொகுதிகளினின்று கீழ்க்காணுமாறு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்:

முஸ்லீம்களின் பிரதிநிதிகள்	29
இந்திய கிறிஸ்தவர் பிரதிநிதிகள்	9
நிலச்சுவான்தார் பிரதிநிதிகள்	6
வியாபாரிகளின் பிரதிநிதிகள்	6
தொழிலாளரின் பிரதிநிதிகள்	6
ஐரோப்பியரின் பிரதிநிதிகள்	3
ஆங்கிலோ - இந்தியர் பிரதிநிதிகள்	2
சர்வ கலாசாலைப் பிரதிநிதி	1
பிற்போக்கான பிரதேசங்களின் பிரதிநிதி	1
ஆகமொத்தம்	63

மாண்ட் - போர்டு திட்டத்தில் 100க்கு 3 பேர்தாம் ஓட்டுரிமை பெற்றிருந்தனர். புதிய சட்டத்தின்படி 100க்குப் 14 பேர் அந்த உரிமை பெற்றிருக்கின்றனர். 18 வயதுக்கு மேற்பட்ட எழுதப்படிக்கத் தெரிந்தவர்களுக்கும் ஏதாவது வரி கொடுப்போர் யாவருக்கும் ஓட்டுரிமை உண்டு.

சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகளில் பெரும்பான்மை அங்கத்தினர்களைக் கொண்ட கட்சியின் தலைவரைக் கவர்னர் மந்திரி சபை அமைக்கும்படி கேட்டுக்கொள்ளுவார். பெரும்பான்மைக் கட்சியின் தலைவரே அனேகமாகப் பிரதம மந்திரியாராய் இருப்பார். அவர் தம் கட்சியிலிருந்து தகுதியுள்ளவர்களைத் தெரிந்தெடுத்துமந்திரிசபை அமைப்பார். சிற்சில கட்சிகள் ஒன்று கூடிக் **கூட்டு மந்திரி சபை** அமைப்பதும் உண்டு. மேல் சபை அங்கத்தினரும் மந்திரியாக நியமிக்கப்படலாம். மாண்ட் - போர்டு திட்டத்தின்படி மாகாணங்களில் ஏற்பட்ட இரட்டையாட்சி ஒழிக்கப்பட்டு, மாகாண சம்பந்தமான எல்லாக் காரியங்களையும் மந்திரி சபையாரே கவனித்து நடத்திவருகின்றனர். சட்டசபைகளுக்கு அக்கிராசனர் **(ஸ்பீக்கர்)**, உப அக்கிராசனர் (**டிப்டி ஸ்பீக்கர்**) என்பவர்களை அங்கத்தினர்கள் தேர்ந்தெடுத்துக்கொள்ளுவார்கள். இவர்களுக்குச் சம்பளம் உண்டு. மந்திரிகளும் சம்பளம் பெறுகின்றனர். ஸ்பீக்கரின் தலைமையின்கீழ்ச் சட்டசபைக் கூட்டங்கள் நடைபெறும். புதிய வரி விதித்தல், வரிகளைக் குறைத்தல், புதிய சட்டங்களைச் செய்தல் ஆகிய வேலைகளைச் சட்டசபைகள் செய்யலாம். கீழ்ச்சபையில் நிறைவேறிய தீர்மானங்கள் மேல் சபைக்கு அனுப்பப்படவேண்டும். மேல் சபைக்கு அவற்றை மாற்றவும் தள்ளவும் அதிகாரமுண்டு. அவ்வாறு மாற்றப்பட்ட தீர்மானங்கள் மறுபடியும் கீழ்ச்சபைக்கு அனுப்பப்படும். இரண்டு சபைகளுக்கும் தகராறு இருந்தால், இரண்டு சபைகளும் சேர்ந்து ஒன்றாக அமர்ந்து, 'ஓட்டு' எடுத்து முடிவு

செய்யும். ஆனல், எந்தத் தீர்மானமும் கவர்னரின் அங்கீகாரம் பெற்ற பின்னரே சட்டமாகி அமுலுக்கு வரும். மந்திரிகளின் செய்கைகள் அங்கத்தினர்களுக்குப் பிடிக்காவிட்டால், அவர்களின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து, அவர்களைப் பதவியிலிருந்து நீக்கவும், சட்ட சபைக்கு அதிகாரம் உண்டு. மாகாணச் சட்டசபைகளைக் கூட்டவும், ஒதுக்கிவைக்கவும், கலைக்கவும் கவர்னர் அதிகாரம் பெற்றுள்ளார்.

1935-ஆம் வருஷத்து இந்தியா சட்டத்தின்படி 1937-ஆம் ஆண்டு மாகாணச் சட்ட சபைகளுக்குத் தேர்தல்கள் நடந்தன அத்தேர்தல்களில் காங்கிரஸ் கட்சியினரே ஏழு மாகாணங்களில் பெரும்பான்மையான ஸ்தானங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அதனல், அந்தந்த மாகாணங்களில் அவர்களே மந்திரி சபை அமைத்து ஆட்சி வேலைகளில் குறுக்கிட்டுத் தங்களுடைய விசேஷ அதிகாரங்களை உபயோகிப்பதில்லை என்று உறுதி கொடுத்தாலொழிய, ஆட்சிப் பொறுப்பை ஏற்க மறுத்தனர். ஆதலால், சில மாதங்கள் வரையில் கவர்னர்கள் சில மந்திரிகளை நியமனம் செய்து, சட்டசபையைக் கூட்டாமலே துரைத்தனத்தை நடத்தி வந்தார்கள்.

பின்னர் அந்தந்த மாகாணக் கவர்னர்களும் காங்கிரஸ் தலைவர்கள் கோரியபடி உறுதி கொடுக்க இசைந்தனர். ஆகவே கி.பி. 1938-ஆம்ஆண்டு ஜூலைமாதம் காங்கிரஸ்கட்சியார்பெரும்பான்மையோராய் இருந்த ஏழு மாகாணங்களிலும் மந்திரி சபையை அமைத்து, ஆட்சிப் பொறுப்பை ஏற்றனர், மற்ற மாகாணங்களில் ஆங்காங்கேயுள்ள மற்றப் பெரும்பான்மைக் கட்சியிலிருந்து மந்திரி சபைகள் அமைக்கப்பட்டன.

இவ்வாறு அமைந்த மந்திரி சபையார் நாட்டிற்குப் பல அபிவிருத்திகளைச் செய்ய முன் வந்தார்கள். மந்திரிகள் சிக்கன, முறைகளைக் கைக்கொண்டு, முதலில் தங்கள் சம்பளத்தை

ரூ. 500 ஆகக் குறைத்துக்கொண்டார்கள். நமது சென்னை மாகாணத்தில் பத்து மந்திரிகள் கொண்ட மந்திரி சபை அமைக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சியின் தலைவர் **சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார்** பிரதம மந்திரியானுர். காங்கிரஸ் மந்திரிகள் காங்கிரஸ் மகாசபையின் கொள்கைகளையும் நோக்கங்களையும் அனுசரித்து, நாட்டின் முன்னேற்றத்திற்கான பல சீர்திருத்தங்களையும் செய்தார்கள். விவசாயிகளின் கடன் நிவாரண மசோதா, மதுவிலக்குத் திட்டம், பொதுச் சுகாதாரச் சட்டம் போன்ற பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. கைத்தொழில் முன்னேற்றத்துக்காகவும் சில ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்த நிலையில் கி. பி. 1939-ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் ஐரோப்பாவில் இங்கிலாந்துக்கும் ஜெர்மனிக்கும் ஒரு பெரிய யுத்தம் ஆரம்பமாகி, இப்பொழுதும் நடந்து வருகிறது. இந்த யுத்தத்தில் காங்கிரஸ் மந்திரிகளைக் கலந்து ஆலோசியாமல் இந்தியா சம்பந்தப்படுத்தப்பட்டதால், காங்கிரஸ் மந்திரி சபையார் தங்கள் பதவிகளை ராஜிநாமா செய்தார்கள். ஆகவே, காங்கிரஸ் மந்திரி சபை ஏற்பட்டிருந்த மாகாணங்களில் கவர்னர்கள் **அட்வைசர்கள்** என்று சொல்லப்படும் ஆங்கில உத்தியோகஸ்தர்களின் ஆலோசனையின்பேரில் அரசாட்சி நடத்தி வருகிறுர்கள்.

பிரிட்டிஷ் பார்லிமெண்டார் யுத்த நெருக்கடி காரணமாக இந்திய அரசியலின் சர்வாதிகாரத்தையும் வைஸ்ராய்க்கு அளித்திருக்கிறுர்கள். வைஸ்ராயின் நிர்வாக சபை அங்கத்தினர்களின் தொகை அதிகரிக்கப்பட்டு, அவர்களில் பெரும்பான்மையோர் இந்தியர்களாகவே நியமிக்கப்பட்டிருக்கிறுர்கள். அவர்களுடைய ஆலோசனையின்பேரில் வைஸ்ராய் இந்திய அரசாட்சியை நடத்தி வருகிறுர்.

காங்கிரஸ் மகாசபை யுத்தம் முடிந்தபின் இந்தியாவுக்குச் சுய ஆட்சி அளிப்பதாக வாக்களிக்க வேண்டுமென்றும், தற்

காலிகமாக மாகாணச் சட்ட சபைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகளிடம் வைஸ்ராய் இந்திய அரசியலின் நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டுமென்றும், அவ்விதம் செய்யும் பக்ஷத்தில் யுத்தத்திற்கு உதவி செய்வதாகவும் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரிடம் தெரிவித்துக்கொண்டது. பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்தக் கோரிக்கைகளை ஒப்புக்கொள்ளாததால், இந்திய மக்கள் ஆங்கிலேயருடைய போர் முயற்சிகளில் ஒத்துழைக்கலாகாது என்று காங்கிரஸ் மகாசபை கிளர்ச்சி செய்து வருகிறது. அதனால், மகாத்துமா காந்தியும், மற்றும் பல தேசீயத்தலைவர்களும் **இந்தியப் பாதுகாப்புச்** சட்டத்தின்படி சிறை செய்யப்பட்டு வருகின்றனர்.

ஐரோப்பிய **உலக மகா யுத்தம்** உலகத்தின் பல பாகங்களுக்கும் பரவி, மும்முரமாய் நடந்து வருகிறது. இறைவனருளால் யுத்தம் சீக்கிரத்தில் முடிவடைந்து, உலகில் அமைதியும், நல்வாழ்க்கையும் ஏற்படவேண்டுமென்று பிரார்த்திப்போமாக!

கேள்விகள்:

1. சமஷ்டி அரசியல் திட்டத்தைப்பற்றிய விவரம் யாது?
2. இத்திட்டம் இந்தியருக்கு ஏன் திருப்தியை அளிக்கவில்லை?
3. மாகாணச் சுய ஆட்சி எப்படி ஏற்படுத்தப்பட்டது?
4. காங்கிரஸ் மந்திரி சபையார் தம் பதவிகளை ராஜிநாமா செய்யக் காரணமென்ன?
5. இப்போது இந்திய அரசியல் நிர்வாகமும், மாகாண அரசியல் நிர்வாகமும் எவ்வாறு நடைபெறுகின்றன?
6. குறிப்பெழுது:—(1) சமஷ்டி நியாயஸ்தலம், (2) ரிஸர்வ் பாங்கி.

21. முக்கிய நிகழ்ச்சிகள்

கி. பி. 1772.	வாரன்ஹேஸ்டிங்ஸ் கவர்னர்
,, 1773.	ரெகுலேட்டிங் ஆக்டு
,, 1774—86.	வாரன் ஹேஸ்டிங்ஸ்—முதல் கவர்னர் ஜெனரல்
,, 1786—93.	காரன்வாலிஸ் பிரபு
,, 1793—98.	ஸர் ஜான் ஷோர்
,, 1798—1805.	வெல்லெஸ்லி பிரபு
,, 1799.	நான்காவது மைசூர் யுத்தம்
,, 1802,	பஸ்ஸீன் உடன்படிக்கை
,, 1803.	இரண்டாவது மகாராஷ்டிர யுத்தம்
,, 1804—5.	மூன்ருவது மகாராஷ்டிர யுத்தம்
,, 1805—7.	ஸர் ஜார்ஜ் பார்லோ
,, 1813—23.	ஹேஸ்டிங்ஸ் பிரபு
,, 1814—16.	நேப்பாள யுத்தம்
,, 1817.	பிண்டாரி யுத்தம்
,, 1817—18.	நான்காவது மகாராஷ்டிர யுத்தம்
,, 1823—28.	ஆம்ஹர்ஸ்ட் பிரபு
,, 1824—26.	முதல் பர்மா யுத்தம்—யாண்டபூ உடன்படிக்கை
,, 1828—35.	வில்லியம் பெண்டிங்கு பிரபு
,, 1829	சககமனம் நிறுத்தப்பட்டது
,, 1831.	மைசூரின் ஆட்சியை ஆங்கிலேயர் மேற்கொண்டது
,, 1833.	சாஸனப் பத்திரம் புதுப்பிக்கப்படுதல்—கம்பெனியார் இந்திய வர்த்தக உரிமையை இழத்தல்
,, 1834.	குடகு இணைக்கப்பட்டது

கி. பி. 1835.	ஆங்கிலக் கல்வி ஆரம்பம்
,, 1835—36.	ஸர் சார்லஸ் மெட்காப் கவர்னர் ஜெனரல்
,, 1936—42.	ஆக்லண்டு பிரபு
,, 1839—42.	முதல் ஆப்கானிய யுத்தம்
,, 1842—44.	எல்லன்பரோ பிரபு
,, 1843.	சிந்து மாகாணம் இணைக்கப்பட்டது
,, 1844—48.	ஹார்டிஞ்சு பிரபு
,, 1845.	முதல் சீக்கிய யுத்தம்—இலாகூர் உடன்படிக்கை
,, 1848—56.	டல்ஹௌஸி பிரபு
,, 1849.	இரண்டாவது சீக்கிய யுத்தம்—பஞ்சாபு மாகாணம் இணைக்கப்பட்டது
,, 1852.	இரண்டாவது பர்மா யுத்தம்—பெகு இணைக்கப்பட்டது
,, 1853.	முதன்முதலாக இரயில் பாதையும் தந்தியும் போடப்பட்டன
,, 1856.	அயோத்தி இணைக்கப்பட்டது
,, 1856—58.	கானிங்கு பிரபு கவர்னர் ஜெனரல்
,, 1857—58.	பெரிய சிப்பாய் கலகம்
,, 1858.	மகாராணியாரின் சாஸனம் — கம்பெனி ஆட்சியின் முடிவு
,, 1858—62.	கானிங்கு பிரபு முதல் வைஸ்ராய்
,, 1862—63.	எல்ஜின் பிரபு
,, 1865.	ஒரிஸ்ஸாவில் பஞ்சம்
,, 1864—69.	ஸர் ஜான் லாரன்ஸ்
,, 1869—72.	மேயோ பிரபு
,, 1872—76.	நார்த்புரூக்குப் பிரபு
,, 1876—80.	லிட்டன் பிரபு
,, 1878—81.	இரண்டாவது ஆப்கானிய யுத்தம்
,, 1880—84.	ரிப்பன் பிரபு
,, 1883	ஸ்தல சுயாட்சிச் சட்டம்

கி. பி. 1884—88.	டப்ரின் பிரபு
,, 1885.	இந்தியன் நாஷனல் காங்கிரஸ் ஸ்தாபிக்கப்பட்டது-மூன்ருவது பர்மா யுத்தம்—வடபர்மா இணைக்கப்பட்டது
,, 1888—94.	லான்ஸ்டௌன் பிரபு
,, 1894—98.	எல்ஜின் பிரபு
,, 1899—1905.	கர்ஸன் பிரபு
,, 1901.	வடமேற்கு எல்லைப்புற மாகாணம் ஏற்பட்டது—ஏழாம் எட்வர்டு மன்னர் பட்டத்துக்கு வந்தது
,, 1904.	வங்காளப் பிரிவினை
,, 1905—10.	மிண்டோ பிரபு
,, 1909.	மிண்டோ-மார்லி சீர்திருத்தங்கள்
,, 1910—16.	ஹார்டிஞ்சு பிரபு
,, 1911.	ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் டில்லி விஜயம்
,, 1914—18.	ஐரோப்பிய மகா யுத்தம்
,, 1916—21.	செம்ஸ்போர்டு பிரபு
,, 1919.	மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள்—மூன்ரும் ஆப்கானிய யுத்தம்
,, 1921—26.	ரீடிங்கு பிரபு—ஒத்துழையாமை இயக்கம்
,, 1926—31.	இர்வின் பிரபு
,, 1927	ஸைமன் கமிஷன் இந்தியாவுக்கு வந்தது
,, 1931—36.	வில்லிங்டன் பிரபு
,, 1930—32.	சட்ட மறுப்பு இயக்கம்-வட்டமேஜை மகாநாடுகள்
,, 1935.	இந்திய அரசியல் சட்டம்

கி. பி. 1936.	எட்டாம் எட்வர்டு பட்டத்துக்கு வந்தது—ஆறும் ஜார்ஜ் மன்னர் சிம்மாசனம் ஏறியது—லின்லித்கோ பிரபு இந்திய வைஸ்ராய்
,, 1937.	மாகாணச் சுய ஆட்சி அமுலுக்கு வந்தது
,, 1939.	உலக மகா யுத்தம்—சட்ட மறுப்பு இயககம்

The B. N Press, Madras.